# Athichoodi Moral Stories

(Tamil Prose)

ஆத்திசூடி நீதிக்கதைகள்

Author:—

***R. Harihara Iyer,***

Tamil Pandit, Ambasamudram.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

Publisher:—

P. K. SREENIVASACHARIAR,

Tamil Pandit, Vellore.

---

Printed at the

SUNDARA VINAYAKAR PRESS,

VELLORE.

(1915)

## இதிஹாஸ புராண கதை, சரித்திரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருவானைக்காப்புராணம்; செய்யுள் திருவானைக்கா மான்மிய வசனத்துடன் ... | 2 | 0 |
| கம்பராமாயணம், சுந்தரகாண்டம்(செய்யுள்) வசனச்சுருக்கத்துடன் ... ... | 1 | 8 |
| அம்பைத்தலபுராணம் ... ... | 1 | 0 |
| ஆத்திசூடி நீதிகதைகள் ... ... | 0 | 8 |
| பிரகலாதாழ்வான் சரிதை ... ... | 0 | 6 |
| வில்லிபுத்தூரார் பாரதம், கிருஷ்ணன் தூது சர்க்கம் (செய்யுள்) (கவர்ன்மெண்டார் அங்கீகரித்தது) ... ... ... | 0 | 4 |
| மார்க்கண்டேய சரிதம் (கவர்ன்மெண்டார் அங்கீகரித்தது) ... ... ... | 0 | 4 |
| விசயத்தவசியும், சிவவேடனும் ... ... | 0 | 3 |
| இடைக்காடர் சரித்திரம், திருவள்ளுவர் சரித்திரம் (கவர்ன்மெண்டார் அங்கீகரித்தது) ... ... ... | 0 | 3 |
| தசரதராமசதகம் (செய்யுள்) ... ... | 0 | 3 |
| ஸ்ரீவாமனசரித்திரம் ... ... ... | 0 | 2 |
| நம்பாடுவான் சரித்திரம் ... ... | 0 | 2 |
| பிரணவப்பொருளறியாத பிரமன் ... | 0 | 1½ |

## இனிய கதை.

| | | |
|---|---|---|
| மரகதமணி ... ... ... | 1 | 0 |
| பஞ்சதந்திரவசனம், அரும்பதவுரையுடன் ... | 0 | 6 |
| ஷை உரையில்லாதது ... | 0 | 4 |
| முராஹரி ... ... ... ... | 0 | 5 |
| சம்பகமாலினி ... ... ... | 0 | 4 |
| குலசேகரன் ... ... ... | 0 | 4 |

[illegible]

# ஆத்திசூடி நீதிக்கதைகள்

([illegible])

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ[illegible] ஆர். ஹரிஹர [illegible]

[illegible]

---

[illegible]

[illegible] ஸ்ரீநிவாஸாசாரியரால்

[illegible]

சென்னை

[illegible] அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1915

[All rights reserved]

விலை [illegible] எட்டு.

1915

COPY RIGHT

BY

P. K. Sreenivasachariar,
Head Tamil Pandit,
*Voorhees College,*
**VELLORE.**

...ADHYAYA
Dr. U. V. ...THAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

# விஷயசூசிகை


| | |
|---|---|
| முகவுரை | பக்கம் |
| 1. "அறஞ்செய விரும்பு." | 1 |
| நீதிகதை—1 | |
| கர்ணன் (மஹாபாரதம்) | 2 |
| நீதிகதை—2 | |
| தபித்தாள் (பைபிள்) | 7 |
| 2. "ஆறுவது சினம்." | 9 |
| நீதிகதை—1 | |
| விசுவாமித்திரர் (இராமாயணம்) | 10 |
| நீதிகதை—2 | |
| விசுவாமித்திரர் (இராமாயணம்) | 12 |
| நீதிகதை—3 | |
| விசுவாமித்திரர் (அரிச்சந்திரோபாக்கியானம்) | 14 |
| நீதிகதை—4 | |
| பரசுராமர் (இராமாயணம) | 15 |
| நீதிகதை—5 | |
| ஸ்தேவான் (பைபிள்) | 17 |
| 3. "இயல்வது கரவேல்" | 19 |
| நீதிகதை—1 | |
| ததீசிமகாமுனிவர் (திருவிளையாடற்புராணம்) | 20 |
| நீதிகதை—2 | |
| குமணன் (புறநானூறு) | 24 |
| 4. "ஈவது விலக்கேல்." | 32 |
| நீதிகதை—1 | |
| மஹாபலி (கம்பராமாயணம்) | 33 |
| நீதிகதை—2 | |
| கர்ணன் (மஹாபாரதம்) | 42 |
| 5. "உடையது விளம்பேல்." | 50 |
| நீதிகதை—1 | |
| யயாதிமன்னன் (பாகவதம்) | 50 |

பக்கம்

6. "ஊக்கமது கைவிடேல்." 54

நீதிகதை—1

மார்க்கண்டேயர் (கந்தபுராணம்) 55

நீதிகதை—2

பகீரதன் (இராமாயணம்) 63

7. "எண்ணெழுத்திகழேல்." 68

நீதிகதை—1

நக்கீரர் (திருவிளையாடற்புராணம்) 68

நீதிகதை—2

சகதேவன் (மஹாபாரதம) 73

8. "ஏற்பதிகழ்ச்சி." 77

நீதிகதை—1

உக்கிரகுமாரபாண்டியன் (திருவிளையாடற் புராணம்) 78

9. "ஐயமிட்டுண்." 82

நீதிகதை—1

இடங்கழியாளர் (பெரியபுராணம்) 83

நீதிகதை—2

இளையான்குடிமாறநாயனர் (பெரியபுராணம்) 87

10. "ஒப்புரவொழுகு." 90

நீதிகதை—1

பஞ்சபாண்டவர், பகாசுரவதம். (மஹாபாரதம்) 90

11. "ஓதுவ தொழியேல்." 96

நீதிகதை—1

யாஜ்ஞவல்கியர் (மஹாபாரதம்) 97

12. "ஔவியம் பேசேல்." 100

நீதிகதை—1

துரியோதனன் (மஹாபாரதம்) 100

13. "அஃகஞ் சுருக்கேல்." 104

நீதிகதை—1

ஏலேலசிங்கர் (திருவள்ளுவர்சரித்திரம்) 104

...ADHYAYA
... V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

# முகவுரை

சிலகாலங்களுக்குமுன்வரையில் நமது நாட்டிலுள்ள பெரியோர் இரவில் உண்டபிறகும் விடியற்காலத்தும் தம் குழந்தைகளைப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு இதிஹாஸபுராணகதைகளை இலேசான வசனத்தால் அவர்கள் 'உம், உம்' என்று வெகுரஸமாய்க் கேட்டுக் களிக்கச் சொல்லிக்கொண்டுவந்ததான தினமுறைவழக்கமானது இப்பொழுது அடியோடு போய்விட்டதனாலும், இந்தக் காலத்துச் சிறுவர்கள் ஆங்கிலங் கற்பதிலேயே கற்றற்குரிய காலமுழுவதையுஞ் செலவிடுகின்றதனாலும், தற்காலத்திலுள்ள வித்தியார்த்திகளிற் பெரும்பாலோர்க்கும் நம் இதிஹாஸ புராணாதிகளிற் சிறிதுபாகமேனுந் தெரிந்துகொள்வதற்கு இடமில்லாமற்போய்விடுகின்றதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒருவாறு அறிந்திருக்கின்றோமென்று சொல்வதும், "காசிக்குப் போனான், காவடி கட்டினான்" என்பதுபோன்று, 'நுனிப்புல்மேய்ச்சலாய்' முடிவதன்றி, ஆழமுடையதாயிருப்பதில்லை. இவ்விஷயம் பற்பலசமயத்து மாணவர்களுக்கும் பொருந்துமென்பது ஒருதலை.

மாணவர்காள்! வித்தியார்த்திகளாகிய நீங்களே நம் முன்னோர்களின் சரித்திரங்கள் அடங்கிய இதிஹாஸம் புராணம் பைபிள் முதலியவைகளைக் கைவிடுவீர்களாயின், மற்று யார்தான் அவற்றை மதித்துப் போற்றுவர்? இதனினுங் குறைவானது ஒன்றுண்டா? இதனைக் கருதிச் சிலவேளைகளில் மனவருத்தப்படுவதும் உமக்கு அனுபவத்தில்

உள்ளதன்றோ? 'இந்தக் குறைப்பாட்டுக்கு என் நீங்கள் உள்ளாகவேண்டும்?' என்று ஒருவர் உம்மை வினவினால், அதற்கு நீங்கள், புராணாதிகளெல்லாம் மிகுவிஸ்தாரமாயிருக்கின்றனவென்றும், அவைகளை முறைப்படி ஓதி ஆராய்ச்சிசெய்யப் போதிய காலத்தைச் செலவிடுதற்கியலவில்லையெனவும், அதனாலேயே இக்குறைப்பாட்டுக்குள்ளானோமென்றும் சொல்வீர்களேயன்றி வேறென்னசொல்வீர்கள்?

இதனை உணர்ந்த அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, T. S. ஸதாசிவ ஐயரவர்கள் B.A, L.T முதலிய மதாபிமானிகளும் பாஷாபிமானிகளுமாகிய அறிஞர் சிலர், இக்குறை உம்மை விட்டு அகலும்பொருட்டுப் புராணாதிகளிற் பரந்து கிடக்கும் மனோஹரமான சரித்திரங்களைக் கால தேசங்களுக்கு ஏற்றவாறு இனிய கௌரவமான தமிழ்நடையில் பெருக்கமும் சுருக்கமுமில்லாமல் எழுதித்தொகுத்தல் வேண்டுமென்று, எனது ஆருயிர் ஆப்தரும், அம்பைத்தலபுராணம்முதலிய அரிய பெரிய நூல்களை இயற்றிய வித்வத்சிரோமணியும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, ஹரிஹர ஐயரவர்களைப் பன்முறை அன்பு கூர்ந்து தூண்டினார்கள்.

பண்டிதரவர்களும் அவ்வுறுதிமொழிக்கு இணங்கி, நமது ஔவையாரால் இயற்றப்பட்ட ஆத்திசூடியென்னும் அரிய நூலிலுள்ள உயிர்வருக்கமுறையான "அறஞ்செய விரும்பு" முதலிய அமுதவாக்கியம் பன்னிரண்டோடு, "அஃகஞ் சுருக்கேல்" என்ற அரிய வாக்கியத்தையும் அதிகாரமாகக்கொண்டு, ஒவ்வொன்றிற்கும் ஏற்றவாறு, 'சுருங்கச்சொல்லல்,' 'விளங்கவைத்தல்' முதலிய அழகெல்லாம்

THIRUVANMIYUR, MADRAS-41.


இனிது விளங்க, சிறுசிறு வியாசங்களும், அவற்றின் கீழ் உதாரணமாகப் புராணம் இதிஹாஸம் பைபிள் முதலியவைகளிலிருந்து தேர்ந்தெடுத்து விளக்கிய கதைகளுமாக, மேற்குறித்த ஹெட் மாஸ்டர் முதலிய கனவான்கள் மனமொப்பிக் களிக்குமாறு தொகுத்தியற்றி, அத்தகைய நூலிற்கு ஆத்திசூடிநீதிகதைகள் என்ற பெயரும் புனைந்துவைத்தார்கள்.

ஆத்திசூடிநீதிகதைகளென்னும் இந்நூலில், எத்தனையோ மஹான்களுடைய திவ்யசரித்திரங்கள் அடங்கிக்கிடக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும், இனிமைதரும் சொற்றொடர்களாலாகிய செம்பாகமான தமிழ்நடையில் பூர்ணம் பெற்றிருக்கின்றது. உசிதவசனங்கள், பழமொழிகள், நீதி, ஈவு, இரக்கம், கொல்லாமை, பொறை, விடாமுயற்சி, கற்றல், கேட்டல், வாய்மை, கீர்த்தி, உலகநிலையாமை, யாக்கைநிலையாமைமுதலியஇம்மைமறுமைக்குரிய பல விஷயங்களையுங் கொத்துக்கொத்தாக இப்புத்தகத்திற் பல இடங்களிலுங் கண்டு களிக்கலாகும். ஆங்கிலங்கற்கும் மாணாக்கர்கள் மேல்வரிச்சட்டம்போல் முன்மாதிரியாகக் கொண்டு வியாசங்களெழுதிப் பழக இதுபோலுஞ் சிறந்த நூல் வேறொன்றிருப்பதாக இப்புத்தகத்தை முழுவதும் படித்துப்பார்த்தவரெவரும் கருதவேமாட்டார்களென்பது எமது கருத்து. அல்லாமலும், பொதுவாய்த் தமிழில் அறிவை விருத்திசெய்துகொள்ள நினைவார்க்கும், சிறிது காலத்துள் பெரிய புராணாதிகளிற் பல பாகங்களையுந் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்க்கும் இந்நூல் இன்றியமையாததாகுமென்பது, கற்றறிந்தோர் ஒருங்கே துணிந்த துணிபு.

இத்தகைய அருமைபெருமை வாய்ந்த ஆத்திசூடி நீதிகதைகள் என்னும் இந்நூல் இத்தமிழுலகத்திற்குப் பல விதத்திலும் நன்மைபயப்பதேயாமென மேதாவிகள் பலரும் ஒருங்கே துணிதலைக் கருதி, பண்டிதரவர்களிடத்தில் அந்நூலை யானே நேரிற் பெற்று அச்சிட்டு வெளிப் படுத்தலானேன். ஆதலால், யாவரும் இதனைப் பெற்று ஆதரிப்பதோடு, இனியும் இப்படிப்பட்ட நூல்களை வெளி யிடுவதற்கான ஊக்கமும் எனக்கு அளிக்குமாறு சகோ தரரான தமிழ்மக்களைப் பிரார்த்திக்கின்றேன்.

வேலூர்
1915ளு பிப்ரவரிமீ 20உ. } பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

கடவுள் துணை.

# ஆத்திசூடி

# நீதி கதைகள்

"அறஞ்செய விரும்பு."

இதன் பொருள், தருமஞ்செய்ய விருப்பங்கொள் என்பதாம்.

கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் தேடத்தகுவன எல்லாவற்றினும் மிகச்சிறந்தது, அறமேயாம். அது, தீமையைத் தேய்த்து, நன்மையை நல்குவதோர் அரிய பேறு; இம்மையில் தன்னையுடையார்க்கு உறுதுணையாய் நின்று போற்றிப் புகழாக்கி, மறுமையிலும் நீங்காது பின்தொடர்ந்து, நல்லின்பம் அளிப்பதோர் நல்லன்புடையது. அதனாலேயே, 'அறத்தினால் வரும் இன்பத்திற்கும், அதனை மறத்தலினால் வரும் துன்பத்திற்கும் ஓர் அளவில்லை' என, ஆன்றோருங் கூறியிருக்கின்றனர். இவ்வாறிருக்க, பகுத்தறிவில்லாச் சில பேதைகள், தமது உயிர்வாழ்க்கையை, நீர்க்குள் மொக்குளும், கார்க்குள் மின்னலுமாம் எனக் கருதாது, "யாம் இளமைப்பருவமுடையோம்; முதுமையில் அறம்புரிதல் கருதுவாம்" என நினைத்திருந்து, இடையில் யமனுக்கிரையாகிப் பாழ்படுகின்றனர். அந்தோ கஷ்டம்! கஷ்டம்!! இவரையொத்த அறிவினர் இவரேயன்றி வேறெவர்? பகுத்தறிவுடையவர் ஒவ்வொருவரும் இளமை முதல் உயிர் உடலை

விட்டு நீங்கும்வரையில் பரிசுத்தமான திரிகரணங்களால் சமயம் வாய்த்தபொழுதெல்லாம் அறப்பொருளைத் தேடிக் கொள்ளுதலே தகுதியாகும். "அச்சுக் கோட அங்கமுங் கோடும்" என்றபடி, கரணங்கள் கோடின், கருதிப் புரிகின்ற அறமும் விபரீதப்படும். ஆகையால், அறம்புரிவோர்க்கு, மனோ வாக்குக் காயங்களின் தூய்மை இன்றியமையாததாகின்றது.

## நீதிகதை—1

பாரதப்போரில் பதினேழாவது தினத்தில் பாண்டவ குலப் பிரசித்தனாகிய அருச்சுனனுக்கும், கௌரவசேனாபதியாகிய கர்ணனுக்கும், கண்டவர் அஞ்சிக் கண்புதைக்குமாறு மிகவும் கடுமையான யுத்தமொன்று மூண்டது. அச்சமரம், அன்று மாலைவரை நிகழ்வதாயிற்று. அவ்விருவரும், காலைமுதல் நெடுநேரம்வரை, ஒருவர்க்கொருவர் தாழாது பொருதனர்; ஆயினும், பிற்பகலிறுதியில், பார்த்தன், தான் தவம்புரிந்து ஸ்ரீசங்கரமூர்த்தியிடம் பெற்ற தனுசரங்களின் பலத்தாலும், பயின்ற கரலாகவங்களினாலும், சாரதியாகிய கண்ணபிரான் தேர்செலுத்தும் திறத்தினாலும், அங்கநாட்டரசனது அங்கமெல்லாம் சல்லடை போலவும் தட்டானது நாலச்சைப்போலவும் உதிரங் கொப்புளித்து வெளிப்படத் துன்புறுத்தி, அவனது தங்கையைப்போல் அவனும் விளங்குமாறு செய்தனன்; அன்றியும், அவனால் தனது தலைக்கென்று ஏவப்பட்ட நாகாஸ்திரத்தைத் தலைப்பாகையுடன் பிற்பட்டொழிய விடுத்து, உயிர்பிழைத்து, மீண்டும் தனது காண்டீபமென்ற கார் முகத்தினின்று கார்காலத்து மாரிபோல் அநேக அம்புராசிகளை வர்ஷித்து, அந்தக் கர்ணனுடைய சரீரமுழுதும் சரக்கூடாக்கிவிட்டனன். அங்கர்கோனும், அநேக அஸ்

திராசுறகங்களைச் சோனைமாரிபோற் சொரிந்து, பாண்டவ குலக்குரிசிலையும் பாண்டவசகாயனையும் படுகாயப்படுத்தி விட்டனன்; என்றாலும், அவனுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தின் கொடுமையினால், அவனது வலிமை வரவரக் குறைவதாயிற்று; இரதமும் மேலெழுந்து சென்றிலது; தலையில் அணிந்த கிரீடமும் நிலைபெயர்ந்தது; அணிகளும் ஒன்றேடொன்று பின்னிப் புறந்தூங்கின. கண்களும் இருண்டன. ஆயினும், பாணங்களை எடுத்தலுந் தொடுத்தலுமாகிய வேலைகளைமாத்திரம் அவனது கரங்கள் மறந்தனவல்ல. அங்குள்ள வீரர்கள்யாவரும், "தருமவானாகிய கர்ணனுக்கு மரணகாலம் அடுத்துவிட்டது" என்று, மனவருத்தமுறுவாராயினர். அந்தக் காலத்தில், அவனாற் சிறுவயது முதற் போற்றிவரப்பட்ட தருமமானது, "தருமந் தலைகாக்கும்" என்றபடி, அக்கர்ணனைச் சூழ்ந்துநின்று, அருச்சுனனால் ஏவப்பட்ட திவ்யாஸ்திரங்களனைத்தையுங் கவளீகரணஞ் செய்யத் தொடங்கிற்று; அதனால் அந்த அங்கர்கோன் சிறிது இளைப்பாறுதல் கொண்டனன்.

அதுகண்ட கிரீடி, கண்ணபிரானை நோக்கி, "சுவாமி! நான் இன்று சூரியன் அத்தமெற்றை அடைவதன்முன் கன்னனைக் கொல்வதாகச் சூளுறவு செய்திருப்பதை நிறைவேற்றும்வண்ணம், வரத்தாற் பெற்ற அநேக அஸ்திரங்களைப் பிரயோகித்தும், அவைகளெல்லாம் அவன்சமீபத்திற் சென்றவுடன் மறைந்துபோகின்றனவே! இப்புதுமைக்குக் காரணம் மொழிந்தருளல்வேண்டும்" என, திருமால் செப்பலாயினர்:—

"பற்குண! கேட்பாயாக: 'இம்மையில் ஒருவனுக்குப் பாபமாவது புண்ணியமாவது மிகப்பெறின், அதன் பலனை அவன் இம்மையிலேயே அநுபவிப்பான்' எனச் சாஸ்திரங்

கள் மொழிகின்றன. இந்தக்கர்ணனே, சுத்தமான மனோ வாக்குக் காயங்களால் எத்தனையோ கோடானுகோடி தருமங்களைச் செய்து சிறப்புற்றவன்; ஆதலால், அந்த அறங்களெல்லாம், இப்பொழுது அவனைச் சூழ்ந்துநின்று, உன்னுடைய வாளிகளனைத்தையும் வாய்மடுத்துக் காக்கின்றன. அதுகொண்டே 'தருமம் தருமனையும் தடுக்கும்' என்ற பழமொழியும் உலகத்தில் வழங்குகின்றது. ஆன்றோரும், உலகத்தில் எவரும் தருமத்தையே ஸம்பாதிக்கவேண்டுமென்றும், அதனை வெல்ல எவராலும் இயலாதென்றும் அடிக்கடி உபதேசஞ்செய்துவருகின்றனர். இங்ஙனமிருக்க, நீ, 'இன்று பகற்பொழுது போகுமுன் கன்னனைக் கொல்வேன்' என்று சபதஞ்செய்துவிட்டனை. கதிரவனும், அத்தகிரியை இரண்டு விற்கிடையளவிற் குறுகிவிட்டனன். என்ன செய்யப் போகின்றனையோ? அறியேன்'' என்றருளலும், பார்த்தன், உள்ளம் பதைபதைத்து, அக்கடவுளை அடிவணங்கி, "கோவிந்த! மாதவ! கோபால! கிருஷ்ண! உம்மாலாகாத காரியமும் உலகத்தில் உள்ளதோ? ஏன் இப்பாசாங்கு? என்னுடைய சூளுறவை நிறைவேற்றுவது தங்கள் கடமையேயாகும். எனக்கு வேறு ஆப்தர் யாரிருக்கின்றனர்? '' என்று பிரார்த்தித்து நிற்க, கருணைக்கடலாகிய கண்ணன், அவனை அத்தேரின்மேலேயே சும்மா இருக்குமாறு அருளி, ஓர் முனிவர்வேடம் பூண்டு, வள்ளலாகிய அந்தக்கர்ணனது முன்னிலையில் எழுந்தருள்வாராயினர்.

இவ்வாறு தனது முன்னிலையில் எழுந்தருளி விளங்கும் தெய்வமுனிவரை, அருச்சுனனது வெற்றிக்கணைகளால் மொத்துண்டு இளைத்து மூர்ச்சையாய் இரதத்தின் மேல் தலைசாய்ந்து கிடந்த மகாத்தியாகியாகிய அங்கர் கோன் கண்ணுற்று வணங்கி, அவரை நோக்கி, "சுவாமி!

தேவரீர் யார்? இருப்பிடம் எது? எழுந்தருளியது என்னை?'' என, மாதவன், "அரசே! யான் ஒரு முனிவன்; மகா மேரு பருவதத்தில் தவஞ்செய்துகொண் டிருப்பவன். வறுமையென்னும் பிணியால் வாடி வருபவர்க்கெல்லாம் வேண்டுவன கொடுத்து உதவுகின்றனை எனப் பலராலுங் கேள்வியுற்று, நானும் எனது தரித்திரத்தைத் தொலைத் தற்கு இங்கு வந்து உன்னை அடுத்தேன். நீயோ இந்த நிலைமையில் இருக்கின்றனை. எனது மிடி என்னை விட்டுநீங்குவது எவ்வாறோ? '' என்று மனவருத்தத்தோடு உரைக்க, வள்ளல், " தவச்சிரேட்டரே! அதிவீரனாகிய அர்ச்சுனனது காண்டீபத்தினின்று புறப்படும் காலசர்ப்பத்தையொத்த கடிய சரங்களால் தளர்ந்து கீழ்வீழ்ந்து இறந்து படும் நிலைமையை யான் இப்பொழுது அடைந்துள்ளேன். எனது ஜீவன் உடலிடத்துளதோ? இலதோ? அறியேன். இப்பொழுது தேவரீரது திருவுளத்து அவாவினைப் பூர்த்திசெய்யும் பாக்கியம் பெற்றிலாப் பாவியானேன். தாங்கள் விரும்பிய பொருள் எனது இல்லிடத்து உளதாயின், அதனை எடுத்து நல்க நான் இந்த இரணகளத்தை விட்டுப்போதல், இராச தருமத்துக்கு அடுத்ததன்று: போரிற் புறங்காட்டுதலாகிய பாபத்திற்கும் பழிக்கும் ஆளாவேன். ஆதலால், கருணை செய்து யான் இங்கிருந்தே தரத்தகும் பொருளைப் புகன்றருள்வீராக'' எனவேண்ட,தெய்வமுனிவர் அவனைநோக்கி, "வரையாது கொடுக்கின்ற வள்ளலே! நீ இதுகாறும் செய்துவந்த புண்ணியங்களனைத்தையும் எனக்குத் தருவாயாக'' என்றருளினர். அம்மொழியை அமுதசாரம்போற் செவியில் ஏற்ற அங்கர்கோன், அளவற்ற ஆனந்தத்துடன் அம்முனிபுங்கவரை வணங்கி, "சுவாமி! உமக்குப் பிரம தேவனும் நிகராகமாட்டானென்றால், இவ்வேழையேன் தேடிக்கொண்ட தருமமோ ஒருபொருளாவது? இதோ

யான்பெற்றதருமங்களெல்லாம் உமக்கேதந்துவிட்டேன்'' என்று வாக்கினால் தத்தஞ்செய்தனன். மாதவன், உதக பூர்வமாகத் தானஞ்செய்தாலன்றி அத்தானம் சித்தியா தென உரைத்து மறுக்க, கர்ணன், ''தண்ணீர் கொண்டு வருவதன்முன் நம்முயிர் நீங்கினும் நீங்கும்; அல்லது, மனம் மாறுபட்டாலும் படும்'' என நினைத்து, தனது மார்பிற் பாய்ந்திருக்கும் ஓர் பாணத்தைப் பிடுங்கி, அதி லிருந்து வரும் செந்நீரை வலக்கையில் ஏந்தி, பரிசுத்த மான அந்தரங்கத்துடன், அந்த முனிவரர்கையில், மந்திரத் தோடு உதகதாராபூர்வமாகத் தருமங்களனைத்தையும் தானஞ்செய்தனன்.

இவ்வாறு தானமேற்ற ஸ்ரீவாசுதேவன், அந்த அங்க தேசாதிபதியைப் பலவாறு புகழ்ந்து, கருடாரூடராய் அவனுக்குத் தரிசனங்கொடுத்தருளி, அவனை நோக்கி, ''வேண்டும் வரங்களைக் கேட்கக்கடவை'' என்றருள, கர் ணன், அவரை வணங்கி, ''கடவுளே! தீவினையின் புணர்ப் பால் மீண்டும் அடியேனுக்குப் பிறப்பு உளதாயின், அப் பிறப்புத்தோறும், இல்லையென்றவர்க்கு இல்லையென்று உரையாது ஈயவும், முடிவில் மீளாத முத்திநிலைபெறவும் வரந்தந்தருளல்வேண்டும்'' என, கண்ணபிரான் அவ்வாறே அவனுக்கு வரங்கொடுத்தருளி, மீண்டும் பார்த்தசாரதி யாய் விளங்கினர்.

அப்பால், கர்ணனும் அருச்சுனது பாணத்தால் இற ந்து, தருமத்தின்பயனாக நல்லுலகஞ்சார்ந்து இன்புற்ற னன்.

---

## நீதிகதை—2

ஓரூரில் தபித்தாள் என்னும் பெயரிய தையலர்சிரோமணியொருத்தி இருந்தாள். அவள் தரணியில் அவதரித்த தருமதேவதையெனத்தக்கவள்; கருத்தருக்குத் தன்னகமே பொன்னகமாக்கிய புனிதை. இம்மாதரசி, நாடோறும் தன்பால் வரும் பதியும் நிதியும் இழந்த பாவையர்பலர்க்கும் அங்கியும் ஆடையும் அன்புடன் நல்கி அலங்கரிப்பதே இகபரங்களுக்குரிய நலமளிக்கும் பேரறமார்க்கமெனத் துணிவுற்று, அம்முறை பிறழாது நிகழ்த்தா நிற்கையில், உலகத்திலே உடம்பெடுத்த உயிர்கட்கெல்லாம் பொதுவாக வந்தடுப்பதாகிய மரணத்துன்பம் அவள்மாட்டும் வந்தணுகலுற்றது. "காலனுக்குக் கண்ணுண்டா?" அந்தக்கண்டகன், 'இவர் தவத்துறை மாக்கள், இவர் அறத்துறை புனிதர், இவர் ஈற்றிளம்பெண்டிர், இவர் ஆற்றுப் பாலகர், இவர் இளையர், இவர் முதியர், இவர் செல்வர், இவர் தரித்திரர்' என்று பார்ப்பதுண்டா? எவரையும் ஆவிகவர்ந்தன்றி ஒழிவதில்லை. ஆதலால், இவளது ஆவியையும் அவன் அபகரிப்பதற்கு அடுத்தனன். என்செய்வாள் தபித்தாள்! தனது ஆருயிர் தன்னுடல்விட்டு நீங்குவதை உன்னிச் சிறிதும் அவள் தபித்தாளல்லள்; 'நாம் இறந்துபடின், நூலிழந்த ஏழையர் பலரும் ஆடைக்கலைந்து துயருறுவரே!' என்று எண்ணியெண்ணியே உள்ளம் பெரிதுந் தபித்தாள். அதுகேட்டு, அவளுதவிபெற்ற மடவோரும், பெறநிற்கும் மானினியரும், மற்றுமுள்ளவரும் அவளது பிரிவிற்கு ஆற்றுது, கரையற்ற துயர்க்கடலில் மூழ்கிக் கரைவதாயினர்;

கண்ணீராற்றில், அவளது உயிர்நீத்த தேகத்தை மிதப்புக் கட்டைபோல் மிதக்கவிட்டனர். இவர் இங்ஙனமாகையில், இயேசுநாதரின் சீடராகிய பேதுருவென்னும் பெரியோன் அங்கு எழுந்தருளி, 'என்ன?' என்று வினவலும், அவரை வணங்கி அப்பெண்மணிகள் கூறலுற்றனர்:—

"உலகம் உய்யுமாறு உயிர்நீத்து உயர்வு நல்கிய உத்தமர்தம் பத்திக்கடலிற் படிந்து களிக்கும் பரமபுருஷராகிய பேதுருவே! கேட்பீராக: இதோ இறந்து கிடக்கின்ற தபித்தாள், யாருமற்ற எங்களை நேர்த்தியான உடைகளினால் போர்த்திக் கீர்த்தியென்னும் உடையினால் இவ்வுலகத்தையும் போர்த்தவள்; பெண்மகளை அலங்கரித்து மண்முழுதும் அலங்கரித்தவள்; பொன்னுடை நல்கி எம் மானங் காத்தவள்; தனக்கு உரிய தானங் காத்தவள்; மற்றும், காக்கவேண்டுவனவெல்லாம் காத்தவள்; அல்லாமலும், திக்கற்ற எமக்கு ஓர் தாயாவாள்; தந்தையுமாவாள்; சோதரனுஞ் சோதரியுமாவாள். இப்படிப்பட்ட உத்தமியைப் பறிகொடுத்த யாம் எங்ஙனம் உய்வது? ஈண்டு இருண்டு மயக்கமுற்றது, எங்களுள்ளமோ? கண்ணோ? கதிரவனோ? யாதோ? அறியோம். ஐயனே! கருணைசெய்து இவளைப் பிழைப்பித்தல்வேண்டும். இவளொருத்திக்கு உயிர்கொடுத்தல், இவ்வுலகிற்கே உயிரளித்தல்" எனப் பலவாறு இரக்கமொழிதொடுத்து எல்லோரும் கெஞ்சி வேண்டிக்கொள்ள, அச்சீடர் சித்தங் கனிந்து, அந்தத் தபித்தாளை உயிர்ப்பித்தனர். அதுகண்ட எல்லோரும் ஆனந்தபரவசராய், அன்பரையும் தேவரையும் வணங்கித் துதித்துப் பாடினர்; பின்பு சுகமுற்று வாழ்வாராயினர்.

அறத்தினால் வரும் சிறப்பை இதனால் அறிக.

---

## "ஆறுவது சினம்."

இதன்பொருள், கோபம் தணிக என்பதாம்.

வித்தியார்த்திகளே! கோபமென்பது, ஒருவனுக்குத் தனது எண்ணமும் செயலும் நிறைவேறாது தடைப்பட்ட காலத்தும், தன்னைப் பிறர் இகழ்ந்தகாலத்தும், மனத்திற் பொங்கி வெளிப்படுவதோர் தூர்க்குணம். அது, தனது பிறப்பிடமான மனத்தைத் தன் வசமாக்கி,வாக்கின்வழியாகவும் காயத்தின்வழியாகவும் வெளிப்படுவதோர் கொடும் பேய். அப்பேயாற் பிடிபட்டவர்,தமக்கேயன்றித் தம்மைச் சார்ந்தார்க்கும் கேடு சூழ்பவராவர். ஒருவன், தன்னின் மெலியாரிடத்தில் தனது கோபத்தைச் செலுத்துவானாயின், அவன், இம்மையில் அரசனாலும், மறுமையில் கடவுளாலும் தண்டிக்கப்படுவான்; தன்னின் வலியாரிடத்திற் செலுத்தின், அவ்வலியானே அதற்குரிய தண்டனையை உடனே கொடுக்கப் பெறுவான். ஆகவே, சினம் எல்லாவிடத்தும் தீமையே தருமென்பது வெளிப்படை. கோபத்தால் கலகமும், கலகத்தாற் கொலையும், கொலையாற் கொடிய நரகவாதனைகளும் வருதலால், அதனை அடியோடு போக்குதலே புருஷலக்ஷணம். குரோதமுள்ளவர் நாடிப் புரிந்த ஜப, தப, விரத, தானங்களும், தேடிக்குவித்த தனதானிய சம்பத்துக்களும் பயனின்றிப் பாழ்பட்டொழிகின்றன. அன்றியும், ஆன்றோர், கோபமுள்ளவனைக் கட்குடியனெனவும், பித்தனெனவும், சண்டாளனெனவும் கூறி விலக்குவது வழக்கம். சினம் கொடுக்காத தீமையை மற்றெதுவுங் கொடுக்காது. இந்நிலவுலகில் சாந்தத்தால் தாழ்ந்தாரும், கோபத்தால் வாழ்ந்தாரும் யாண்டும் இலர். இது திண்ணம்.

## நீதிகதை ௨௯.

விசுவாமித்திரர் என்ற ஓர் அரசர் இருந்தார். அவர், குலத்தாலும், நலத்தாலும், பலத்தாலும், நடையாலும், கொடையாலும், படையாலும், கல்வி செல்வங்களினாலும் நிகரற்றவர். அவர், ஒருகாலத்தில், நால்வகைப்படைகளுடன் புடைசூழ வனாந்தரங்களிற் சென்று வேட்டையாடி, தாகத்தாலும் பசியாலும் மிகவுங்களைப்புற்றவராய், அங்கு முனிக்காயுள்ள முனிவர்தம் இருப்பிடத்தை அடுத்து, தாபதர் சிரோமணியாகிய வசிட்டரது ஆச்சிரமத்திற் புக்கு, அவர்க்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து நிற்பாராயினர். உடனே அம்முனிபுங்கவரும், அவ்வரசருக்கு ஆசிகொடுத்து உபசரித்து, தக்கமரியாதையுடன் க்ஷேமம்விசாரித்து, தமக்கு உரியதாய்த் தமது முன்னிலையில் ஏவல் பூண்டொழுகா நிற்கும் காமதேனுவை நோக்கி, "கபிலையே! நீ இந்த மகிபதியையும், இவனது பரிவாரங்களையும் தேவருணவினும்சிறந்த போசனங்களால் திருப்திசெய்வாயாக" என்றருளினர். அக்காரபியும், சிறிதுபொழுதில் அவ்வாறே செய்தது. உண்டு களைதீர்ந்த பதாதிகளெல்லாம், "யாம் இதுகாறும் இத்தகைய உணவை உண்டிலோம்" என்று களிப்புற்றனர்.

விளைப்புடைக்க விருந்துண்ட கௌசிகர், அந்தத் தெய்வப்பசுவின் விசித்ரசக்தியை நோக்கி வியந்து, அதனைப் பெற அவாவுற்றவராய், வசிட்டமுனிவரை நோக்கி, "இருடிகள் திலகமே! சருகுகளையும் காய் கனி கந்த மூலங்களையும் புசித்துத் தவம்புரிந்துகொண்டிருக்கும் தங்கட்கு இக்காமதேனு இருப்பதனால் என்னபயனுள்ளது? 'அருங்கலன் அரசர்க்கே தகுதி' என்றபடி, அஃது என்னிடத்தில் இருந்தால், நாடுநகரங்களிலுள்ள ஏழைகள் யாவரும்

பசிதீர்ந்து புஷ்டியுறுவர். ஆதலால், இப்பசுவை எனக்குத் தந்தருள்வீராக. இச்சுரபிக்குப் பதிலாக வேறுபல கற்றுவின் மந்தைகளும் பொருட்குவியல்களும் வேண்டுமென்றாலும் தருகின்றேன்'' என, முனிவர், ''அரசே! அக்கினிஹோத்திராதி கர்மங்களுக்கும் அதிதிபூசைக்கும் உபகாரப்படும்படி எல்லாம்வல்ல இறைவனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள வரப்பிரசாதம் இச்சுரபி. ஆதலால், நீ இதனை விரும்புதல் தகாது'' என்று பலமுறை வற்புறுத்தியுரைப்பாராயினர். அவையெல்லாம் அரசன்செவியிற் புக்கில. ''ஆசை வெட்கமறியுமா?'' ஆசை யாரைத்தான் விட்டது? வருவதறியாத கௌசிகர், தம் முன்னே நிற்கின்ற வீரர்களை நோக்கி, ''அந்தக் காமதேனுவைப் பாசத்தாற் பிணித்துக் கொணர்மின்'' என்றனர். அவர்கள் அவ்வாறே செய்யத்தொடங்க, அந்தத் தெய்வப் பசுவின் அங்கங்கள்தோறும் பிறந்த வீரர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து, வேந்தனுடைய வீரர்கள் அனைவரையும் நாசஞ்செய்தனர். அதுகண்ட விசுவாமித்திரர்க்குப் பெருங்கோபம் உண்டாயிற்று. ''இப்பசுவுக்கு இவ்வளவு வல்லமை உண்டானதற்குக் காரணம், வாயை முணுமுணுத்துக்கொண்டிருக்கும் அக்கிழமுனிவனே'' என்றும், ''அவனைக் கொலைபுரிந்தாலன்றிக் காமதேனு நமக்குக் கிடைப்பது அருமை'' என்றும் தீர்மானித்து, வேந்தர் தமது புத்திரர் நூற்றுவரையும் மகாயோகீந்திரராகிய வசிட்டமாமுனிவரைக் கொல்லுமாறு ஏவினர். அவர்கள் ஆயுதபாணிகளாய் அவர்முன் சென்றனர். உடனே முனிவர் ஒருமுறை ஹுங்காரஞ்செய்தனர். அதனால், அக்குமாரர்யாவரும் சாம்பராயினர். அதுதெரிந்த கௌசிகர், பொறுக்கமுடியாத துக்கமும் அடக்கமுடியாத கொடுங்கோபமுங் கொண்டவராய், அத்தபோதனரைக் கொல்லக் கருதி, வரத்தாற்பெற்ற தனுவொன்றை எடுத்து வளைத்து,

ஆயிரக்கணக்கான அஸ்திரங்களைப் பிரயோகித்தார். அவைகளெல்லாம் பரமசாந்தமூர்த்தியாகிய வசிஷ்டர், தமது கையிலுள்ள பிரமதண்டத்தினால் விலக்கி வெற்றிபெற்றனர். இவ்வாறு அஸ்திரங்களெல்லாம் வீணாகவே, காதிசேயின் உள்ளம் மெலிந்தது. கைகள் அயர்ந்தன; சினமுஞ் சிறிது மாறியது; புத்திரசோகம் மேற்பட்டது என்னசெய்வார் வேந்தர்! 'க்ஷத்திரியபலம் ஓர் பலமன்று' என்றும், 'பிரமதேஜஸின் பலமே பலம்' என்றும் பலமுறை பன்னி, இனிப் பிரமரிஷியாவதே சிறப்பெனத் துணிந்து, தவஞ் செய்யத் தொடங்கினர்.

**மாணவர்காள்!** துராசைகாரணமாயுண்டான கோபத்தினால், விசுவாமித்திரர், குலநாசமும், அபஜயமும், அபகீர்த்தியும் அடைவாராயினர். "வெல்வது வேண்டின் வெகுளி விடல்" என்றபடி, பொறையால் வசிட்டர் வெற்றியும் புகழும் பெற்று விளங்கினர்.

---

## நீதிகதை—2

முன்னொருகாலத்தில் அயோத்தியரசனாகிய திரிசங்கு என்பவன், தனது குலகுருவாகிய வஸிஷ்டரை அடுத்து வணங்கி, "இத்தூலசரீரத்துடனே துறக்கம்புக விரும்புகிறேன்; அதற்குத் தக்க கிரியைகள் செய்வித்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முனி அவனை நோக்கி, "அச்செயல் வேதவிதிக்கு விரோதமானது" என மறுத்தனர். உடனே அக்காவலன், "மூர்க்கோர்சொல் வார்த்தை அமுதம்" எனக் கருதாது, "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா" என்றபடி, தனது எண்ணத்தை எப்படியும் முடித்தல் வேண்டுமெனத் துணிவுற்றவனாய், அக்குரு

வின் புத்திரரிடத்துத் தன் கருத்தை உரைக்க, அவரும் அது தகாதெனக் கண்டித்துரைத்தனர். பின்பு திரிசங்கு அவர்களை நோக்கி, "இனி, யான் வேறொரு குருவை நாடி, எனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வேன்" என்று உரைத்தலும், அதுபொறாத அம்மைந்தர் அவனை நீசனாகும்படி சபித்தனர். "சொல்லம்புபோற் சுடும் அம்புளதா?" அந்தக்ஷணமே திரிசங்கு நீசனாயிட்டனன். அவனது பளபளத்த மேனியெல்லாம் கருகறுத்தது. அவன் அணிந்த செம்பொன்னணியெல்லாம் கரும்பொன்னாயின. என்ன செய்வான் தராபதி! அருவருக்கத்தக்க அந்தப் பறைக்கோலத்துடன் நகருட் புகாது, அங்குமிங்கும் அலைந்து திரிந்து, தவஞ்செய்துகொண்டிருக்கும் கௌசிகரைச் சரணமடைந்து, நடந்த வரலாறனைத்தும் உரைத்து, தன் எண்ணத்தை நிறைவேற்றுமாறு வேண்டிக்கொண்டனன். கௌசிகர் தமக்கும் வசிட்டருக்கும் முன்நிகழ்ந்த விரோதத்தை மனத்திற் கொண்டவராதலால், திரிசங்குவை நோக்கி, "அரசே! உன்னை இப்பொழுதே சுவர்க்காரோகணஞ்செய்விக்கின்றேன். நீ ஒன்றுக்கும் அஞ்சற்க" என்று வாக்களித்து, அதன்பொருட்டு ஓர் மகமியற்றினர். அங்குத் தேவர்[illegible]வி வாங்கி உண்ண வந்திலர். அவர்களின்மேல் காதிகாதலர்க்குக் குரோதமேற்பட்டது. உடனே, தாம் அநேக நூற்றாண்டுகளாக வருந்திப்புரிந்துள்ள தவத்திற் சில பகுதியை அந்தத் திரிசங்குவின்பொருட்டு நல்கி, அவனை வானுற எழுப்பித் துறக்கம் புகுவித்தனர். 'நீசன் வானுலகில் வந்தனன்' என்பதை அறிந்த இந்திரன், உடனே அவனைத் தலைகீழாகப் பூலோகத்தில் தள்ளிவிடுதலும், கீழ்நோக்கி வருகின்ற திரிசங்கு, "ஓ முனிவரேறே! தாபதர்தலைவா! சரணம்! சரணம்!! இப்பொழுது என்னைக் காப்பீராக" என்று முறையிட்டனன். அக்கூக்குரலைக் கேட்ட முனிவர்,

"அடா! க்ஷத்திரியப்பயலே! உன்னுடைய பராக்கிரமத்தைப்பற்றி உலகத்தார் பலவாறு கூறுகின்றனர். அவற்றிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை; ஏனென்றால், நீகேவலம் அபலையாகிய தாடகையை ஸம்ஹாரஞ்செய்ததனை. அதனால் உன்னை ஓர் ஆண்பிள்ளையென்று யான் மதிக்கவில்லை. அன்றியும், நீ, ஜனகராஜனிடத்திலிருந்த ஒருசொத்தைவில்லை முறித்துவிட்டோமென்று கர்வங்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. உன் கர்வத்தையெல்லாம் இங்கு ஓர் நொடிப்பொழுதில் தீர்த்துவிடுகிறேன். என் பெயரை வைத்துக்கொண்டதனாலேயே உனக்கு வீரம் வாய்த்துவிட்டதோ?" என்று அதட்டிப்பேசி, கோபத்தை மேன்மேலும் அக்கினிச்சுவாலைபோல் வளர்த்துக்கொண்டவராய், தமது கையிலுள்ள சாபத்தை நீட்டி, "இதை நீ வளைத்து நாணேற்று; பார்ப்போம்" என்று சீறுதலும், காகுத்தர் அந்தப் பரசுராமரை வணங்கி, "சுவாமி! அடியேன்மீது தேவரீர் இவ்வளவு குரோதம் கொள்வதற்குக் காரணம் யாதோ? யான் தங்கள்மாட்டு ஓர் அபராதமுஞ் செய்திலேனே! கருணைசெய்து சாந்தமுறுதல்வேண்டும். யான் குருமொழிதவறாது தாடகையைக் கொன்றேன். ஜனகனது வில்லினை ஒடித்ததைப்பற்றிய பெருமை கிஞ்சித்தும் என்னிடத்திலில்லை. பெரியோராகிய தங்களைக் கௌரவித்தற்கே தங்கள் பெயரை அடியேன் புனைந்துள்ளேன்" என, பிருகுநந்தனர், "அடே பையால்! நீ தருமநியாயங்களெல்லாம் சொன்னது போதும். இப்பொழுது இந்த வில்லை வணக்கி நாணேற்று; இல்லாவிட்டால் உன்னை அப்பால் போகவொட்டேன்" என்று உருத்தலும், ஸ்ரீராமர், "வரம்பு கடப்பவர் எவராயிருந்தாலும், அவரை உடனே நலம்பெறச் செய்தலே தகுதி" என்று மதித்து, அம்முனிவரது கைச்சிலையை வாங்கி, இம்மென வளைத்து,

அதில் ஒரு பாணத்தை நாட்டி, "இதற்கு இலக்கு எங்கே?" என, பரசுராமர், திக்பிரமைகொண்டு, வேறொன்றும் பேச வாயெழாதவராய், "நான் இதுகாறும் செய்துவந்திருக்கின்ற தவமே இதற்கு இலக்காவது" என்றுரைத்தனர். உடனே ஸ்ரீராமர், அவரது தவமுற்றும் வாங்கிக்கொண்டு, ஜயசீலராய் அப்பாற் சென்றனர்.

அப்பால், பரசுராமர், வீணே வளர்த்துக்கொண்ட சினத்தின் கொடுமையால், வாய்ச்சொல்லும் கைவில்லும் தவமும் இழந்து, பல்லும் நகமும் பறிகொடுத்த கொடும் புலிபோலாகி, வனாந்தரங்களிற் புகுந்து உறைவாராயினர்.

---

## நீதிகதை—5

பண்டைக்காலத்தில் ஸ்தேவான் என்ற ஒரு தூயவன் இருந்தனன். அவன், தான் கல்விகேள்விகளிற் சிறப்புற்றதன் பயனாக, நல்லறிவும், நல்லொழுக்கமும், எல்லாம்வல்ல கடவுளின்மாட்டு அன்பும் உடையவன். அவன், பிரசங்க மாரிபொழியும் பைம்புயல்; சபாரத்தினதீபம்; பரசமயக் கோளரி. இவன் ஒருகாலத்திற் பற்பல இடங்களிலுஞ் சென்று, ஸத்யவேதத்தின் தத்வங்களனைத்தையும் கற்றவரும் மற்றவருங் கேட்டு ஆனந்தத்தாற் பரவசமுறுமாறு பிரசங்கஞ் செய்துகொண்டு வருகையில், தான்றோன்றிகளாய்ப் பல நாடுநகரங்களினின்று புறம்போந்த சிற்சில குறைகுடங்கள், இவன்மீது பொறாமைகொண்டு மத விஷயமான தர்க்கப்போருக்கு அந்த ஸ்தேவானை அழைக்க, அவனும் அவர்களை நல்வழிப்படுத்தக் கருதி, அவர்கள் வேண்டியவாறே வாதஞ்செய்யத் தொடங்கினன். ஒளிமுன் இருள் நிற்குமா? அரிமாமுன் மதமா நாடுமா? பின்பு

சிலபொழுதில், ஸ்தேவான், அவ்வாதிகளை வாதத்தில் வாயெடுக்கவொட்டாதபடி செய்து, மற்றும் அவர் இங்ஙனம் எழாது வாய்ப்பூட்டிட்டு, ஸத்யவேதத்தின் உண்மையை ஸ்தாபனஞ்செய்தனன். இங்ஙனம் வெற்றிபெற்றதனால் அவன் சிறிதுஞ் செருக்குற்றிலன்; இன்னும் வாதியர் நல்வழிப்பட்டிலரே! என்னும் வருத்தத்தால் மனமழுங்குதலுற்றனன்.

அப்பால், தருக்கித் தருக்கம்புரிந்து தோல்வியடைந்தார் யாவரும் ஒன்றாகக் குழுமி, கூடுபுனையத் தெரியாவிட்டாலும் அதனைப் பிரித்தெறியும் வல்லமைபெற்ற வானரம்போல், 'வாதில் வென்றிலமாயினும் வஞ்சகத்திலேனும் வெல்வோம்' என்று துணிவுகொண்டவராய், சில பொய்ச்சான்றுடன் அங்குள்ள மேலோரது அவைக்களத்தை அணுகி, "மூப்பர்களே! வேதபாரகர்களே! ஜனங்களே! இந்த ஸ்தேவான், இப்பரிசுத்தமான தலத்திற்கும் வேதப்பிரமாணங்களுக்கும் முற்றிலும் விரோதமான துர்வசனப்பிரசங்கங்களையே ஒழியாது மாரிபோற் பொழியாநின்றனன். அன்றியும், நசரேயனாகிய அந்த இயேசு, இத்தலத்தை அழித்துவிட்டு, மோசே நம்பொருட்டு நல்கிய முறைகளை மாற்றுவானென்றும், இவன் பலமுறையுஞ் சொல்ல நாங்கள் கேட்டோம்" என்றனர். அதுகேட்டு ஸபையிலுள்ளவர்கள் ஸ்தேவானை நோக்கிச் சினந்து, "நீ இவ்வண்ணம் செய்வானேன்?" என, அதற்கு அவன் அவர்களை வணங்கி, "ஐயன்மீர்! யான் அவ்வாறு ஒன்றுஞ் செய்யவில்லை" எனவும், "அவ்வாறு அவர்கள் சொல்வதற்குக் காரணம் அவர்கள் வாதத்தில் தோல்வியுற்றதே" எனவும் கூறினன். அது சிறிதும் அம்மத்தியஸ்தரது செவியிற் புக்கிலது; அந்த ஸ்தேவான்மேல் அவர்கட்குக் கடுங்கோப

மேற்பட்டது. காலதேச வர்த்தமானங்களின் தன்மையும், வாதிபிரதிவாதிகட்குரிய நிலைமையும், குடிமை ஒழுக்கங்களும், அவர்தம் மனத்தமைதி, முகப்பொலிவு, சொல்லுறுதி முதலியவைகளும், சான்றுகளின் நிலைமைதெரி இலக்கணங்களும் உய்த்தறியமாட்டாத சபையோர்க்கு நியாயம் எவ்வாறு புலப்படும்? அப்பால் அந்தப் போலிப் பொதுவுளார் அவனை அவ்வூர்ப்புறத்தே ஓட்டி, சூழநின்று அவன்மேற் கற்களை யெடுத்து எறிவதாயினர். அதனால், அந்த ஸ்தேவானது உடம்பெல்லாம் புண்பட்டது; செந்நீரருவி வெளிப்பட்டது; என்பு சிலவும் முறிபட்டன. என்றாலும், அவன், அவர்கள்மேற் சிறிதும் கோபங்கொண்டிலன்; வைதிலன்; மற்று, அவர்களை நோக்கி வாழ்த்தினன்; 'கல்லெறியும் கை நோகுமே!' என மனவருத்தமுற்றனன்; "மாந்தர், குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து, மறைக்குமாங் கண்டீர் மரம்'' என்ற வாக்கியத்தை நிலைநாட்டினன்; ஆகாயவெளியில் தனக்குத் தரிசனங்கொடுத்தருளிய தேவனையும் குமாரனையும் முழங்காற் படியிட்டு வணங்கி, "ஓ பரமபிதாவே! என்பொருட்டு இவர்களது இப்பாபத்தைப் பொறுத்தருள்வீராக'' என்று வேண்டிக்கொண்டே பரகதிக்குச் சென்றனன்.

---

## "இயல்வது கரவேல்.''

இதன் பொருள், (கொடுக்கக்) கூடியதை ஒளிக்காதே என்பதாம்.

இவ்வுலகத்தில் எவரும் பிறக்கும்பொழுது யாதொன்றுங் கொண்டுவந்ததில்லை; இறக்கும்பொழுது கொண்டு போவதும் இல்லை. வாழ்நாளிடையிற் கிடைத்த பொருள்

கள், கடவுள் தமது இனிய கிருபையால் பிறர்க்கு உபகாரப் படுத்தும்பொருட்டே கொடுத்தருளியவையென நினையாத சில பேதையர், கைவிரித்து இரப்பார்முன் கைகுவித்து, "யாம் ஒன்றுமிலேலாம்" என்று, தம்பால் உள்ளதை மறைக்கின்றனர். ஐயோபாபம்! இவர், தம்மிடத்து உள்ளதை எவரும் அறியாரென நினைத்தனர்போலும். ஸர்வஜ்ஞராகிய கடவுள், தமது திருவுளப்பாங்குக்கு மாறுபட்டொழுகும் இக்கொடியவரை மறுமையில் தக்கவாறு தண்டிப்பரென்பது திண்ணம். இம்மையிலும் இவர் பலராலும் இகழப்படுகின்றனர். பூததயையுள்ள அறிஞர், இப்படிப்பட்ட குற்றத்திற்கு எக்காலத்தும் சிறிதும் ஆளாவதில்லை. அவர்கள் தம்மிடத்து உள்ளதை இரப்பார்க்கு எள்ளளவும் மறைக்கமாட்டார்கள். மன்னுயிர்மேல் வைத்த அன்பினால், அவர்கள், தமது உடம்பிலுள்ள வெள்ளெலும்பையுங்கூடக் கொடுப்பார்கள்; தமது தலையையுங்கூடத் தியாகஞ்செய்யத் துணிவார்கள்.

## நீதிகதை—1

விருத்திரன் என்ற ஓர் அசுரன் இருந்தான். அவன், தானவர் வேந்தனாகிய துவஷ்டா என்பவனால் இயற்றப்பட்ட ஹோமாக்னியினின்று வெளிப்பட்டவன். அவன் கொடுங்கோலையாளி; கருங்கல்நெஞ்சன்; மன்னுயிர்களைப் புடைத்துத்தின்னும் மறலி; தன்னிகரில்லாச் சண்டாளன். ஒருகாலத்தில், இவன், மலையொத்த தேரில் ஏறி, கடலொத்த அனீகினியுடன் வானுலகஞ்சார்ந்து, அமராவதியை முற்றுகையிட்டு, திரிலோகாதிபதியான தேவேந்திரனைப் போருக்கு அழைத்தனன். இந்திரனும் தேவசைன்னியங்களுடன் இரணகளஞ்சென்று, அவனுடன் சமராடத் தொடங்கினன். அவ்விருவரும், பாபமும் புண்ணியமும்

ஒன்றையொன்று எதிர்த்தாற்போல, வெகுநேரம்வரை, கண்டவர் அஞ்சுமாறு கடும்போர்புரிந்தனர். இறுதியில், வலாரி, தனக்கு உரிமையாகவுள்ள வச்சிராயுதத்தை எடுத்துக் கரகரவென்று சுழற்றி அந்த விருத்திரனுடைய உச்சி மண்டையில் தாக்கலும், அத்தெய்வப்படை கூர்மழுங்கிப் பலமற்றுபோயினதேயன்றி, அக்கொடியவனது தலையிலுள்ள உரோமக்காலிற்கூடச் சிறிதும் நோவுண்டாக்கியதில்லை. அதுகண்ட சுரபதி, மிகுந்த வியப்பும் துக்கமுங் கொண்டவனாய், தனது ஆசிரியராகிய பிருஹஸ்பதியை அடுத்து வணங்கி, தனது வயிரப்படை வலியொழிந்ததற்குக் காரணமும், விருத்திரனை வெற்றிபெறுவதற்கு ஓர் உபாயமும் கூறியருளுமாறு பிரார்த்திக்க, வியாழபகவான் சொல்லலாயினர்:—

"சுரேந்திரா! உலகத்திலுள்ள சராசரப்பொருள்களெல்லாம், சிறுத்தல், பருத்தல்; ஒளிர்தல், மழுங்கல்; கிளைத்தல், அழிதல் முதலிய பலவிகாரங்களை நாளடைவில் அடைகின்றன என்பது, பூதநூற்புலவர்தம் துணிபு. அங்ஙனமே, இப்பொழுது உனது வயிரப்படைக்குக் கூர் மழுங்குங் காலம் அடுத்துவிட்டதென்று அறிக. அவ்வாயுதம் இனிப் போருக்கு யோக்கியமன்று. வேறொரு வச்சிராயுதம் செய்துகொள்ளுதலே தகுதி. அதனாலன்றி, வைரியாகிய அசுரனைக் கொல்லுதல் அரிது" என, அமராவதிக் காவலன், "அப்படையை இனி யான் எவ்வாறு இயற்றிக் கொள்வது?" என்னலும், குரு, "பூலோகத்தில் தவஞ் செய்துகொண்டிருக்கும் முனீந்திரராகிய ததீசி என்பவர், அமிருத மதனகாலத்தில் தேவாசுரர்கள் தம்மிடத்தில் அடைக்கலமாகவைத்த ஆயுதங்களையெல்லாம், தமது தவ வலியால் வாய்மடுத்தார். அவைகளின் வலிய சத்துக்களைத்தும், அவரது முதுகெலும்போடு ஒன்றிக்கிடக்கின்

றன. அவ்வென்பே, உனக்கு ஏற்ற வச்சிராயுதத்திற்கு முதற்கருவியாவது. சென்று அதனை யாசிப்பாயாகில், பரமகருணாநிதியாகிய அம்முனிபுங்கவர் ஒளியாது உனக்கு அளிப்பர்'' என வகுத்தருளினார்.

இவையனைத்துங் கேட்டுக் களிப்புற்ற அமரர்கோன், அக்கணமே நிலவுலகில் இழிந்து, ததீசிமுனிவரது ஸந்நிதியை நாடலும், அவர், அவ்வமரேசனை உபசரித்து இருக்கையீந்து, 'வந்த காரியம் என்?' என வினவ, காவலன், "தவச்செல்வரே! எனது ஆருயிர்க்கு உறுதிதருவதாகிய ஒரு பொருள் தேவரீரிடத்து உள்ளது; அதனை எனக்கு அருளல்வேண்டும்'' என, தாபதர் சாற்றலாயினர்:—

"மகபதி! கேட்பாயாக: இரப்பவரது முகக்குறிப்பை அறிந்து கொடுத்தலே கொடை. அங்ஙனமன்றி, அவர் கேட்டபின் கொடுத்தல், இல்லையென்பதற்கு ஸமானம். இப்படியிருக்க, நீ கேட்டபிறகும் கொடுத்திலேனெனில், யான் ஒரு மனுஷ்யனாவேனோ? காட்டிலுள்ள காய் கிழங்குகளைத்தின்று காலத்தையெல்லாங் கடுந்தவத்திற் கழித்துக் கொண்டிருக்கும் ஏழையாகிய என்னிடத்தில் உனக்குக் கொடுக்கத்தகுவதான சிறந்த ஓர் பொருள் யாதிருக்கின்றது? ஆராயுங்கால்,எனது முதுகின் தண்டன்றி வேறொன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதில் விருப்பமுள்ளதாயின், இப்பொழுதே கொடுக்கத் தடையில்லை'' என்றுரைத்தார். அதுகேட்ட இந்திரன், அகங்குளிர்ந்து, முகமலர்ந்த களிப்புடன் முனிவரை நோக்கி, "அதனையே யான் பெற விரும்பி வந்தனன்'' என்று உரைத்து, "நாம் வாய்விட்டுக் கேட்குமுன்னரே, உயிருக்கும் உடலுக்கும் ஆதாரமாயுள்ள முதுகெலும்பை வெகுஅலக்ஷ்யமாக நினைத்து, அளவற்ற ஆனந்தத்துடன் கொடுப்பதாக வாக்

களித்துவிட்டனர், இந்தமுனிவர். என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!! என்னதீரம்! என்ன உவகை! என்ன ஈகை! இவரே ஒளியாதளிக்கும் உத்தமப்பிரபு! இவரே ஒளியாதளிக்கும் உத்தமப்பிரபு!!' எனப் பலவாறு புகழ்ந்து, ஆனந்தஸாகரத்தில் மூழ்குவானாயினன்; என்றாலும், அவ்விருடியின் சரீரநாசத்தைக்குறித்துச் சிறிது மனவருத்தமும் உற்றனன். அதுகண்ட தவசி, அவனை நோக்கிச் சில செப்பலாயினர்:—

"வஜ்ரி! இவ்வுடல் உயிர்ப்பறவை வாழ்ந்தொழிவதோர் கூடு; காமாதி அறுவகை வேடருக்கு ஓர் காடு; பாபப்பயிர் விளைக்கும் பழனம்; குற்றக்கொள்கலம்; புழுமலப்பெரும்பொதி; நாற்றத்துறைகலம்; சோறுபெய் பீற்றற்பை; மூச்செறி துருத்தி. இதனை நம்முடையதென்று நாம் இருக்க, நாய் நரி பேய் கழுகு, தம்முடையதென்று தாம் இருக்கின்றன. மிருகபக்ஷிஜாதிகளின் பிணங்கள், ஒருபணமேனும் காசேனும் விலைபெறுவதாகும். இம்மானுடசரீரம் பிரேதமானால், அதைக் கொண்டுபோய்த் தொலைக்கப் பணம்பத்தேனும் ஐந்தேனும் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது. இதனால் யாருக்கு என்னஉபயோகம்? இப்படிப்பட்ட பொய்யான மெய்யின்மீது ஆன்றோர் அபிமானம் வைப்பதேயில்லை. ஆதலால், யான் இக்காயத்தைக் கழித்துவிடுகிறேனென்று நீ மனவருத்தப்படவேண்டாம். அன்றியும், எனது உடலம் மற்றைய மக்களது களேபரம்போலாகாது, உனது வெற்றிப்பிரதாபத்திற்கு உபயோகப்படுகின்றது. ஆதலால், இவ்வுலகத்தில் யான் இவ்வுதவியினும் வேறு என்ன அடையவேண்டியுள்ளது? என் ஜன்மமே ஜன்மம். எனது மெய்யே மெய். யான் பெற்ற பேறே பேறு. சுரேந்திரா! யான் இப்பொழுதே

எனது உடற்சட்டையை நீத்து வெளிப்படப்போகிறேன். அப்பால் நீ அதை எடுத்துக் கையாண்டுகொள்க" என்று உரைத்தருளி, பரமதயாநிதியாகிய அந்தத் ததீசி முனிவர், அக்கணமே நிஷ்டை கூடினர்; அவரது ஆத்துமா பிரமரந்திரத்தின்வழியே வெளிப்பட்டுப் பரவெளியுடன் கலப்புற்றது.

பின்னர், கற்பகவேந்தன், அம்முனிவரது முதுகெலும்பை எடுத்துக்கொண்டு விச்வகர்மா வச்சிரப்படையாகப் பணிசெய்துகொடுக்கப்பெற்று, கார்மேகம் மின்னலுடன் மீள்வதுபோல் துறக்கநாடடைந்து, விருத்திர சங்காரஞ்செய்து சுகமாக வாழ்ந்துவருவானாயினன்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்; அன்புடையார்,
என்பு முரியர் பிறர்க்கு."—திருக்குறள்.

---

## நீதிகதை—2

தொண்டர்களாலும், கல்வியிற் கரைகண்டவர்களாலும், நீர்நிலவளங்களாலும் சிறப்புற்றோங்கிய தொண்டைநன்னாட்டிலே முதிரமென்னும் மலை சூழ்ந்த நகரத்தில், குமணன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் சிற்றரசனாயினும், கல்வி அறிவு ஒழுக்கங்களினாலும், வாகை, ஓகை, ஈகைகளினாலும் பேரரசனேயாவன். பூமகள் நாமகளாகிய மாமிமருகிகள் ஒற்றுமையுடன் கூடி இவனிடத்திலன்றி வேறெவரிடத்திலும் குலாவியதில்லை. அவன், செவிக்குணவில்லாதபொழுதே, சிறிது வயிற்றுக்கும் ஆஹாரமளிப்பவன். வண்டமிழ்க் கேள்வியின்றி அவனது செவி சிறிதுந் தரியாது. அவ்வள்ளல், நாடோறும், கசடறக்

கற்ற புலவர்கள் தன்முன் வந்து சொல்லுகின்ற அமிழ்தினு மினிய தமிழ்க்கவிதைகளைத் தனது காதாரக் கேட்டு, கையாரப் பொற்காசுகளையும் பொற்றாசுகளையும் வாரி வாரிக் கொடுத்தருளுதலே விரதமாகக் கொண்டொழுகுவ தாயினன். ஆகவே, இப்பூதலத்தின் நாநாதிக்கிலுமுள்ள பாவலர்களும் இரவலர்களும் அவனிடத்துப் பரிசுபெற வந்தவண்ணமாகவே யிருக்க, அவ்வள்ளலும் அவர்கள் வேண்டியவற்றை வேண்டியாங்குக் கொடுத்தவண்ணமா கவே இருந்தனன். இப்படியிருக்கையில், தெய்வத்தினது சோதனையோ? மற்று யாதோ? யாம் அறியோம். சிலநாட் களில் அவனது செல்வமெல்லாம் குறைவதாயிற்று.

போக்கிஷத்திலுள்ள பொருள்களெல்லாம் நாளுக்கு நாள் குறைவுறுதலைக் கண்டு ஏக்கங்கொண்ட அப்பிரபு வின் பின்னவனாகிய இளங்குமணன் முன்னவனை நோக்கி, "அண்ணா! தாங்கள் புலவர்கள்மாட்டுக் கணக்கின்றிக் காட்டிவரும் பெருங்கொடையினால், நமது குன்றாத்த செல்வமெல்லாம் குன்றுவதாயிற்று. இன்னுஞ் சிலபகல் இங்ஙனமாயின், நாமும் வறுமைப்பிணியால் வருந்துதல் திண்ணம். அங்ஙனமாயின், நமது இகலோகவாழ்க்கை ஏதாய் முடியும்? உலகத்தில் பொருளில்லார் அனுபவிப் பது இன்பமன்று; துன்பமே. அவர் அடைவது இசை யன்று; வசையே. அவர் எண்ணுகின்ற எண்ணமும், சொல் கின்ற சொல்லும், செய்கின்ற செயலும் நல்லனவாயினும் தீயனவே. உற்றார்க்குவெறுப்பும், உறாதார்க்குக் களிப்பும் நல்குவது தரித்திரமன்றி வேறன்று. இல்லாமை என்னும் புல்லிய பேயாற்பிடியுண்ட மனிதர்கள் சொல்லாத பொய் யும் செய்யாத இழிதொழிலும் உண்டோ? அவர் கொண்ட கலைநலமும், குலமேன்மையும், குணச்சிறப்பும், உடல்

வனப்பும் பயனின்றிப் பாழ்படுகின்றன. அன்றியும், "இல்லானை, இல்லாளும் வேண்டாள்; மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்; செல்லா தவன்வாயிற் சொல்" எனவும், "இன்மையென வொருபாவி, மறுமையும், இம்மையு மின்றிவரும்" எனவும், "பித்தனென் றிடப், பேயெனப், பேதையேயென்னச், செத்திலா வுயிர்ச் சவமென, விகழ்ந் திடத் திரிவான்" எனவும், "இத்தராதலத் தெக்குலத் தியா வரே யெனினும், அத்த மில்லரேல் அழிவதே அழகினு மழகே" எனவும் சான்றோரும் சாற்றியிருக்கின்றனர். செல்வமுள்ளவரது சிறப்போ மிகப்பெரிது. அதைப்பற்றி விரிக்கிற் பெருகும் இவை யெல்லாந் தங்கட்குத் தெரிந்த விஷயங்களே. யான் சொல்வதென்னே? இனியேனும் கிரு பைசெய்து, "பொருடனைப் போற்றிவாழ்" என்ற அமுத முதுமொழிக்கு ஓர் கௌரவம் நல்கிப் பொருள்வியயஞ் செய்தலைத் தவிர்ப்பீராக" என்று உரைத்தலும், குமணப் பிரபு கூறத்தொடங்கினர்:—

"அன்பிற்சிறந்த எனது தம்பீ! கேட்பாயாக: 'அற மும் அறமுடையார்க்கே எய்தும்' என்றபடி, முற்பிறப் பில் மிகுதியாகப் புண்ணியமீட்டியவர்களே இப்பிறப்பில் ஈகைக்குணமுள்ளவராக ஜனிக்கிறார்களன்றி வேறன்று. அப்பிறவிக்குணம் அவர்கட்கு இடையில் மாறுவதன்று. 'பழக்கங் கொடியது; பார்: பாறையினும் கோழி கிழிக்கும்' என்று ஆன்றோரும் கூறியுள்ளார். ஆதலால், நான் எனது வாழ்நாளனைத்தையும் தியாகத்திலே தள்ளுவதன்றி உலோ பத்திற் சிறிதேனும் கழித்தல் செய்யேன்; இதனை உன் உள் ளத்தில் உறுதியாகக் கொள்க. நான் தமிழ்ப்புலவர்கட்குத் தாராளமாகத் தியாகங் கொடுப்பதனால், செல்வமெல்லாங் குறைவுற்றதென்றனை. இங்ஙனங் கூறுதல், அறியாமையின் பாற்பட்டதே: ஒருவனுக்குப் பொருள் கூடுவதும் குறை

வதும் ஊழ்வினையின் பயனேயன்றி வேறன்று. உலகத்தில் புத்திசாலிகள் தரித்திரப்படுதலையும், மூடர்கள் செல்வர்களாய் வாழ்தலையும் நாம் பார்க்கிறோம். ஆதலால், யார்க்கும் செல்வம் வருங்காலத்தில் வரும்; போங்காலத்திற் போம். அதனை ஆக்கலும் அழித்தலும் மனிதர்செயலல்ல. இங்ஙனமிருக்க, பொருட்குறைவுக்குக் காரணம் யான் என்றனை. இதுநிற்க. உலகத்தில் உயர்மரபில் உதித்த உத்தமர், பொருட்பெருக்குற்றகாலத்தில், அதனைத் தம்மையடுத்தார்க்குப் பகுத்தளித்தலேயன்றித் தாங்கள் அநுபவிப்பதில்லை. அவர்கள், தமக்குரிய திரவியங்களை இருப்புப்பெட்டியில் துருப்பிடிக்கவைத்து இழந்துபோகாமல், அவற்றை உணவுபொருளாக மாற்றி, வறுமையால் வருந்துபவரது வயிற்றுப்பெட்டியில் நிரப்பி, ஒன்று பத்தாகும்படி பெருகக் குவித்து, பிறக்கும் பிறவிகள்தோறும் கையாண்டுபோதருகின்றனர். கற்றோர் தனந்தேடுவது, தியாகத்தின் பொருட்டேயன்றிச் சந்ததியின்பொருட்டன்று. புகழும் புண்ணியமும், வள்ளன்மையுள்ளாரையே தேடியடைகின்றன. அவரை மிடியென்பது அடுப்பதேயில்லை. அன்றியும், இன்பங்களெல்லாவற்றிலும் இன்பமாவது, ஈத்துவக்கும் இன்பமே. இறத்தல் துன்பமானாலும், இரப்பார்க்குக் கொடாதவிடத்து, அஃது இன்பத்தையே தருவதாகின்றது. அன்றியும், எல்லாநலங்களும் ஈகையினாலேயே ஆகின்றன. ஆதலால், இனி நீ எனது கொடைக்குத் தடைசெய்யாதொழிவாயாக'' என்றனன்.

''உலோபிக்கு ஈகையும், பாவிக்குப் புண்ணியமும் பகை.'' ஆதலால், குமணன் உரைத்த குணமொழியெல்லாம், மகாலோபியாகிய இளங்குமணனது செவியில் ஏறவேயில்லை. உடனே அவன் அவ்வள்ளலை எள்ளத்தொடங்

கினன்; அவனது கொடைக்குத் தடைபுரியத் தலைப்பட்டனன். என்றாலும், குமணன் கொடுத்தலிற் குறைபட்டிலன். அதுகண்ட அனுசன், அக்கொடையாளனைக் கொலையாளராற் கொல்வித்தலே தகுதியென மதித்து, அங்குள்ள அமைச்சர்களையும் பதாதிசங்கங்களையும் தன்வசப்படுத்திக் கொண்டு, அவ்வுதாரியின் மாளிகையை முற்றுகைசெய்ய முயன்றனன். இஃதறிந்த குமணராஜன், பாபிகளான லோபிகளுடன் நாட்டில் வசித்திருப்பதினும், காட்டிற்குச் சென்று அங்குப் பசித்திறத்தல் மிகவும் மேலானதெனத் துணிவுற்று, ஒருவரும் அறியாதவாறு அங்கிருந்து வெளிப்பட்டு, மரங்களும் செடிகொடிகளும் அடர்ந்த வனாந்தரங்களிற் சென்று திரிவாறாயினன். குமணனை இழந்த அந்நாடு, மதியிழந்த வானத்தையும், விளக்கிழந்த வீட்டையும், புலவரிழந்த சபையையும், தலையிழந்த உடலையும், மாங்கலியமிழந்த மடவாரையும் ஒப்பதாயிற்று. கொலைசெய்யக் கருதிய பின்னவன், முன்னவனைக் காணாமையால், அவனது தலையைக் குறைத்துக் கொணர்ந்தார்க்குப் பொன்னாயிரம் பரிசளிப்பதாக உலகமெல்லாம் பறைசாற்றுவித்தனன். ''தாயைக் கொன்றார்க்கும் தரணியிற் பாதி'' என்று, அப்பரிசுபெறவும் சிற்சில கடுங்கொலையாளர் முயல்வாராயினர்.

இங்கு இவ்வாறாக, கச்சிநகரவாசியாகிய பெருந்தலைச்சாத்தனாரென்னும் ஓர் பெரும்புலவர், தம்மை வருத்துவதாகிய இல்லாமையை இல்லாமையாக்கும் வண்மையுள்ளவன் குமணனேயெனக் குறிப்புற்றுப் போந்து முதிரவரையை அடைதலும், அங்குள்ள சிலர், ''அவ்வள்ளல் இங்கிலர்; காடுசார்ந்தனர்போலும்'' என, அப்பாவலர், ''இன்னும் நமக்கு வறுமைப்பிணி நீங்குங்காலம்

அடுத்திலதுபோலும்'' எனச் சிந்தித்துச் சிறிது மதிமயக்க முற்றனர்; சிறிதுபொழுது சென்றபிறகு, "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'' என்பதைக் கடைப்பிடித்து, அக்குமண மன்னவனைத் தேடி வனந்தோறும் அலைந்து திரிவாராயினர். இங்ஙனஞ் சின்னாள் கழிகையில், ஓர் நாள், அக்குமணவள்ளல், ஓர் குகையின் முன்னே நிற்பது கண்டு களித்து விரைந்து அடுத்துநின்று, "மகாப்பிரபுவே! என் வீட்டடுப்பில் சமைத்தலென்னுந் தொழில் நடந்து பல நாள்களாயின. அதனால், அந்த அடுப்பினுள் காளாம்பிப் பூடு மலர்வதாயிற்று. அடுப்பில் மூளவேண்டிய அக்கினி அடிவயிற்றில் மூண்டதென்னும்படி பசியால் வருந்தித் தோலாகித் துளைதூர்ந்து தொங்குகின்ற முலையைச் சுவைக்கும்பொழுதெல்லாம் பால்காணாது அழுகின்ற இளங்குழவி தனது தாய்முகத்தை நோக்க, அதுகண்டு பொறுத என் மனைவி என்முகத்தை நோக்க, அவையெல்லாந்தீர நின் முகத்தை நோக்க யான் இங்கு வந்தனன்'' என்னும் உருக்கமான கருத்து அடங்கிய பாடலொன்றைப் பாடி நின்றனர். அது வருமாறு:—

"ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத், தேம்புபசி யுழவாப்,
பாஅ லின்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉம்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்
மனையோ ளெவ்வம் நோக்கி, நினைஇ,
நிற்படர்ந் திசினே; நற்போர்க் குமண!
என்னிலை அறிந்தனை யாயின், இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலென்; அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்

மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே!''.

இங்ஙனம் சொற்சுவை பொருட்சுவைகளால் மிகப் பொலிவுற்று அணிபூத்த அத்தமிழ்ப்பாசுரத்தைக் கேட்ட குமணவள்ளல், அளவற்ற ஆனந்தத்தோடு அவலமும் உடையவராகி, அப்புலவரது கல்வித்திறத்தை மிகவும் சிலாகித்து, அவரை நோக்கி, "பாவலரே! யான் அரசாண்டு வருங்காலத்தில் நீர் வந்திலீர். இக்காலத்தில் என்னை இங்கு வந்து அடுத்தீர். என்றாலும், உமக்குக் கொடுப்பதாகிய பொருளொன்று என்னிடத்து உள்ளது. அது யாதெனில், எனது தலையேயாகும். எனது அனுசன் என்னுடைய தலையை வெட்டிக் கொணர்ந்தவர்க்கு ஆயிரம் பொன் விலைதருவதாய்ப் பறைசாற்றுவித்தனன். ஆதலால், நீர் இந்தக் கூரிய வாளைக்கொண்டு என்னுடைய சென்னியை அரிந்து போய் எனது சகோதரன்கையிற் கொடுத்து, அவன் அளிக்கும் விலைப்பொருளைப்பெற்று, உமது வறுமைநோயைத் தீர்த்துக்கொள்வீராக'' என்று

---

* அரும்பதவுரை:— ஆடு - அடுதல், சமைத்தல். கோடு உயர் - புடை உயர்ந்த. ஆம்பி - காளாம்பி. தேம்பு - மெலியும். உழவா - வருந்தி. திரங்கி - உலர்ந்து, சுருங்கி. இல்லி - துளை. பொல்லா - சிறப்பில்லாத. சுவைத்தொறு - சுவைக்குந்தோறும். மகத்து - பிள்ளையின். ஈர் இதழ் - ஈரமான இமை. எவ்வம் - வருத்தம். நினைஇ - நினைந்து. நின் படர்ந்திசினே - உன்னிடத்தில் வந்தேன். தொடுத்தும் கொள்ளாது அமையலென் - வளைத்தாயினும் பரிசில்கொள்ளாது விடேன். பண் அமை - பண்ணுதல் அமைந்த. யாழ் - வீணை. பச்சை - தோலால் போர்க்கப்பட்ட. மண் ஆர் - மார்ச்சனை நிறைந்த. முழவு - மத்தளம். வயிரியர் - கூத்தர். இன்மை - தரித்திரம்.

தில் என்னை என்னசெய்யச்சொன்னாலும் செய்கிறேன்; என்னுயிரை வேண்டினும் கொடுத்துவிடுகிறேன்'' என்று கிலேசத்துடன் உரைத்தான்.

அப்பொழுது, வாசுதேவன், அவனைச் சிறிது தேற்றி, "நான் ஒரு தந்திரஞ் சொல்லுகின்றேன்; அவ்வண்ணம் நீ செய்வாயாகில், அமரில் பார்த்தன் மரணமடையான். அல்லாமலும், அவனால் கன்னனே மாய்வான்'' என்று மொழிந்தருளியவளவில், புரந்தரன் அகங்குளிர்ந்து முகமலர்ந்து பரபரப்புடன், "சுவாமி! அந்தத் தந்திரத்தை உரைத்தருளல்வேண்டும்; இப்பொழுதே அதைச் செய்துமுடிப்பேன்'' என்று கூற, கண்ணபிரான், "நீ இப்பொழுதே ஓர் விருத்தப்பிராமணவேடம் பூண்டு, அங்கதேசாதிபதியினிடஞ் சென்று, அவனது கவசகுண்டலங்களை யாசிப்பாயாகில், அவன் வரையாது கொடுக்கும் வள்ளலாதலால், அவைகளை உன்கையிற் கொடுத்துவிடுவான்'' என்று சொல்லியருளினர். உடனே, இந்திரன், "அவ்வாறே யாசகஞ் செய்துபெற்றுவருவேன்'' என்று உரைத்து, மாயோனிடத்தில் விடைபெற்று, ஓர் முற்றமூத்த வேதியனாக உருமாறி, கர்ணனிருக்கும் நகரத்துட் பிரவேசிப்பானாயினன்.

அப்போது இந்திரன், வெள்ளிய பால்நுரைபோன்ற நரை திரை முழுக்கிட்ட உடலும், வெளுத்துக் குழிந்தாழ்ந்து பீளை புறத்திட்ட ஒளிமழுங்கிய கண்ணும், ஓசையறி விழுந்து தொளைபட்டுத் தூங்கி அசைந்தாடுகின்ற காதும், தசையின்றி ஒட்டியுலர்ந்து மாசடைந்த தோல்வட்டம் போன்ற கன்னமும், மடிநனையச் சளி ஊற்றெடுக்கும் நாசி

யும், பல்வரியின்றிப் பாம்பினது பொந்துபோல் 'ஒய்' என ஈபினம் மொய்த்துச் சுழல்கின்ற வாயும், தொண்டை வெளிப்பட்டுத் தலைப்பாரந் தாங்காமல் நடுநடுங்கிக் கவிழ்கின்ற கழுத்தும், ஏணிப்பழுப்போல் எண்ணிக் கணக்கிடும்படி எலும்புக்கூட்டை வெளிப்படக் காட்டுகின்ற மார்பும், விலாப்புறங்களும், மாம்சலேசமுமின்றி நரம்பு புறம்பட்டு ஊன்றிய கோலையும் தாங்கிய ஜலபாத்திரத்தையும் ஆட்டிக் குலைக்கின்ற கையும், போர்முகத்தில் வீரர்கைப்பட்ட வில்லேபோல் கூனிக் கவிழ்ந்த முதுகும், வாழைத்தண்டுபோல் நிற்கவும் வளையவும் மாட்டாமல் தள்ளாடித் தத்தளிக்கின்ற காலும் உடையவனாய், கால்மாற்றல் கால்நாழிகையாக, அந்நகரத்தின் வீதிவாய் ஊர்ந்துசென்றான். அது கண்ட அங்குள்ள சிலர், "ஓஹோ! இத்தனை காலம் உலகத்தில் இருப்பவர் மிகவும் அரியர். ஆதலால், இவர் கடவுளுக்குச் சமானமாவர்" என்று, அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துச் சென்றனர். சிலர், "மூத்துக் களைப்படைந்திருக்கும் இவ்வேதியனை இங்கு வழிநடக்கவிட்ட இவர்சந்ததியார் மிகக் கொடியர்" என்றனர். சிலர், "இவர் அநாதர்போலும்" என்றனர். சிலர், "இளமையில் தேடிக்கொள்ளவேண்டியதைத் தேடிக்கொள்ளாமையே, இவரை இவ்வாறு நடக்கவிட்டது" என்றனர். சிலர், "ஏதோ ஒரு பொருளை நம்மரசனிடத்திற் பெறச் செல்லும் இவர், உடம்பால் மூத்தவரேயன்றி, உள்ளிருக்கும் ஆசையால் யௌவனமுள்ளவரே" என்றனர். சிலர் பரிகாசஞ்செய்தனர். சிலர், பரிகாசஞ்செய்தவர்களை நோக்கி, "வயது அதிகப்பட்டால் நமக்கும் இந்தக்கதிதான்" என்று அவர் வாயை அடக்கினர். இவ்வாறு நகரத்தவர் பற்பலவிதமாகக் கூற, அந்த விருத்தவேதியன், வீதிகளெல்லாங் கட

ந்துசென்று, கர்ணமஹாராஜன் இருக்கும் அரண்மனையின் வாயின்முகத்தில் வந்து, வழிநடந்த களைப்பால் மயக்கமுற்றவன்போல் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான்.

இதுகண்ட வாயில்காவலர், விரைந்தோடிவந்து, வீழ்ந்துகிடக்கும் அந்தணனை எடுத்து, மார்போடணைத்துத் தடவிக்கொடுத்து, சிறிது இளைப்பாறும்படி செய்து, "பிராமணச்சிரேஷ்டரே! இந்த அகாலத்தில் தாங்கள் இங்கு வரக் காரணமென்னை? எங்கிருந்து வருகின்றீர்?" என்று வினவினர். விருத்தர், பெருமூச்சுவிட்டு, இருமி, மார்பை ஒருகையால் தடவிக்கொண்டு, "துவாரபாலகரே! நான் உங்கள் தலைவராகிய கர்ணமஹாப்பிரபுவினிடத்திலிருந்து ஒருபொருளை இரந்துபெற எண்ணி வந்தேன். இதோ இந்த அடுத்தவீதியிலிருந்து அருணோதயகாலத்திலே புறப்பட்டேன்; எனது தளர்ந்த நடையால் இவ்விடத்திற்கு வந்துசேரப் பிற்பகலாயிற்று. நான் என்ன செய்வேன்! இனி நீங்கள் என்மீது அருள்கூர்ந்து, என் வருகையை அரசனுக்குத் தெரிவித்தல்வேண்டும்" என்றனர். இரக்கமுள்ள அக்காவலாளரும் உடனே சென்று, தம் வேந்தனுக்குத் தெரிவித்தனர். அவ்வளவில், கன்னனும், விரைந்து வெளிப்பட்டு, வாசலிற் சோர்ந்து கிடக்கும் அந்தணனை வணங்கி, தனது இருகரங்களாலும் மெதுவாகத் தூக்கியெடுத்து, மெல்லமெல்ல அழைத்துக்கொண்டு சென்று, உள்ளிடத்து ஓர் ஆதனத்தில் உட்காரச்செய்து, அர்க்கிய பாத்தியங்களாற் பூசித்து, "தங்கள் தரிசனத்தால் இம்மைப்பயனோடு மறுமைப்பயனையும் நான் அடையப்பெற்றேன். ஆதலால், தங்களைப்போன்ற தெய்வத்தன்மையுள்ள பிராமணரும், தங்களைத் தரிசனம்செய்யப்பெற்ற என்னைப்போன்ற க்ஷத்திரியனும் உலகத்தில் எங்குமே

இல்லை'' எனப் பற்பல இனிய வசனங்கள்கூறி, "தாங்கள் விரும்பிவந்த பொருளைக் கேட்டருள்வீராக; அதனை உடனே கொடுத்துவிடுகின்றேன்'' என்றனன். இவையெல்லாங் கேட்ட அந்தத் தேவபூசுரன் அரசனை நோக்கிச் சொல்லத் தொடங்கினன்:—

"வள்ளலே! யான் கேட்பதை உடனே கொடுப்பதாகச்சொல்லிவிட்டனை; என்றால் விரும்பப்பட்ட பொருளோ மிகவும் அருமையானது; அது, தேவலோகத்திலிருக்கும் கற்பகதருக்களாலும் கொடுக்கமுடியாதது; நீ கொடுப்பாயோ?'' என, கர்ணன் சிறிது புன்னகைசெய்து, "முற்றமுதியவரே! இப்படிப்பட்ட வசனங்களை யான் இதுவரையும் காதிற் கேட்டதேயில்லை. நாடோறும் யாசகர்கள் என்னிடத்தில் வருவதும், விரும்பிய பொருள்களைத் தாங்கள் கேட்பதும், அவைகளை மறுது யான் அளிப்பதும் வழக்கமாக நிகழ்ந்து வருகின்றனவேயன்றி வேறல்ல. ஆதலால், நீரும், ஐயமும் அச்சமும் இன்றி, எது வேண்டுமோ அதைக் கேளும்; யான் என்உயிரையெனினும் கொடுக்கப் பின்வாங்கமாட்டேன். தேவரீர் விரும்பிய பொருளைக் கொடேனேல், முனைந்த போரில் முதுகுகாட்டியோடும் அரசர்கள் சென்றடையும் நரகத்தை யானும் அடைவேன்'' என, இந்திரவேதியன் முகமலர்ந்த களிப்புடன், "உன்னுடன் பிறந்ததாகிய கவசகுண்டலங்களைத் தருதி'' என்றனன். அம்மொழியைச் செவிக்கு அமுதெனக் கேட்ட கன்னனும், "இதோ தந்துவிட்டேன், இதோ தந்துவிட்டேன்'' என்று அவைகளை அறுத்தெடுக்கத் தொடங்குகையில், அவனது பிதாவாகிய சூரியன் ஆகாயவெளியில் அசரீரியாக நின்று, "கொடேல், கொடேல்: இப்பொழுது உன்னிடத்தில் தானம்பெற வந்திருக்கிற இம்மூத்தோன் வேதியனல்லன்; தேவேந்திரன்; தன் குமாரனாகிய அர்ச்சுன

ஞல் பாரதயுத்தத்தில் உன்னைக் கொல்விக்கவேண்டி மாயோனுல் ஏவப்பட்டவன். ஆதலால், ஒன்றுங் கொடேல். நான் உன் தந்தையாகிய கதிரவன்; நீ என் செல்வப்புதல்வன். ஆகையால், இந்த இதவசனங்களை உனக்கு உரைத்தேன்'' என்ருன்.

இம்மொழிகளெல்லாம் ஈயத்தைக் காய்ச்சி இருசெவியிலும் வார்க்கப்பெற்றதுபோல் துடிதுடிக்கக் கேட்ட கன்னன் சொல்லலாஞன்:—

"வெய்யோய்! உலகத்திலுள்ள பெரியோர் உன்னை நவவையாகரணி என்றும், வேதசாஸ்திர பாரங்கதன் என்றும் சொல்லித் துதிக்கின்றனர். அது எத்துணை உண்மையோ நான் அறியேன். கொடுப்பவர்தன்மையும், கொடையால் வரும் நன்மையும், கொள்வார் அடையும் இனிமையும் இன்னும் நீ அறிந்தாயில்லையே! அனுதினமும் உலகமெல்லாஞ் சூழ்ந்து செல்கின்றனை; ஒவ்வொரு ஜீவனும் செய்கின்ற பாபபுண்ணியமனைத்திற்கும் ஸாக்ஷியாயிருக்கின்றனை. அதனுல், உலக வியாபாரமெல்லாம் உனக்கு நன்ருகத் தெரிந்தேயிருக்கும். அப்படி தெரிந்திருந்தும், தருமகாரியத்திற்கு இடையூறுசெய்யத் தலைப்பட்டாய். ஆகையால், உன்னைப்போன்ற கற்றறிவுடைரை நான் எங்கும் பார்த்ததேயில்லை. மேலும், கவசகுண்டலங்களைக் கொடுத்துவிட்டால் போரில் அர்ச்சுனன் என்னைக் கொன்றுவிடுவானென்று பயமுறுத்தினை. நன்று நன்று! "போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு; வீரனுக்குச், சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு; — ஆய்ந்த, அறிவோர்க்கு நாரி அருந்துரும்பு; இல்லத், துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்ற ஆன்ருேரது அமுதவாக்கியத்தை இனியேனும் அறிந்துகொள்வாயாக. அறிஞர், தமது கீர்த்தியை நிலைநாட்டுவதிலேயே

கண்ணுங் கருத்துமாக இருப்பதன்றி, மரணத்தைக்குறித் துச் சிறிதுங் கவனிப்பதேயில்லை. அவர்கள், இறப்பு என்பது ஜீவர்களெல்லோர்க்கும் பொதுவானதென்றும், அது இன்னகாலத்தில்தான் வருமென்று கணித்தல் ஒருவருக்கும் இயலாதென்றும் தெரிந்து, ஸதா தருமகாரியத்திலேயே தலையிட்டுழைக்கிறார்கள். இங்ஙனமிருக்க, நீ என்னைத் தருமஞ்செய்யவொட்டாமல் தடுத்தனை; பாதகத்துரும்பானாய். நல்லகாரியங்களுக்கு விரோதஞ்செய்பவர் தாயானாலும், தந்தையானாலும், அவர்களை உடனே தண்டிக்கவேண்டுமென்று நீதிநூல் வரையாது முறையிடுகின்றது. நீ மறைவாயிருப்பதனால், உனக்குத் தண்டனையொன்றுஞ் செய்யவியலவில்லை. வெளிப்படுவையேல், கொடேல் என்ற நாவைக் குறைத்தேயிருப்பேன். ஆதியிலே தக்ஷனது யாகசாலையில் உனது பல்லெல்லாம் உடைத்தெறிந்த வீரபத்திரக்கடவுள், நாவையும் அறுத்தெறிந்திருப்பாரானால், இப்பொழுது இப்பாபத்திற்கு ஆளாயிருக்கமாட்டாய். கொடுப்பது தடுக்குங் குரூரனாகிய உன்னைச் சான்றோன் என்று கூறுதல், கொடிய விடமுள்ள நாகப்பாம்பை நல்ல பாம்பென்று கூறுதல்போலும். வெய்யோன் என்ற பெயரே உனக்குத் தகுதியானது. ஆதலால், நீ எனக்குத் தந்தையுமல்லாய்; நான் உனக்கு மைந்தனுமல்லேன். தொலைதி, தொலைதி'' என முனிந்து வெறுத்துக் கூறலும், தினகரன், ஒன்றும்பேசாமல் அப்பாற் சென்றனன்.

அப்பால், கர்ணன், கவசகுண்டலங்களை உரித்தெடுத்துச் சிறிதும் மனக்கலக்கமின்றிக் கொடுத்தனன். அவற்றைப் பெற்றுக்கொண்ட இந்திரனும், தான் கொண்டிருந்த வேதியவடிவத்தை நீக்கி, சுவயரூபத்துடன் அந்த அங்கர்கோனை இருகைகளாலும் எடுத்துத் தழுவி, ''அரசரேறே!

நீயே வரையாது கொடுக்கும் வள்ளல். நீயே தீரன். நீயே புருஷசிங்கம்'' எனப் பற்பல புகழ்ந்துபேசி, பளபளப்பான ஒரு வேலாயுதத்தைக் கையிலெடுத்து, ''இது, பாரத யுத்தத்தில் உன்னுடன் எதிர்த்துப் போர்செய்யவரும் கடோற்கசக்காளையின் உயிரைக் கவரத்தக்கது; பெற்றுக் கொள்க'' என்று நீட்டுகையில், கர்ணன், அவனை வணங்கி, ''ஐயா! யான் கைம்மாறுகருதிப் பரிசளிப்பவனல்லேன். அன்றியும், என் கை, ஒருவர்கைக்கு மேற்பட்டுக் குவிந்திருத்தலேயன்றி, கீழ்ப்பட்டு விரிந்திருத்தல் இதுகாறும் இல்லை. ஆதலால், எனக்கு இது வேண்டுவதன்று'' என்று மறுத்தனன். வலாரி, ''அப்பா கர்ண! இவ்வேலை உனக்குக் கைம்மாறு என்று கருதி நான் கொடுக்கவில்லை; இது நாம் கொடுக்கும் பிரசாதம்; பெறுக''என்று, அவன்பக்கத்தில் அதை வைத்துவிட்டு, அவனிடத்தில் விடைபெற்று, ஸ்ரீ கிருஷ்ணபகவானிடஞ் சார்ந்து வணங்கி, கர்ணன்பாற் சென்று பெற்ற கவசகுண்டலங்களை அவர்முன் வைத்து, தான் கர்ணனிடஞ் சென்றதும், கேட்டதும், அவ்வளவில் அவன் தானமளிக்க யத்னித்ததும், அதைக் கதிரவன் தடுத்ததும், அவனுரையை மறுத்துத் தனக்கு அவன் ஈந்ததுமாகிய விருத்தாந்தமெல்லாம் விரிவாகச் சொல்ல, ஸ்ரீ மாதவன் அவனை நோக்கிச் சொல்வாராயினர்:—

''சுரேந்திரா! உலகத்தில் உதாரகுணமுள்ள பெரியோர், தம் உயிரை விரோதிகள் யாசித்தாலுங் கொடுத்து விடுவர். அற்பகுணமுள்ள கீழோர், உறவினர் வந்து யாசித்தாலும், எட்டுணையும் ஈயமாட்டார். அன்றியும், உண்மையான கொடையாளிக்குச் செல்வம் மிகுதியாகவேண்டுமென்பதன்று. அவன் உள்ளதை ஒருகாலத்தும் ஒளியான். உலோபிகளுக்கு எவ்வளவுபொருளிருந்தாலும், அவர்கள்

இரவலரைக் கண்டவுடன், கருடனைக் கண்ட கட்செவி போல் உடல் நடுங்கி ஒளித்துக்கொள்வார்கள். ஆதலால், உதாரகுணம் ஒருவனுக்கு இடையில் வருவதன்று. அது கருவில் அமைப்பு. இதுபற்றியே, "தயையுங், கொடையும் பிறவிக்குணம்" என்றார் ஆன்றோரும்" எனப் பகவான் புகன்று, அவ்விந்திரனுக்கு விடையருளித் தாம் அப்பாற் சென்றனர்.

---

## "உடையது விளம்பேல்."

இதன் பொருள், நீ பெற்றிருக்கும் சிறப்பை நீயே சொல்லிக்கொள்ளாதே என்பதாம்.

நவரத்தினங்களால் ஆக்கப்பட்ட திருமங்கலக்கலனும், பொன்னிழையால் நெய்யப்பட்ட புடவையும், தமவேனும் அவைகளை ஆடவர் அணிந்துகொள்வதில்லை. அதுபோல், சான்றோர், தாம் புரி தான மான முதலியவைகளைத் தாமே வெளிப்படுத்திக்கொள்வதில்லை. கீழ்மக்களோ, எரிந்துகொண்டிருக்கும் தீச்சுடர்விளக்கைத் தண்ணீர்வார்த்துப் பிரபலப்படுத்தத் துணிவார்போல், தம்மைப் பலரும் மதித்தல்வேண்டுமென நினைத்து, தாம் ஏதோ செய்துகொண்ட தானமானமுதலியவற்றைப் பலரறியப் பிரசங்கித்து, அந்தோ! அவைகளுக்கு உரிய பலன்களனைத்தையும் வீணே இழந்துவிடுகின்றனர்.

### நீதிகதை—1

கிருதயுகத்தில் நகுஷபுத்திரனாகிய யயாதியென்றோர் அரசன் இருந்தான். அவன், வடிவத்தால் மதனன்; வீரத்தால் அரியேறு; ஈகையால் மேகம்; பொறையால் பூதலம்;

நடுநிலைமையால் தராசு; தோற்றத்தால் மகாமேரு. அவன், மகத்தால் மாகத்தாரையும், சிராத்தத்தால் தென்புலத்தாரையும், போனகத்தால் விருந்தினரையும், விரும்பியதை அளித்தலினால் அந்தணரையும், இழைக்கும் அன்பினால் ஏழைகளையும் பாதுகாப்பவன்; பொருள்போற்றலால் வைசியரையும், அளியால் சூத்திரரையும், தருமத்தினால் ஸகல ஜனங்களையும் சுதாஹலிக்கச்செய்பவன்; ஸகலபோகங்களுடனும் பூலோகஇந்திரனென்று சொல்லும்படி வாழ்வுற்றவன். அவனைப்போல், தானதர்மங்களும், யாகாதி கர்மங்களும், ஜபதபவிரதங்களும் செய்துமுடித்தவர்கள் ஒருவருமே இல்லை.

இத்துணைச்சிறப்பு வாய்ந்த யயாதிமன்னவன், தனக்கு முதுமைப்பருவம் அடுத்ததுகண்டு, தனது மக்களுள் அதிமேதாவியாயும், சொற்படி கேட்டு நடப்பவனாயுமுள்ள பூரு என்பவனை அழைத்து, பக்கத்தில் உட்காரவைத்து, "அப்பா! யான் இனிப் பரகதியை நாடி வானப்பிரஸ்தாச்சிரமத்தைக் கைக்கொள்ளவிரும்புகின்றேன். ஆதலால், இங்கு உனக்குச் சிலசொல்வேன். அவற்றை நன்றாகக் கவனித்து ஒழுகவேண்டும். குமாரனே! என்னால் அரசாட்சி செய்யப்பட்ட கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலுள்ள பூமியெல்லாம் இனி உன்னுடையவே. உலகத்தில் அரசனென்றிருப்பவன், மோசக்கருத்தையும், ஏழைமைக்குணத்தையும், கோபக்குறியையும், கபடக்கொடுமையையும், பொறாமையையும், துவேஷபுத்தியையுங் கைக்கொள்ளலாகாது. பெற்றோர், முன்னோன், ஆசான், முதியோர், கவிஞர், தவத்தோர், பொறுத்தோர், ஒற்றர் ஆகிய இவர்களை அவமதித்தலாகாது. இந்நிலவுலகத்திலே, வலியுள்ளார் பொறையுடையராயிருப்பர். அஃதில்லாரே சினமுடையராயிருப்

பர். கீழோர் மேலோரையும், வன்மையில்லார் வன்மை யுள்ளாரையும், அழகற்றவர் அழகுற்றவரையும், தரித்திரர் திரவியமுள்ளாரையும், சோம்பேறிகள் சுறுசுறுப்புள்ளா ரையும், மறமுடையார் அறமுடையாரையும், துர்க்குணி கள் சற்குணிகளையும் பகைத்து இகழ்வார்கள். இவைக ளெல்லாங் கலிகாலத்திலக்கணமாகுமாதலால், நியாயங் களைத் தெரிந்துகொள்ளுதல் மிகவும் அருமையேயாயினும், வாதி பிரதிவாதிகள் கூறுகின்ற முறைப்பாட்டினை ஏழு தரங் கேட்டு, அவர்கள் கூறியவற்றினின்றே, அன்னப்பற வை பாலைப் பிரித்து அருந்துதல்போல, நியாயத்தை நன்கு அறிந்துகொள்ளுதல்வேண்டும். இப்பூமியில் பொறு ரிற் பொறுத்தாரும், கல்லாரிற் கற்றாரும், வைதாரில் வையா தாரும் மிகப்பெரியரென்பதை நன்கு அறிவாயாக. எவ் வகைப்பட்ட பிராணிகளுக்குந் துன்பஞ்செய்தல்கூடாது. 'மடியறுத்துண்ணல்' போல் குடிபறித்துண்ணல் தகாது. கொடுஞ்செயலுங் கடுமொழியும் நீக்கி, நல்வினையும் இன் சொல்லும் உடன்கொண்டொழுகுதல்வேண்டும். கொள் ளத்தக்கது நல்லோரிணக்கமென்றும், தள்ளத்தக்கது தீயோர்கூட்டுறவென்றும், உயிரையேனும் இரப்பது இழி வென்றும், ஈவது மேலென்றுந் துணிந்தறிவாயாக.

"அன்றியும், தேசம், சேனை, செல்வம், அமைச்சு, அரண், நட்பு என்ற இந்த ஆறு அங்கங்களையும் உடைய வனே இராஜசிங்கம். வாகை, ஈகை, அறிவு, மனவெழுச்சி ஆகிய இக்குணங்களுள்ளவனே இராஜரத்தினம். பொருள் தேடல், சேர்த்தல், காத்தல், அவைகளை நல்வழியிற் செல விடுதல் ஆகிய இவ்வினைகளை உடையவனே இராஜதீபம். பார்த்தற்கு எளிமையும், இரக்கத்தினின்சொலும் உள்ள வனே இராஜதிலகம். மறமுறைவழாது மன்னுயிரோம்

[illegible]

[illegible]

அறியாது, தமோகுணத்தால் [illegible] ''[illegible] பதி! [illegible] [illegible]டாலும், என்றாற் செய்யப்பட்ட [illegible] எவராலுங் கணித்தல் இயலாது [illegible] யான் கூறுவதென்னை? திரிலோகங்களிலும் என்னைப்போல தருமஞ்செய்தவர் எவருமில்லையென்பது திண்ணம்'' எனக் கூறி முடித்தலும், கற்பகவேந்தன், அவனை நோக்கி, ''அரசே! நீ செய்த தருமங்களைக்குறித்து நீயே புகழ்ந்துபேசினை; ஆதலால், உனக்கு இந்தத் துறக்கம் இனி இடங்கொடாது; பூலோகத்தை நோக்கி விழக்கடவை'' என்று உரைத்துக் கீழே தள்ளிவிட்டான். அப்பொழுது யயாதி, சகிக்கமுடியாதவருத்தத்

பர். சிறோர் மேலோரையும், வன்மையில்லார் வன்மையுள்ளாரையும், அழகற்றவர் அழகுற்றவரையும், தரித்திரர் திரவியமுள்ளாரையும், சோம்பேறிகள் சுறுசுறுப்புள்ளாரையும், மறமுடையார் அறமுடையாரையும், துர்க்குணிகள் சற்குணிகளையும் பகைத்து இகழ்வார்கள். இவைகளெல்லாங் கலிகாலத்திலக்கணமாகுமாதலால், நியாயங்களைத் தெரிந்துகொள்ளுதல் மிகவும் அருமையேயாயினும், வாதி பிரதிவாதிகள் கூறுகின்ற முறைப்பாட்டினை ஏழுதரங் கேட்டு, அவர்கள் கூறியவற்றினின்றே, அன்னப்பறவை பாலைப் பிரித்து அருந்துதல்போல, நியாயத்தை நன்கு அறிந்துகொள்ளுதல்வேண்டும். இப்பூமியில் பொறுநிற் பொறுத்தாரும், கல்லாரிற் கற்றாரும், வைதாரில் வையாதாரும் மிகப்பெரியரென்பதை நன்கு அறிவாயாக. எவ்வகைப்பட்ட பிராணிகளுக்குந் துன்பஞ்செய்தல்கூடாது. ‘மடியறுத்துண்ணல்’ போல் குடிபறித்துண்ணல் தகாது. கொடுஞ்செயலுங் கடுமொழியும் நீக்கி, நல்வினையும் இன்சொல்லும் உடன்கொண்டொழுகுதல்வேண்டும். கொள்ளத்தக்கது நல்லோரிணக்கமென்றும், தள்ளத்தக்கது தீயோர்கூட்டுறவென்றும், உயிரையேனும் இரப்பது இழிவென்றும், ஈவது மேலென்றுந் துணிந்தறிவாயாக.

“அன்றியும், தேசம், சேனை, செல்வம், அமைச்சு, அரண், நட்பு என்ற இந்த ஆறு அங்கங்களையும் உடையவனே இராஜசிங்கம். வாகை, ஈகை, அறிவு, மனவெழுச்சி ஆகிய இக்குணங்களுள்ளவனே இராஜரத்தினம். பொருள் தேடல், சேர்த்தல், காத்தல், அவைகளை நல்வழியிற் செலவிடுதல் ஆகிய இவ்வினைகளை உடையவனே இராஜதீபம். பார்த்தற்கு எளிமையும், இரக்கத்தினின்சொலும் உள்ளவனே இராஜதிலகம். மநுமுறைவழாது மன்னுயிரோம்

பும் ஒருவனே இராஜதெய்வம். மந்திரிமுதலானவர்கள் நலம்பெறச் சினந்து கூறும் கூற்றுக்களைப் பொறுக்கும் வேந்தனே இராஜமேரு பூருவே! அரசர்க்குச் செங்கோலால் வரும் நன்மையும், கொடுங்கோலால் வருந் தீமையும் அளக்கற்பாலதன்று. ஆதலால், நீ பிரஜைகள் மெச்ச நீதி வழுவாது அரசுபுரிவாயாக'' என்று இங்ஙனம் பற்பல மொழிந்து, பிறகு, அவனுக்கு மகுடம்புனைந்து, தவம்புரிய வனத்திற்குச் சென்றனன்.

இங்ஙனம் உறுதிமொழியுரைத்துக் கானகஞ் சென்று அந்த யயாதி, அளவற்றகாலம் கணக்கிடமுடியாத ஜப தப விரத யாகங்களும், பல்வகை அறங்களும் புரிந்தவனாகி, இறுதியில், இந்திராதி தேவர்கள் எதிர்வந்து உபசரிப்பக் கற்பகநாடடைந்து, அங்கேயே பலகாலம் வாழ்ந்து இன்புற்றிருக்கையில், ஓர்நாள் மகபதி அந்த யயாதியை நோக்கி, "ஓ மகிபதி! நீ நெடுங்காலமாக இந்தத் தேவலோகத்திலே வாசஞ்செய்யுமாறு எந்தெந்தத் தருமங்களைப் பூலோகத்திற் புரிந்தனை?'' என, வேந்தன் அந்த வலாரியின் விரகை அறியாது, தமோகுணத்தால் செருக்குற்று, "ஓ சுரபதி! ஆற்றுமணலை அளவிட்டாலும், ஆகாயமீனைக் கணக்கிட்டாலும், என்னாற் செய்யப்பட்ட தருமங்களை எவராலுங் கணித்தல் இயலாது. விரிவாக யான் கூறுவதென்னை? திரிலோகங்களிலும் என்னைப்போல் தருமஞ்செய்தவர் எவருமில்லையென்பது திண்ணம்'' எனக் கூறி முடித்தலும், கற்பகவேந்தன், அவனை நோக்கி, "அரசே! நீ செய்த தருமங்களைக்குறித்து நீயே புகழ்ந்துபேசினை; ஆதலால், உனக்கு இந்தத் துறக்கம் இனி இடங்கொடாது; பூலோகத்தை நோக்கி விழக்கடவை'' என்று உரைத்துக் கீழே தள்ளி விட்டான். அப்பொழுது யயாதி, சகிக்கமுடியாத வருத்தத்

துடன் அத்தேவர்பிரானை வணங்கி, "நல்ல சத்துக்கள் வாசஞ்செய்யுமிடத்திலேனும் விழும்படி கிருபைசெய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்க, அவனும் "அவ்வாறே ஆகுக" என்றனன். உடனே யயாதி, பூலோகத்திலே சத்துவகுணப்பிரதானராகிய தபோதனரது மத்தியிலே இழிந்து, பழையபடி மீட்டும் அறம்புரிந்து வாழ்வுற்றனன்.

"கற்றனவும், கண்ணகன்ற சாயலும், இற்பிறப்பும்,
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும்; தானுரைப்பின்,—
மைத்துனர் பல்கி மருந்தின் தணியாத
பித்தனென் றெள்ளப் படும்."——நாலடியார்.

---

## "ஊக்கமது கைவிடேல்."

இதன்பொருள், விடாமுயற்சியைக் கைவிடாதே என்பதாம்.

ஊக்கமென்பது மனவெழுச்சி. இஃது இல்லாதார் மற்றென்னுடையரேனும் இலரேயாவர். ஊக்கமுடையாரைச் செல்வம் வழிகேட்டு வந்தடைகின்றதாதலால், அவர்பால், தரித்திரமென்னும் பேய் ~~பிசாசு~~ அடுப்பதேயில்லை. நீரளவே நீராம்பல் உயர்தல்போல, ஊக்கத்தினளவே ஒருவர்க்குச் செல்வம் மிகுகின்றது. போர்முகத்தில் மத்தகஜம் வாளியாற் புண்பட்டவிடத்தும் மனந்தளர்ந்து பின்னோக்காது பொருது வெற்றிபெறுதல்போல, இவ்வுலகத்தில் ஊக்கமுடையார், மிடியால் இடியுண்டகாலத்தும், சிறிதும் மனந்தளராது, எவ்வாற்றானும், அடையத்தகுவனவற்றை அடையாதுவிடார். இப்புவியில், ஊக்கமுடையார்க்கு அடைதற்கு அரியதும், அஃதில்லார்க்கு அடைதற்கு எளியதும் யாதுமில்லை. மனவெழுச்சியுடையவர், ஊழையும் உப்புறங்

Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41


காண்பர். அவரது வல்லமையை அளவிட எவராலுமாவ தன்று. சோம்பலின்றி ஊக்கத்தோடு முயற்சிசெய்பவர், யமனையும் வெல்வர்; கடவுளையுங் காண்பர்; என்றால் வேறு அவர் பெறும் பேற்றைக்குறித்து யாம் புகல்வதென்னை?

## நீதிகதை—1

இம்மை மறுமை இரண்டிலும் தாழாத் தலைமையைத் தருவது தவமேயெனச் சந்ததமுந் துணிவுற்று, அதற்குரிய ஒழுக்கத்தினின்று சிறிதுந் தவறாது போதரும் முனிவர் குழாங்கட்கெல்லாம் முதன்மைபெற்றவராகிய மிருகண்டு மகாருஷியென்பவர், தமது உத்தமபத்தினியாகிய மருத்துவதியென்பவளுடன் இல்லறநடாத்திவருகையில், தமக்குப் புத்திரப்பேறின்மையால் மனக்கிலேசமுற்று, மனைவியுடன் கூறுவார்:—

“எனது அன்பிற்கிசைந்த நங்காய்! கேள்: எவ்வகையறத்தினும் முற்பட்டது இல்லறமே. அவ்வறவாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வமாவது மகப்பேறே. பிள்ளையில்லா இல்வாழ்க்கை, பிராணனில்லா உடல்வாழ்க்கையோடொப்பதன்றி வேறன்று. மகப்பேறில்லா மனிதர், பரந்த கல்விகேள்விகளும் விரிந்த செல்வச்சிறப்புக்களும் உடையராயினும், அவையனைத்தும் இல்லாதவரோடொப்பார். அருமந்த மைந்தரைப்பெறாத அபாத்திரரது வீட்டில், சத்பாத்திரர்கள் தாகசாந்திகூடச் செய்துகொள்வதில்லை. இதனால், நன்மக்களைப் பெறாதவர் மேன்மக்களாயினும், கீழ்மக்களாகவே மதிக்கப்படுகின்றனர் என்று அறிவாயாக. அன்றியும், தாம் பெற்றெடுத்த மக்களின் இனிய குதலைபோலும் ஒரு சங்கீதமும், அவரது சிறுகையளாவிய கூழ்போலும் மதுரித்த ஓர் அமுதமும், புழுதியாட்

டயர்ந்து விளங்கும் ஆங்கவர்தம் மேனியைக் காண்டல் போன்ற கண்ணுார்ந்த ஓர் இனிய காட்சியும், அவர் உச்சி போல் ஒழியாது நறுநாற்றம் நல்குவதாகிய ஓர் நறுமலரும், அவரது மெல்லிய மேனியைத் தழுவல்போற் பனிப்பும் மயிர்ச்சிலிர்ப்பும் இன்பமுந் தரத்தக்க ஓர் இனிய கலவையும் எங்குமேயில்லை. இதுபற்றியே, "அமுதினும் ஆற்ற இனிதே; தம்மக்கள், சிறுகை அளாவிய கூழ்", "மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர், சொற்கேட்டல் இன்பஞ்செவிக்கு", "குழலினிது யாழினிது என்ப; தம்மக்கள், மழலைச்சொற் கேளாதவர்" எனப் பலவும் ஆன்றோர் மொழிந்துள்ளார். குழவியில்லா மனிதர், இம்மை மறுமை இரண்டிலும் இன்புறுவதில்லை.

> "கல்லா மழலை கனிந்தூறல் கலந்து கொஞ்சும்
> சொல்லான் மயக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
> மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
> இல்லாதவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்?"

என்ற ஆன்றோரது கவியின் கருத்தை ஊன்றிப்பார். மலடர் புத் என்னும் நரகத்திற்கு நாற்றங்காலாகின்றனரென்று உலகத்தினர் எண்ணி, தமது உடைமைகளையெல்லாந் தியாகஞ்செய்தாயினும், ஓர் செல்வக்குழந்தையை அடைதல் வேண்டுமெனப் பிரயாசப்படுகின்றனர். ஆதலால், நாமும் நமது மகப்பேறில்லாச் சிறுமையை நீக்கிக்கொள்ளுதலே உசிதமாகும்" எனப் புகன்று, அவளுடன் வனஞ்சார்ந்து, ஸ்ரீஸாம்பசிவமூர்த்தியைக் குறித்துத் தவஞ்செய்யத்தொடங்கினர்.

மகப்பேற்றைக் கருதிய மிருகண்டு மஹாமுனிவர், பொறிகள் போம்வழி மனஞ்செல்லாது தியானவழியில் நிலைநிற்குமாறு, உண்டிசுருக்கல் உறக்கநீத்தல் முதலிய

அரிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு, பனிக்காலத்திலும் மழைக்காலத்திலும் மார்பளவு தண்ணீரிலும், கோடைக் காலத்தில் பஞ்சாக்கினிமத்தியிலும் நின்று, தமது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீகங்காதரமூர்த்தியை உள்ளத்தாமரையில் எழுந்தருளுவித்து, வந்தனை வழிபாடியற்றி, பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை ஜபித்துக்கொண்டிருக்கும் வாயினராய், நெடுங்காலம் சிலைபோலவும் சித்திரம்போலவும், நிலைபெயராது நின்று தவம்புரிவாராயினர். இவரது நிலையை உணர்ந்த சிவபிரான், விருஷபாரூடராய் அம்முனிவரர் முன்னிலையில் எழுந்தருளி, "தபோதனரே! உமது தவத்திற்கு உவந்தோம்; வேண்டும் வரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று உரைத்தருளலும், மிருகண்டு ஆனந்தபரவசராய் அப்பெருமானை வலங்கொண்டு வணங்கிப் போற்றிப் புகழ்ந்து, "சுவாமி! அடியேனுக்குப் புத்திரப்பேற்றை அருளல்வேண்டும்" என்றனர். ஸ்ரீசங்கரமூர்த்தி அவரை நோக்கி, "சர்வசாஸ்திரபாரங்கதனும், அத்தியாபகனும், தவத்தாலும் அறிவாலும் குணத்தாலும் மற்றுமுள்ள எல்லாநலங்களினாலும் உலகமெல்லாம் போற்றத்தக்கவனுமாகிய பதினாறளவே ஆயுளுடைய சத்புத்திரன் ஒருவன் வேண்டுமா? அல்லது, கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆசாரம் முதலிய நலங்களில் ஒன்றுமில்லாத தீர்க்காயுளுள்ள புத்திரர்பலர் வேண்டுமா? இரண்டிலொன்று மொழிவாயாக" என்றருள, முனிவர் எண்ணமிடலாயினர்:—

"இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வமாவார் புத்திரரே. ஆயினும், அவர்கள் மூடராயின், அவ்வறவாழ்க்கை மறவாழ்க்கையாய் முடியுமென்பதற்கு ஐயமுமின்று. "அச்சமுள்ளடக்கி அறிவகத்தில்லாக், கொச்சைமக்களைப் பெறுதலின், அக்குடி, எச்சமற்று ஏமாந்திருக்

தை நன்றே'' என்றபடி, குலநாசம், திரவியநஷ்டம், அபகீர்த்தி, பிராணசங்கடம் இவைகளுக்கு ஏதுவாகிய துஷ்ட சந்ததியை ஒருவன் அடைதலினும், அபுத்திரவானயிருப்பதே நலமாகும். பொல்லாத பிள்ளைகளின் பிறப்பினால், ஒருவனது மூவேழுதலைமுறைகள் நரகத்தையும், நல்லபிள்ளைகளின் ஜனனத்தால் மோக்ஷத்தையும் அடைகின்றனவெனச் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆதலால், நீண்ட ஆயுளும் துர்ப்புத்தியுமுள்ள பிள்ளைகள் ஆயிரம் பெறுதலினும், அற்பாயுளும் நல்லறிவுமுள்ள சிறுவனொருவனை அடைதலே சிறப்புடைத்து'' எனத் துணிந்தவராகி, மீட்டும் அக்கடவுளை வணங்கி, "சந்திரசேகரா! சின்னாள் வாழ்க்கையை உடையனேனும், உத்தமகுணமுள்ள புத்திரனொருவனையே அடியேன் அபேக்ஷிக்கின்றேன். பாலித்தருள்க'' என்றுரைத்தனர். உடனே கருணைக்கடலாகிய பிறைசூடி, அம்முனிவரர்க்கு அவ்வாறே வரமருளி மறைந்தனர். அப்பால் முனிவரும் பத்தினியும் ஸந்தோஷத்துடன் தமதிடஞ் சார்ந்து வசிப்பாராயினர்.

இங்ஙனஞ் சிலநாள் செல்ல, மருத்துவதி கர்ப்பமுற்றனள். அவளது ஆலிலைபோன்ற அடிவயிறு மெல்லமெல்லப் பருக்கலாயிற்று; தோன்றா இடையும் தோன்றுவதாயிற்று; அவளுடைய தோளிணைகள் இளைத்தன; மெய்ந்நிறை நரம்பனைத்தும் பசுமைநிறங் காட்டின; அவளது வதனமும் வெளுத்தது; நாளடைவில் சூலும் முதிர்ந்தது. சுபமுகூர்த்தத்தில் மருத்துவதி அழகிற் சிறந்த ஓர் ஆண்மகவை ஈன்றனள். மலடுநீக்கிய அக்குழவியைக் கண்ணுற்ற முனிவர்க்கு அக்காலத்தில் உண்டான களிப்பை எவர்தாம் அளவிடவல்லார்? அவரினும் அவர் மனைவி மிகக் களிப்பெய்தினள். அவ்விருவரும் அச்செல்வப் புதல்வர்க்கு

மார்க்கண்டேயர் என்று நாமகரணஞ்செய்து, தமது கண்மணிபோற் கருதி வளர்த்துவருவாராயினர். அந்த மார்க்கண்டேயரும், மாரிக்காலத்து வாழைக்குருத்தேபோல, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமும் வளர்ச்சியுமாகப் பொலிவுற்றனர். அவர்க்கு வயது ஐந்தாயிற்று. அப்போது அவர் அக்ஷராப்பியாசஞ் செய்விக்கப்பெற்றனர். அப்பால், உபநயனச்சடங்கும் நிறைவேறியது. பிறகு சில்லாண்டுகளில், அவர், வேத சாஸ்திரங்களனைத்திலும் தேர்ச்சிபெற்றனர். ஞானம், தவம், ஈவு, இரக்கம், பூதயை, நல்லொழுக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரிடத்தில் நிறைந்திருந்தன. ஆதலால், அவரை, உலகத்திலுள்ள பெரியோர்கள், "உத்தமோத்தமராகிய இந்த மார்க்கண்டேயரைப் பெறுதற்கு இவரது மாதாபிதாக்கள் எத்தகைய தவத்தை இயற்றினரோ?" எனவும், "பிள்ளை பெற்றால் இந்த மார்க்கண்டேயரைப்போன்ற பிள்ளையையே பெறவேண்டும்" எனவும் பற்பல புகழ்வாராயினர். தனது குமாரர் ஸபாரத்தினமாய் விளங்குதலைக் கேட்ட மருத்துவதி, தான் முன் அவரைக் கருவுயிர்த்த காலத்தில் அடைந்த களிப்பினும் பன்மடங்கு அதிகமான ஆனந்தத்தை அனுபவித்தனள். இங்ஙனமாக, மார்க்கண்டேயருக்கு வயது பதினைந்தாயது. பதினாறும்பிராயம் ஆரம்பித்தலும், அதனிறுதியில் தமது குமாரருக்கு வந்துறுவதாகிய மரணபத்தை நினைந்துநினைந்து, மருத்துவதியும் அவர்தலைவரும் கண்ணீர் ஆறாய்ப் பெருகக் கதறி அழுவாராயினர்:—

"ஐயோ! நமது அருமைச்சுதனுக்கு மணமடிக்குங் காலத்தில் மரணமடிப்பதாயிற்றே! கண்ணுதற்பெருமான் அளித்தவரம் சிறிதும் தவறாதே! 'எமது அருமந்த காதலனது ஆருயிர்க்கீடாக, அடியோங்களது ஆவியை அபகரித்

துக்கொள்வாயாக' என்று கெஞ்சிக்கெஞ்சி வேண்டிக் கொண்டாலும், அந்த அந்தகன் அவ்வாறு செய்யானே! அந்தோ! அந்தோ!! தெய்வமே! இனியாம் என்னசெய்யப் போகின்றோம்? ஒருகணப்பொழுதும் விட்டுப்பிரியாத காளையைக் காலனுக்கு இரையாக்கி, எவ்வாறு உயிர் தரித்திருப்போம்! புத்திரசோகத்தாற் புழுங்குவதினும் அக்கினிப்பிரவேசஞ்செய்து ஆவியை மாய்த்துக்கொள்ளு தலே நலம்'' எனப் பலவாறு புலம்பி, துக்கசாகரத்தில் மூழ்கலாயினர்.

இவ்வாறு இருமுதுகுரவரும் துக்கபரவசராயிருத்த லைக் கண்ணுற்ற மார்க்கண்டர், அவர்களை வணங்கி, ''உங் கள் துக்கத்திற்குக் காரணம் யாது?'' என வினவலும், அவர்கள், அவரை எடுத்து மார்புறத் தழுவிக் கண்ணீராற் கழுவி, ''அப்பா! குழந்தாய்! மார்க்கண்டா! எமது தவத் திற்கு உவந்த சிவபெருமான், உன்னை எங்கட்கு அளித்த நாளில், உனக்கு வயது பதினறெனக் கூறி மறைந்தனர். ஆதலால், இன்னுஞ் சில்பகலில் உனக்கு உறுவதாகிய சாக் காட்டை உன்னியுன்னி எமது உள்ளம் தவிக்கின்றன'' என விடையளித்தனர். உடனே பாலகர், அவர்களை நோக்கி, ''முதியோரே! நீவிர் நுமது முயற்சியால் என்னை அடைந்ததுபோல, யானும் எனது முயற்சியால் தீர்க்கா யுளை அடைவேன். உமது பிள்ளைக்கலியைத் தீர்த்த பெரு மானே, எனது அகாலமரணத்தையும் நீக்குவன். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்று உரைத்து, அவரது கண்ணீரை மாற்றி விடைபெற்று, சிவாலயந்தோறுஞ் சென்று, பக்தி பூர்வமாக அர்ச்சித்து வணங்குதலையே ஓர் விரதமாகக் கொண்டொழுகுவாராயினர்.

இறுதியாக, மார்க்கண்டர் வாரணாசிசார்ந்து, ஸ்ரீவிசுவநாதப்பெருமானுக்குத் தமது பரிசுத்தமான திரிகரணங்களாலும் வந்தனைவழிபாடியற்றிவருகையில், அவரதுமுடிவு காலத்தைக் கருதிய தருமராஜன், அவராவியைக் கவர்ந்து வருமாறு சிலதூதரை ஏவ, அவர்கள் காசிசென்று, மார்க்கண்டமுனிவர்ஞானவைராக்கியஸம்பன்னராய்ச் சிவபூசையாற்றிவருதலைக் கண்ணுற்று நடுநடுங்கி, அவர்சமீபத்திலுங்கூடச் சென்றடைவதற்கு மிகவும் அஞ்சி மீள்வாராயினர். அஃதறிந்தஅந்தகன், "யானேசென்று அம்முனிகுமாரனது ஆவியை அபகரிப்பேன்" என்றுரைத்து, மகிஷாரூடனாய் வெளிப்பட்டு, மார்க்கண்டேயரது முன்னிலையிற் சென்று, அவரை நோக்கி, "அடே! தவச்சிறுவா! நீ என்ன பூஜை செய்துகொண்டிருக்கிறாய்? இப்படியிருந்தால் வரும் சாக்காடு நீங்கிவிடுமென்று நினைத்தாய்போலும். இது மிகவும் விந்தையே. எம்மை நீ இன்னும் அறிந்தாயில்லை. உனது உயிரைக் கொள்ளைகொள்ள வந்த கூற்றுவனென்று என்னை அறிக. உனது வாழ்நாள் சென்றுபோயது. நீ இப்பொழுதே எம்முடன் எம் உலகத்திற்கு வருவாயாக" என, மார்க்கண்டர் கூறத்தொடங்கினர்:—

"தருமனே! யான் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் சிவபூஜைக்கு இடையூறுசெய்கின்றனை; இஃது உனக்குப் பெரும்பாதகமே. உண்மையான சிவனடியாரது ஆயுளை அளக்க எவராலும் இயலாதென்றும், அவர் எண்ணிய எண்ணியாங்கு இனிதின் எய்துவர் எனவும் இன்னும் நீ அறியவில்லை. யான் எனது பெருமானை விட்டுக் கணப்பொழுதும் பிரியவேமாட்டேன். உன்னுடன் வரத்தக்கவன் யானல்லேன். வந்தவழிநோக்கிச் செல்லக்கடவை" என்றனர். அதுகேட்ட தென்றிசைக்கோன், அவரை

நோக்கி, "மார்க்கண்டா! நீ கல்வியாற் பெரியவனாயினும் சிறுபிள்ளைத்தன்மை இன்னும் உன்னைவிட்டு நீங்கவில்லை. என்னால் அபகரிக்கப்படாத ஜீவனும் உளதோ? எத்தனையாக்கராயினும், சித்தராயினும், வல்லராயினும், செல்வராயினும் யான் அவரது வாணாளை வவ்வியே செல்வேன். தடைசெய்பவரெவராலும் இயலாது. என்னால் இறந்த பிரமாதி தேவர்களுக்கு ஓரளவில்லை. இங்ஙனமாக, என்னைப் பேர வென்று வெறுத்துரைக்கின்றனை! எல்லாம் அறிந்த பெரியோர், உடம்பெடுத்த உயிர்கட்கெல்லாம் மரணம் பொதுவேயென்று மதித்து, எனது வரவை எதிர்பார்த்தவண்ணமாக இருக்கின்றனர் அவர்கள், சாவைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். நீயும் அவ்வாறு கொள்ளுதலே தகுதி" என நயமொழிபல தொடுத்தலும், மார்க்கண்டர், "சிவனடியவர்க்கு மரணமே இல்லை" என மறுமொழிகொடுத்தனர். உடனே யமன், அடக்கமுடியாத கோபத்துடன் அட்டகாசஞ்செய்து, பாசத்தை வீசி மார்க்கண்டரையும் அவராற் பூசிக்கப்பட்ட மஹாலிங்கத்தையும் சேரப் பிணித்து ஈர்த்தனன்.

உடனே மார்க்கண்டர், அந்த விசுவநாதராகிய லிங்கமூர்த்தியைத் தமது கரங்களாற் கட்டிக்கொண்டு, "மஹாதேவா! சங்கரா! சதாசிவா! சாம்ப பரமேசுவரா! அநாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! பக்தபராதீனா! திரிபுரதகனா! உம்மை அடுத்தார்க்கும் உளதோ மரணம்? அடியேனுக்கு இப்பொழுது அடுத்திருக்கின்ற யமபாசத்தைத் தவிர்க்க வல்லவர் உம்மையன்றி வேறு யாரிருக்கின்றனர்? நீரே சரணம். நீரே கதி. காத்தருள்வீராக, காத்தருள்வீராக" என்று பலவாறு தோத்திரித்தனர். உடனே ஸர்வஜீவ தயாபரராகிய சிவபெருமான், அந்த லிங்கத்தினின்று

வெளிப்பட்டு, காலனைக்காலால் உதைத்துத்தள்ளி, முனிபுத்ரர்க்கு என்றும் பதினாறுவயதுடன் இருக்க வரமருளி, கீழே விழுந்து கிடந்த தருமனை அழைத்து, "நீ இன்றுதொட்டு எம் அடியவர்பால் நெருங்காதொழிக" என்று கூறி மறைந்தனர். பின்னர், மார்க்கண்டேயரும் புறப்பட்டுச்சென்று, தமது மாதாபிதாக்களை வணங்கிச் சுகமுற்று வாழ்வாராயினர்.

"உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே:—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி."——நீதிநெறிவிளக்கம்.

---

## நீதிகதை—2

நிலவளம் ஜலவளம் முதலிய பலவகைவளமும் மல்கிப் பொலியும் அயோத்திமாநகரில் பகீரதன் என்னும் பார்த்திவன் செங்கோல் செலுத்திவந்தான். அவனது ஆளுகையில், உலகத்தில், அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி, பாலிய மரணம், பஞ்சம் முதலியன நிகழ்ந்ததேயில்லை. பிரஜைகள் யாவரும் தந்தம் தந்தையைப்போல் அவனைப் பாவித்து நேசித்தனர். அதனால், அந்தப் பகீரதன், பூலோக தேவேந்திரன்போல் சிறந்து, சுகித்து வாழ்வானாயினன். எனினும், ஒருதுக்கம் மாத்திரம் அவனது உள்ளத்தைவிட்டு நீங்காது வருத்திக்கொண்டிருந்தது. அது யாதென்றால், அவனது மூதாதையராகிய சகர குமாரர்கள் அறுபதினாயிரவரும் கபிலமுனிவரது கோபாக்கினியால் எரிந்து சாம்பராய் நற்கதி பெறாமையைப் பற்றிய சிந்தை

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWA[illegible]NATHA IYER LIBRARY

பகீரதமன்னவன், பிரபிதாமகராகிய ஸகரகுமாரரின் ஸத்கதியின் நிமித்தம் தேவகங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டுவரத் தனது பாட்டனாகிய அம்சுமானும், பிதாவாகிய திலீபனும் முடியாமற்போனதைத் தெரிந்து, சிந்தாக்கிராந்தனாய்ச் சிலநாள் வருந்தி, பிறகு ஒருவாறு மனந் தேறி, "எப்படியாவது மூதாதையரை வான்கதியிற் சேர்த்தல்வேண்டும்" எனத் துணிவுற்று, அமைச்சர்கள் வசம் இராச்சியத்தை ஒப்பித்து, கோகர்ணவரையைச் சார்ந்து, உண்டி உறக்கங்களை நீத்து, மனத்தை ஒருவழிப் படுத்தி, பிரமதேவனைக்குறித்துப் பல்லாண்டு இடைவிடாது தவம்புரிய, அக்கடவுள் அவன்முன் தோன்றி, "வேண்டுவதென்னை?" என, அரையன், அவரை வணங்கி, "சதுரானனரே! எனது மூதாதையராகிய சகரகுமாரர், கபிலமுனிவரதுகோபாக்கினியால்வெண்ணீற்றுக்குவியலாய்விட்டனர். அந்நீற்றுக்குவியலின்மீது பரிசமாகி அன்னோர் நற்கதியடையவும், அடியேன் அவர்களைக்குறித்துத் திலதர்ப்பணஞ் செய்யவும், தேவகங்கை பூலோகத்திற்கு வருமாறு அருளுக; மற்றும், சூரியகுலம் வளர்ந்தோங்குமாறு இவ்வேழையேன் ஒருபுத்திரசந்ததியை அடையும்படியும் கிருபைசெய்தருள்க" என்று பிரார்த்திக்க, கமலாசனர், அவனை நோக்கி, "வேந்தே! நீ வேண்டிக்கொண்டனவெல்லாம் நிறைவேறுக" என்றருளிச்செய்து, தமதிடஞ்சார்ந்தனர்.

அப்பால், பகீரதன் இமாசலஞ்சார்ந்து, கங்காதேவியைநோக்கி வெகுகாலம் தவமியற்றிவருகையில், அத்தேவி அவன்முன் பிரசன்னையாகி, "அபேக்ஷை யாது?" என, திலீபபுத்ரன் அந்த அம்மைக்கு வந்தனோபசாரங்கள் இயற்றி அருச்சித்து, "அம்மையே! எனது மூதாதையர் கபிலமுனிவரது சினக்கனலாற் சாம்பற்குவியலாயினர். அதனை

நினைத்துப் பரிசுத்தமாக்கி, அவர்கள் வான்கதிபெறுமாறு பூலோகத்திற் பிரவகித்தருளல்வேண்டும்'' என வேண்ட, அந்தக் கங்காதேவியும் அவ்வரசனை நோக்கி, "நீ வேண்டியபடி யான் பூலோகத்திற் பிரவகிக்கத் தடையில்லை. ஆனால், யான் வானுலகத்தினின்று இழியுங்கால் என்னைத் தாங்கிக் கீழே மெல்லென விடும் வலிமை வாய்ந்தவர் யார்? அத்தகைய ஒருவர் உளராயின், அவரை இங்கு அழைத்து வந்து எனக்கு அறிவிப்பாயாக'' என்று உரைத்துச் சென்றனள்.

அதுசெவியுற்ற திலீபபுத்ரன் சற்று மனச்சோர்வுற்று, "நாம் என்னசெய்வோம்? பிரமதேவரைக்குறித்துப் பல காலம் தவம் புரிந்தோம். அவர், 'உனது எண்ணம் நிறைவேறும்' என்று உரைத்து மறைந்தனர். பிறகு கங்காதேவியைக்குறித்துத் தவம்புரிந்தோம். அவள், 'என்னைத் தாங்கிக் கீழே விடத் திறமுள்ளவர் உளராயின் அழைத்து வருதி' என்று சொல்லிவிட்டுப் போயினள். இனி யாம் என்செய்வோம்? கங்கையைத் தாங்குமாறு எவரை வேண்டியழைப்போம்? எடுத்த காரியத்தை முடிக்கும்பாக்கியம் நமக்குக் கிட்டாதுபோலும்'' எனச் சிறிதுபொழுது எண்ணமிட்டிருந்தனன்; பிறகு, "உலகத்திற் கற்றறிந்த முதியோர் அரியபெரிய காரியங்களையே செய்யத்தொடங்குகின்றனர் என்றும், அவற்றைத் தொடங்குமுன்னரே, அவர்கள், எடுத்துக்கொள்ளும் முயற்சியின் தன்மையையும், செய்துமுடிக்கும் முறைமையையும், அதற்கு உறும் இடையூற்றையும், அதனை நீக்கிக்கொள்ளும் நெறியினையும், முடிவில் உறும் ஊதியத்தையும் நன்கு கவனித்துக்கொள்கின்றனர் என்றும், அங்ஙனங் கவனித்து வினைபுரியாநிற்கையில் தாம் பிடியால் இடியுண்டாலும், நோயால் தேய்வுறினும், வேறு எவ்வகைப்பட்ட இடையூறுகள் வந்தடுக்கப்

பெற்றாலும், தமது உயிர்க்கே துன்பம் வருவதாயிருந்தாலும், அவர்கள் எடுத்துக்கொண்ட காரியத்தை இடையில் விட்டுவிடுவதேயில்லையென்றும்,

> "மெய்வருத்தம்பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
> அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்;
> கருமமே கண்ணாயினார்"

என்றபடி எடுத்துக்கொண்ட காரியத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்து சாதித்தலைசெய்வாரென்றும், எடுத்த காரியத்தை இடையில் விடுபவன் மக்கட்பதடியாவானென்றும் தேர்வுற்று, தேவகங்கையைத் தாங்கி விடுபவர் சிவபெருமானேயெனத் துணிந்து, அவரை நோக்கிப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று மற்றெவராலுஞ் செய்தற்கு அரிய பெருந்தவத்தை நெடுங்காலம் செய்தனன். அத்தவத்திற்கு இரங்கி அக்கடவுளும் அவன்முன் ஆவிர்ப்பவித்து, "பகீரதா! உன்னைப்போல் உலகத்தில் ஒருவருந் தவஞ்செய்ததேயில்லை, உனக்கு வேண்டுவது என்னை?" என்று வினவலும், தராதிபன் அந்தத் திரியம்பகரை வணங்கித் துதித்து, "ஸகர குமாரரது ஸத்கதியின்பொருட்டுத் தேவகங்கையைப் பூதல நோக்கி வீழ்தரப் பிரார்த்தித்துள்ளேன். வீழுங்கால் அவளைத் தாங்கியருளவேண்டும்" என்றான். அப்பெருமானும். "அவ்வாறே செய்கின்றனம்" என்று அருளி, இமயவரை மீது நின்றருளினர். கங்கை, 'நம் சக்தியைத் தாங்கத்தக்க வலியோனும் உளனோ?' என்று,மிகவும்வேகமான பிரவாகத்துடன், செருக்குற்று அவரது ஜடாமகுடத்தின்மேல் வீழ்ந்தனள். பெருமான் அந்தச் சுரநதியின் செருக்கை அடக்கத் திருவுளங்கொண்டு, அதன் பிரவாகமனைத்தையும் ஓர் அறுகம்புல்லின் நுனியில் தங்கும் பனித்துளிபோல் தமது

சடையிலுள்ள ஓர் உரோமத்தின் முனையில் தங்கும்படி செய்துவிட்டனர். பலநாட்கள்சென்றும், ஒருதுளிப்புன லும் பூமியில் வீழ்ந்திலது. அதுகண்ட மன்னவன், "நல்ல காரியத்திற்கு இடையூறு நாலாயிரம்" என்ற பழமொழி என்செய்தியில் உண்மையாயது" என்று, அளக்கமுடியாத மனக்கவலையுடையவனாய்ச் சோர்வடைந்தனன்; ஆயினும். ஊக்கத்தை விடாமல், சந்திரசேகரப்பெருமானைப் பல நாள் பலவாறு துதித்துவேண்டிக்கொண்டனன். அப்பிரா னும் அவன்மீது இரக்கங்கொண்டு, அக்கங்கையின் பிரவா கத்திற் சிறிது கீழ்வழிந்து பெருகுமாறு விட்டனர். உடனே அத்தேவகங்கையைப் பகீரதன் அழைத்துச்சென்றனன். அவ்வாறு செல்லுகையில், இடையிலுள்ள ஜன்னுமுனிவ ரது ஆச்சிரமத்தை அந்நதி அழித்தலும், அம்முனிபுங்க வர், தமது தவவலியால் அப்பிரவாகமனைத்தையும் உட் கொண்டுவிட்டனர். பிறகு அவ்வரசன் அவரை வேண்ட, அத்தவசி, இரங்கி அந்நதிப்பெருக்கை, 'சான்னவி' என்ற பெயருடன் அப்பாற் செல்லவிடுத்தனர். பகீரதன் அந்தச் சான்னவியின் புண்ணியதீர்த்தத்தினால் சகரகுமாரரின் சாம் பர்க்குவியலை நனைத்துப் புனிதஞ்செய்து, நீர்க்கடனும் நல்கி, அவர்கள் யாவரும் மேலான பதத்தை அடையும் படி செய்து, மகிழ்வுற்றுத் தன்னகரடைந்து, ஸகலபோகங் களுடனும் வாழ்வானாயினன். இதனால், உலகத்தில், 'பகீரத ப்ரயத்தனம்' என்ற ஓர் பழமொழியும் வழங்குகின்றது, ஊக்கமுள்ள அந்தப்பகீரதன், தன்பெயர் சம்பந்தமாக அந்தக் கங்கை 'பாகீரதீ' என்று போற்றப்படும்படி கௌரவமுற்றான்.

"முயற்சி திருவினை யாக்கும்."—திருக்குறள்.

## "எண்ணெழுத் திகழேல்."

இதன்பொருள், தருக்கநூலையும் இலக்கணநூலையும் இகழாதே என்பதாம்.

உண்மைப்பொருளைக் காணுதற்கு இன்றியமையாதனவாகிய நயனங்கள், தர்க்கநூலும் இலக்கணநூலுமேயாம். இத்துணையைப் பெற்றாரே கண்துணையைப் பெற்றாராவர். இங்ஙனமாக, சிலர், "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு," "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்" என்னும் இந்த மொழிகளை எறிந்து, 'அந்நூல்களால் என்ன உபயோகம்?' எனவும், 'அவையின்றி வாழ்க்கை அமையாதோ?' எனவும், 'அவைகளைக் கற்றதனால் வருவது தொன்மைப்புண்ணையன்றி வேறில்லை' எனவும் பலபட இகழ்ந்து, தமது வாழ்நாண்முழுதும் விழலுக்கிறைத்த நீராக்குகின்றனர். மற்றுஞ் சிலர், அளவிறந்தன கற்றும், உண்மைகாணப் புக்குழி, நடுவுநிலைமைக்கும் கற்ற நான்முறைக்கும் பொருந்த வாதஞ்செய்யாது, நினைவபதராய்ச் செருக்குற்று, 'நின்றதே நிலை,' 'கொண்டதே கொள்கை,' 'பார்வைக்கு நேரே பாட்டை,' 'நாம்பிடித்த முயலுக்கு மூன்றே கால்' எனப் பிடிவாதஞ்செய்கின்றனர். அதனால் அவர்கள் பலவழியாலும் துன்புறுபவராகின்றனர்.

### நீதிகதை—1

தென்றலுந் தமிழும் ஒன்றிக் கலந்து மன்றல்கமழ்கின்ற பாண்டிநாட்டிலே மதுரையம்பதியில், வங்கியசூடாமணியென்ற ஒருபாண்டியன் செங்கோல் செலுத்தி வந்தனன். அவன், செல்வப்பெருக்குப்போற் கல்விப்பெருக்கும் உள்ளவன். அவன், ஓர்நாள், தனது இல்லக்கிழத்தியுடன் மேன்மாடத்தில் உலாவாநிற்கையில், ஓர் அரிய நறுமணம்

[illegible]

[illegible]

[illegible]

"[illegible]
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்,
மயிலியல் செறியெயிற் றரிவை கூந்தலின்,
நறியவு முளவோ நீ அறியும் பூவே" *

* (இப்பாசுரத்தின் பொழிப்புரை) — மணமாராய்தலை வாழ்வாகவுடைய அழகிய சிறகுடைய வண்டே! நீ அறியும் மலர்களில், பழகிய மிக்க நட்பால் விருப்பங்கொண்டு பொய்யுரையாமல், கண்டவுண்மையைக் கூறுக: மயிலின் சாயலும் நெருங்கிய பற்களுமுடைய பாண்டியன்தேவியாரது கூந்தல்போல நறுமணம் வீசும் மலர்களுமுளவோ (என்றவாறு.)

## "எண்ணெழுத் திகழேல்."

இதன்பொருள், தருக்கநூலையும் இலக்கணநூலையும் இகழாதே என்பதாம்.

உண்மைப்பொருளைக் காணுதற்கு இன்றியமையாதனவாகிய நயனங்கள், தர்க்கநூலும் இலக்கணநூலுமேயாம். இத்துணையைப் பெற்றோரே கண்துணையைப் பெற்றோராவர். இங்ஙனமாக, சிலர், "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு," "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" என்னும் இதமொழிகளை எறிந்து, 'அந்நூல்களால் என்ன உபயோகம்?' எனவும், 'அவையின்றி வாழ்க்கை அமையாதோ?' எனவும், 'அவைகளைக் கற்றதனால் வருவது தொண்டைப்புண்ணேயன்றி வேறில்லை' எனவும் பலபட இகழ்ந்து, தமது வாழ்நாண்முழுதும் விழலுக்கிறைத்த நீராக்குகின்றனர். மற்றுஞ் சிலர், அளவிறந்தன கற்றும், உண்மைகாணப்புகுழி, நடுவுநிலைமைக்கும் கற்ற நூன்முறைக்கும் பொருந்த வாதஞ்செய்யாது, தீவினைபயந்தாராய்ச் செருக்குற்று, 'நின்றதே நிலை,' 'கொண்டதே கொள்கை,' 'பார்வைக்கு நேரே பாட்டை,' 'நாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' எனப் பிடிவாதஞ்செய்கின்றனர். அதனால் அவர்கள் பலவழியாலும் துன்புறுபவராகின்றனர்.

## நீதிகதை—1

தென்றலும் தமிழும் ஒன்றிக் கலந்து மன்றல்கமழ்கின்ற பாண்டிநாட்டிலே மதுரையம்பதியில், வங்கியசூடாமணியென்ற ஒருபாண்டியன் செங்கோல் செலுத்தி வந்தனன். அவன், செல்வப்பெருக்குப்போற் கல்விப்பெருக்கும் உள்ளவன். அவன், ஓர்நாள், தனது இல்லக்கிழத்தியுடன் மேன்மாடத்தில் உலாவாநிற்கையில், ஓர் அரிய நறுமணம்

தனது மனைவியின் கூந்தலினின்று வெளிப்படுதலைக் கண்டு, 'இவ்வாசனை பெண்களின் கூந்தற்கு இயற்கையோ? செயற்கையோ?' என ஐயுற்று, 'இவ்வையந்தீர்தர ஓர்கவி புனைந்துகாட்டும் கவிஞன் இதனைக் கொள்ளக்கடவன்' என்று, ஆயிரம் பொற்காசு பொதிந்த முடிப்பொன்றைச் சங்கத்தார்முன்னிலையிற் கட்டித் தூக்கினன். அப்பெரும்பொருள் அவாவிய புலவர்பலர், பற்பலவாறு பாட்டுக்கள் புனைந்து பாண்டியன்முன் சென்று காட்ட, அவையனைத்துந் தனது எண்ணத்தோடு மாறுபட்டமையின், அவன் அவைகளை மறுத்துவிட்டனன்.

இங்ஙனமிருக்க, ஆலவாய்ச் சோக்கலிங்கப்பெருமானுக்குத் திருவாராதனம்புரியும் அர்ச்சகர் தருமி என்பவர், அக்கடவுளை வணங்கி, "அநாதரக்ஷக! அன்பருக்கு எளியாய்! அடியேனை அடைந்திருக்கும் நல்குரவை அடியேன் அகற்றுதற்கு அரையனால் தொங்கவிடப்பட்டிருக்கும் பொற்கிழியைப்பெற அவாவினேன். அதனைப்பெறுதற்கு இயைவதோர் பாசுரம் அருளுதல்வேண்டும்" எனப் பிரார்த்தித்து நிற்க, கூடல்நாயகர் அவர்முன் தோன்றி,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின்,
மயிலியல் செறியெயிற்று அரிவை கூந்தலின்,
நறியவு முளவோ? நீ அறியும் பூவே." *

---

* (இப்பாசுரத்தின் பொழிப்புரை):—மணமாராய்தலைவாழ்வாகவுடைய அழகிய சிறகுடைய வண்டே! நீ அறியும் மலர்களில், பழகிய மிக்கநட்பால் விருப்பங்கொண்டு பொய்யுரையாமல், கண்டவுண்மையைக் கூறுக: மயிலின் சாயலும் நெருங்கிய பற்களுமுடைய பாண்டியன்தேவியாரது கூந்தல்போல நறுமணம் வீசும் மலர்களுமுளவோ? (என்றவாறு.)

என்ற பாடல் பொறித்த முறியொன்றை அத்தருமி கையிற் கொடுத்து, "நீ இதனைப் பாண்டியன்பாற் படித்துப் பரிசுபெறுதி" என்றருளி மறைந்தனர். உடனே அச்சிவத்துவிஜன், அக்கிழியைப் பெற்றான்போற் களிப்பெய்தி, பாண்டியன்பாற்சென்று அப்பாடலைப் படித்தனன். அவ்வேந்தனும், தன்கருத்தோடு பொருத்தமுற்ற பொருள் அமைந்திருக்கும் அப்பாசுரத்தைக் கேட்டு மெச்சி, அத்தருமியை நோக்கி, "நீர் இக்கவிதையைச் சங்கப்புலவரது அவைக்களம்சென்று சேர்ந்து அரங்கேற்றுவீராக" என, அவரும் அங்ஙனமே சென்று அரங்கேற்றினர். அச்செய்யுளைக் கேட்ட அவ்வவையிலிருந்த புலவர்கள்யாவரும், "இச்சொற்றாக்குடையானே, அப்பொற்றாக்குக்குமுரியவன்" எனப் புகழ்ந்தனர். அப்பொழுது அவருள் ஒருவராகிய நக்கீரர் என்பவர்மாத்திரம் தாமதகுணத்தால் தருக்குற்று, "இப்பாசுரம் மாசுடைத்து" என்று இகழ்ந்தனர். அதுகேட்ட தருமி, அளவில் அடங்காக் கவலையைக் கொண்டவராய், "அந்தோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போயிற்றே! நம்முடைய அதிருஷ்டமிருந்தவாறு என்னே!" என்றிங்ஙனம் பலவாறு பன்னி, அங்கு நின்று எழுந்து, ஸ்ரீசோமசுந்தரக்கடவுளின் சன்னிதியைச்சென்றடைந்து கடவுளை வணங்கி, "ஸ்வாமி! சிற்றறிவுஞ் சின்னாள்வாழ்க்கையுமுடைய அற்பமனிதன், பேரறிவும் பெருவாழ்க்கையுமுடைய தேவரீரது கவிக்குக் குற்றங்கூறினால், அடியேன் புகல்வதென்னே? தாங்கள் அருளிய பாசுரம் மாசுடைத்தென்று நக்கீரர் இகழ்ந்தனர். யான் பொருளிழந்தேனென்று வருந்துகின்றிலேன்; எம்பெருமான் வாக்கும் பழிப்புற்றதே! என்றே அடியேன் தவிக்கின்றேன்" என்று முறையிட்டனர். அதுகேட்ட சடைமுடிக் கடவுள் புன்னகைகொண்டு, அத்தருமியை அவைக்குச்

செல்லுமாறு உரைத்தருளி, தாம் ஒருபுலவர்வேடம்பூண்டு அவையிடஞ் சார்ந்து, "கோட்டமில்லாத கவிக்குக் குற்றங் கூறியவர் யார்?" என்ன, நாட்டியபுகழ் நக்கீரன், "யானே" எனத் தருக்கிச் சொன்னான். உடனே கடவுள், "குற்றம் யாது?" என, புலவர், "புலால் பொதிந்த மேனியை யுடைய பெண்களின் குழலுக்கு மணம் இயற்கையதன்று; செயற்கையதே; ஆதலால், இக்கவி இல்லதுகூறல்என்னும் பொருட்குற்றத்தின்பாற் பட்டதாகும்" என்றனர். அது கேட்ட நம்பன், "துறக்கத்து நாரியர்தம் கூந்தலுக்கும் வாசனை செயற்கையோ" என, புலவர், "ஆம்" என்றனர். அப்பால், திரியம்பகமூர்த்தி அவரை நோக்கி, "உமது ஆத்துமநாதராகிய ஸ்ரீகாளத்திபிறைவர் பாகத்தில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீஞானம்பிகையின் கூந்தலோ?" என்னலும், கீரன் கெடுவிதியால் மதிமருண்டு, பிடித்தபிடி விடாத கடு வனையுங் கராவையும் ஒத்தவராய், "அதுவும் அத்தகை யதே" என்று கூற, சிவபிரான் செப்பலாயினர்:—

"கீர! பதார்த்தங்களிலுள்ள நன்மைதீமைகளை, மூடர் கள் அறியாமையாலும், முழுதும் ஆய்ந்த சிலர் பிடிவாதத் தாலும் அறிந்துகொள்கின்றிலர். அறியுமாறு போதித்தா லும், அறிவிலார்க்கு ஒன்றும் மனத்திற் புகுவதில்லை. மன முரணுடையார் எவர்மொழியையும் மதித்தல்செய்யார். இஃது உலகத்தியற்கை. உலகத்தில் தர்க்கநூலறிந்தோர் உண்மையறிய வாதஞ்செய்யுங்கால், பதார்த்தங்களையும் அவற்றைத் தொடர்ந்த குணங்களையும் முன்னிட்டு இலக் கணங்கூறுவார்களேயன்றி வேறில்லை. நீயோ வாதமுறை எட்டுணையும் அறியாது பிதற்றுகின்றனை. நல்வழியில் தருக் கஞ்செய்யும் ஆற்றலைப் பெறக் கருத்துடையையாயின், இன்னே ஆன்றோருழிச் சென்று கற்று வருதி. வீணே

தர்க்கஞ்செய்து கொடுமைகட்டிக்கொள்ளாதே" என்று உரைத்தருள, நக்கீரர் பெரிதும் முனிவுற்றுத் தருக்கநூலை இகழ்ந்ததுமன்றி, தாம் கொண்டதே கொள்கையெனவுஞ் சாதித்தனர்.

அப்பால் சிவபிரான், தமது நெற்றிநயனத்தையும், கற்றைச்சடிலத்தையுஞ் சிறிது காட்ட, புலவர், "நீர் மெய் யெல்லாங் கண்ணுக்கினும், யான் சிறிதும் அஞ்சேன். சடைகண்டு உடைதலுறேன். இதனால் நம் தோல்வி வெற்றியாகாது" என்று உரைத்தனர். உடனே நீலகண்டப்பெருமான் கோபங்கொண்டு, கீரனை நோக்கி, "புலவ! மமதையாற் பிடிவாதஞ்செய்து, மறைகளும் அறியாத மலைமகளது கூந்தற்கும் வடுவுரைத்தனை. தருக்கநூலையுந் தருக்குற்று இகழ்ந்தனை. ஆதலால், நீ குட்டநோயால் வருந்தக்கடவை" என்றனர். உடனே நக்கீரர் நடுநடுங்கி, அருட்பெருஞ்சோதியாகிய சிவபெருமானை வணங்கி, "அடியேன் செய்த பிழைகளனைத்தையும் பொறுத்து, சாபவினை தவிர்த்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, கண்ணுதற்கடவுளும், "நீ கைலைசென்று வணங்கின் சாபவினை நீங்கும்" என்று மறைந்தருளினர். பின்பு, நக்கீரர், தக்ஷிணகயிலாயமாகிய ஸ்ரீகாளத்திக்ஷேத்திரத்திற்குச் சென்று ஸ்வாமியைத்தரிசித்து வணங்கிப்பிரபந்தம்பாடி, குட்டநோய்தீரப் பெற்று, பரமசாந்தசம் பன்னராய் விளங்குவாராயினர்.

---

இனி, 'எண்' என்பதற்குச் சோதிடநூலென்றும் பொருள் கொள்ளப்படுதலால், அதற்கு ஏற்பவும் ஓர் வரலாறு இங்கு எடுத்துக்காட்டப்படும்.

## நீதிகதை—2

காடுறைந்தும் கரந்துறைந்தும் ஆசின்றி மீண்ட பஞ்ச பாண்டவர், உபப்லாவியத்தில் வீற்றிருந்து, தமது உயிர்க்குயிராகிய ஸ்ரீகண்ணபிரானை அழைப்பித்து வணங்கி, "தேவரீரே துரியோதனன்பால் தூதுசென்று, எமக்குரிய தாயபாகங்களை வாங்கித்தரல்வேண்டும்" என்று வேண்டினர். அவர்களிடத்தில் அன்புடைய ஸ்ரீவாசுதேவனும், அவர் பிரார்த்தித்தவாறே தூதராய் அத்தினபுரஞ்சார்ந்து, அவைக்கண் வீற்றிருந்த துரியோதனனை நோக்கி, "அரசர்க்கரசே! நின் சோதரராகிய பஞ்சவர், விதித்தவாறு வில காது வனவாசமும் அஞ்ஞாதவாசமுங் கழித்து மீண்டனர். அவர்க்குரிய தாயபாகத்தைத் தருதி" என்றனர். அது கேட்ட அந்தன்மைந்தன் சினந்து, "பதசலனஞ்செய்வதற்கும் பாண்டவர்க்கு இங்கு இடமில்லை" எனவும், "போரில் வென்றவரே நாடாள்வர்" எனவுங் கூறி மற்றும் இகழ்ந்து பேசினன். உடனே கண்ணபிரான் புறப்பட்டு ஐவர்பால் அடுத்து, "துரியோதனன் சமர்புரியவே எண்ணங்கொண்டிருக்கின்றான்" என்று உரைப்ப, தருமபுத்திராதியரும் பொருதற்கு ஒருப்பட்டு எழுவாராயினர்.

இங்கு இவ்வாறாக, துரியோதனன் தனது மூதாதையாகிய வீடுமரை வணங்கி, "இனித் தொடங்கவிருப்பதாகிய பாரதப்போரில் யாமே வெற்றிபெறுதல்வேண்டும். அதன்பொருட்டு முற்படச் செய்யத்தகுவது களப்பலியே. ஆதலால், அதற்கு உரிய காலத்தையும், பலிக்கு உரியாரையுந் தெரிதல்வேண்டும்" என, வீடுமன் அவனை நோக்கி, "குழந்தாய்! சுயோதனா! வெற்றிபெறுதற்கு ஏற்ற ஓரையை நோக்கிக் கணிக்கும் வல்லமை சகதேவனிடத்திலன்றி மற்றியாரிடத்திலும் இல்லை. நீ சென்று கேட்கில், அவன் சிறிதும் விகற்பமின்றி விளம்புவன். களப்பலிக்கு உரிய

காளையாவான், இராவானே. அவனும், உன்பொருட்டுத் தனது உயிரையும் ஒருபொருளாக மதியாது, தன்னைப் பலி கொடுக்கச் சம்மதித்து வருவான். அவனிடத்து விரைந்து சென்று கேட்க'' என்றுரைத்தார். இராஜராஜன், ''நம் மேல் முழுப்பகைகொண்டு முனைந்து நிற்கும் ஐவரில் இளையான் கூறும் முகூர்த்தத்தை நாம் எவ்வாறு நம்புவது?'' என, வீடுமர் பின் வருமாறு சொல்வார்:—

''துரியோதனா! உலகத்தில் நற்குடிப்பிறப்பும் நல்லொழுக்கமும் வாய்ந்த பெரியோர், அடாதன கூறுதற்கு எழுவாராயினும், அவரது நா அங்ஙனம் எழுவதில்லை. அவர்கள் சந்திரனது தண்ணிய கிரணம்போல் பக்ஷபாதமின்றி யாவர்க்கும் இன்பத்தை விளைக்கிறவர்களேயன்றி வேறன்று. மெய்ம்மைவழியால் வரும் ஊதியம் சிறியதெனினும், அதனினின்று அவர் விலகார். பொய்ம்மை வழியால் வரும் லாபம் பெரிதெனினும், அதனைச் சிறிதுஞ் சிந்தியார். ''நன்மைவிதைத்தால் நன்மைவிளையும், தீமைவிதைத்தால் தீமை விளையும்'' என்ற உரையை உறுதியாகக் கொண்டு, தமது வாழ்நாளை நன்னெறியிலேயே நடாத்தும் அவர்கள் மாட்டு, அன்னியர்கள் செய்கின்ற தீமைகள்யாவும் நன்மைகளாகவே முடிகின்றன. அவர்கள் திரிகரணசுத்தியுள்ளவர்களென்று அறிவாயாக. சகதேவன் அன்னவர்களில் ஒருவன். அவன் சர்வசாஸ்திரபாரங்கதன்; சகலகுணசம்பன்னன்; தத்துவஞானி. அவன் விஷயத்திலோ நீ ஐயமுறுகின்றனை? நன்று! நன்று!! இஃது அறிவீனமே. நீ இக்கணமே அவன்பாற் சென்று முகூர்த்தங்கேட்டு வருதி'' என்றனர்.

அதுகேட்டு ஐயப்பாடகன்ற அவ்வேந்தனும், அன்னப்பொறியொன்றூர்ந்து, சகதேவனை அடுத்து, ''போரில் ஜயம்பெறுமாறு களப்பலிகொடுத்தற்கு ஏற்ற ஓர் நன் முகூர்த்தங் கணிக்க'' எனலும், அவ்விளையோன் அவனை

வணங்கி உபசரித்து, "சாயமாதத்தில் தண்கதிரும் வெங்கதிரும் ஒன்றிய நாளிரவே களப்பலிகொடுத்தற்கு ஏற்ற காலம். அவ்வேளைதவறின், தோல்வியுறுவீர். இது திண்ணம்" என்றனன். இங்ஙனம் உள்ளவாறு ஓரைகணித்துரைத்த தோன்றலை, துரியோதனன் உள்ளங் களிதூண்டத் தழுவி, அவனிடத்தில் விடைபெற்று, உரககன்னியின் புதல்வன்பாற் சேரலும், அவ்வாண்டகை, அவ்விராஜராஜற்குத் தண்டன் சமர்ப்பித்து, "வந்தகாரியத்தை விளம்பவேண்டும்" என வணங்கிக்கூறி நிற்க, துரியோதனன், அவனை நோக்கி, "அப்பா! குமரா! இனி மூளவிருப்பதாகிய பாரதப்போரில் வெற்றிபெற விரும்பிய யான் இப்பொழுது புரியத் துணிந்திருக்குங் களப்பலிக்கு ஏற்ற உத்தமலக்ஷணம் வாய்ந்த புருடன் நீயேயென்று மதித்து, உன்பால் வந்தனன். நீ அதற்கு இணங்குவையோ?" என்றனன். அதுகேட்டுக் களிப்புற்ற பாண்டவர்குலக்கொழுந்தாகிய இராவான், அவ்வத்திவேந்தனை நோக்கி, "ஐயா! பிதாவே! தந்தைமொழியைத் தனயன் கடத்தல் நம்குலத்தில் வழக்கமில்லையே. யான் தாங்கள் குறிப்பிட்டகாலம்வரை உயிருடன் இருப்பேனாகில், என்னைப் பலியிடுசெய்து கொள்வீர்களாக" என்றுரைத்தனன். அதுகேட்ட அரசன் அகங்குளிர்ந்த களிப்புடன் அந்த இராவானை எடுத்தணைத்து, "நங்குலத்தில் முன்னொருபுதல்வன் தனது யௌவனத்தைத் தன்னுடைய பிதாவுக்கு நல்கித் தரணிமுழுதும் புகழ்பரப்பினன். நீயோ உயிரையே கொடுத்து உலக மூன்றினும் உயர்புகழ் பரப்பினை. நீயே குமாரன்; நீயே குருகுலக்கொழுந்து" எனப் பற்பல புகழ்ந்து, பலியிடுதற்குரிய காலத்தையும் அவனிடத்தில் உரைத்து, விடைகொண்டு, வந்தகாரியம் நிறைவேறிற்றென்ற களிப்பு அத்திநகரடைந்தனன்.

இங்ஙனம் துரியோதனன் செய்துகொண்டவையெல்லாம் அறிந்த கண்ணபிரான், பாண்டவர்பால் அணுகி, "பாரதப்போரில் வெற்றியடைய விரும்புவீராயின், துரியோதனனுக்குமுன்னரே, நீவிர் களப்பலியூட்டல்வேண்டும்" என்று உரைத்தருள, அவர்களும், "அங்ஙனமே செய்வோம்:பலிகொடுத்தற்கு உரியாரையும்,அதற்கு ஏற்ற ஒரு காலத்தையும் தேவரீரே கணித்தருளல்வேண்டும்" என்றார்கள். கண்ணபிரான், "பலிக்கு உரியவன் யானே" என்றும், "அதற்கு ஏற்ற காலமாவது சாபமாஸத்தில் நாள் பதினொன்கில் சந்திரனோடு சூரியன் ஒன்றுதலாகிய நாளின் இரவே" என்றும் செப்பியருளினர். அதுகேட்ட பாண்டுகுமாரர் மனந் துணுக்குற்று, ஸ்ரீகண்ணபிரானைக் கட்டியணைத்துக்கொண்டு, "உம்மைக்களப்பலிகொடுத்துப் பெறும் அரசவாழ்க்கை எங்கட்கு வேண்டாம். யாங்கள் இன்னே மீண்டும் காடுசென்று காலங்கழிப்போம்" என்றனர். அடுத்துநின்ற இராவான் ஸ்ரீவாசுதேவனை நோக்கி, "யான் களப்பலியாகத் துரியோதனனுக்கு நேர்ந்துள்ளேன். நீவிர் அவனுக்கு முந்துவதால் இப்பொழுது உமக்கு நேர்ந்தேன். என்னைப் பலிகொடுத்து வெற்றிகொள்வீராக. யான் இப்பொழுது இறக்கினும்,இனிவருவதாகியபோரைப் பார்க்கவும், போர்புரியவும் வேண்டும்" என்றனன். ஸ்ரீ கோவிந்தன் அவ்வரங்களை அவனுக்கு அருளி, நாள் பதினொந்தில் வரவிருந்த கதிர்மதி சங்கமத்தை நாள்பதினொன்கிலேயே வரப் பணித்து, இரவில், ஐவருடனும் இராவானுடனும் ஜன்மதேசத்திற்சென்று, "யாமள" முறைப்படி, அதிவீரசூரனாகிய இராவானைப் பத்திரகாளிமுன் பலிகொடுத்து மீண்டனர்.

ளும் முற்பட்டதாகிய 'ஐயமிட்டுண்ணுதலையே' ஓர் விரதமாகக் கொண்டொழுகுபவன், இம்மையில் எவர்க்கும் நண்பனாகி இன்புறுவதுமன்றி, மறுமையிலும் முத்திப் பேற்றுக்கு உரியவனாகின்றனன். இவ்வறவினையை, ஆன்றோர், பொருள்முட்டுப்பாடுற்றகாலத்தும் கைவிடுவதில்லை; களவாடியேனும் தம் கடைப்பிடியைக் காத்தொழுகுவதிற் பிழையார்: "பொய்ம்மையும் வாய்மையிடத்த; புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்றிருத்தலால்.

## நீதிகதை—1

* மாறுடு மலைவளனும், தேனுடு பொழில்வளனும், கானுடு நிலவளனும் மல்கிப் பொலிந்த மேனாடாகிய சோநாட்டிலுள்ள கொடும்பாளூரிலே, இடங்கழியாளர் என்னும் அரசரொருவர் இருந்தார். அவர், அடல்வலியால் மடங்கலேறன்னவர்; குறைவற்ற செல்வத்தாற் குபேரனவர்; கற்ற கல்வியாலும், கடவுட்பக்தியாலும் நற்றவக் கும்பமுனியொத்தவர். இவர் தராசென நின்று தண்ணளியால் உலகம் புரக்கும் நாளில், அவ்வூரில் ஓர் சிவபக்தர் இருந்தார். அவர் உலகத்தில் உதிக்கும்பொழுதே, தயையுங் கொடையும் உடன்கொண்டுவந்தவர்; பவந்தொலைப்பது சிவமேயெனத் தெளிவுற்று, சிவாலயங்கடோறுஞ் சென்று சேவிக்கும் நியமத்தை உடையவர். அன்றியும், அவர், பூதானம், கோதானம், சுவர்ணதானம், கன்னிகாதானம் முதலான மகாதானங்கள் பலவற்றுள்ளும் அன்னதானமே மேலானதெனத் துணிவுற்று, சாதி, மதம், உற்

* மாறுடு - மால் நாடு என்று பிரியும்; மேகங்கள் தேடி விரும்பி வந்தடையப்பெற்ற; மிகவுயர்ந்த என்றவாறு.

றூர், உறுதார் முதலிய வேற்றுமைகளைச் சிறிதுஞ் சிந்தியாது, பசித்தார்க்குப் புசிப்பளித்தலையே விரதமாகக் கொண்டொழுகுகின்றவர்.

“ஸத்காரியத்திற்குச் சத்துருக்கள்பல” ஆதலால், இப்படியிருக்கும் இவரை, கொடுவினைப்பயனாக மிடிப்பிணி வந்தடுக்கலாயிற்று. மேலும், மழையின்றி அவர்கழனிகளனைத்திலும் பயிர்கள் வாடி வதங்கின. அதனால், அவர் விளைநிலங்களை விற்று விருந்தோம்பத்தொடங்கினர். இதனால், அவர்க்கு வறுமை மேன்மேல் மல்கலாயிற்று. இங்ஙனம் அவர்க்குத் தரித்திரம் அதிகப்பட அதிகப்பட, தெய்வத்தின் சோதனையால் விருந்தினரும் மிகமிஞ்சி வந்து, அவரில்லத்தில் நிறைவாராயினர். பசித்தோர்முகத்தைப் பார்க்கப்பொறாத அத்தொண்டர், என்னசெய்வார்! மனைவியுங் குழவியும் அணிவனவான அணிகலன்களையும், பசுக்களையும், மற்றுமுள்ள பாத்திரபண்டங்களையும் அன்னதானத்தின்பொருட்டு அர்ப்பணஞ்செய்தனர். வெண்கலங்களால் நிறைவுற்றிருந்த அவரில்லம், மண்கலத்திற்கும் வறுமையுற்றது. அவரும் அவரில்லக்கிழத்தியும், சுற்றுடையன்றி மற்றுடை அற்றனர்; என்றாலும், தாம் கடைப்பிடித்திருந்த விருந்தோம்பலென்னும் விரதத்தில் சிறிதும் குறைபட்டிலர்.

இவ்வாறு சிலநாள் கழிய, அந்தப் பத்தர் மெத்தவும் வறியவராயினர். ஓர்நாள், நெடுவழிநடந்து இளைத்தவரும், காலே கண்ணாகித் தத்தளிப்போரும், வாய் கையாக வழங்குவோரும், அட்டுண்ணாது ஐயமும் பிச்சையும் வாங்கி அருந்துவோருமாகிய தள்ளா விருந்தினர்பலர், முன்றிலிலும், புறந்திண்ணையிலும், அடுத்துள்ள மன்றங்களிலும் பசியால் வாடி வருந்தி நிறைந்திருக்கின்றனர். அதைக்

கண்ட அத்தொண்டர், அவரது எரிபசியைப் பரிகரித்தற்குத் தம்மிடத்து யாதொன்றும் இல்லாமையை எண்ணி யெண்ணித் துக்கசாகரத்தில் மூழ்கி இங்ஙனங் கூறிப்புலம்பினர்:—

"அந்தோ! கெட்டேன்! கொடிய தேட்கொட்டுப் போலும் கொள்ளித்தீக்கொழுந்துபோலும் கொடிய அடிவயிற்றிற் கடுகடுத்துக் கனல்வதாகிய பசியாற் களைப்படைந்திருக்கும் இவர்களது முகத்தைக் கண்டும், அவரது பசியை ஆற்றுவதாகிய நல்வினையைப் புரியப்பெறாதயான், உயிருடன் இருக்கின்றேனே! என்னினும் மாபாவி யாண்டுளன்? எனது உயிர் வலிதுபோலும். கஷ்டங்கஷ்டம்! இவ்வுச்சிப்பொழுதில் என்னை ஒருபொருளாக உன்னி இங்குற்ற இவர்க்குப், 'போனகம் இன்றில்லை; நாளை' என்பேனோ? அல்லது, 'என்றுமே இல்லை' என்பேனோ? அன்றி, இங்ஙனம் மொழிதற்கு இயலாது இக்கணமே இறந்துபடுவேனோ? மற்று என்னதான் செய்வேனோ? ஒன்றுந்தெரிகிலேன்! இல்லையென்பது இறப்பினுந் தொல்லை. உயிர்நீப்பனேனும், பசித்திருக்கப்பார்த்த பாவம் நம்மைப் பற்றுதொழிவதின்று. ஆதலால், களவாடியேனும் இவர்கள்பசிப்பிணியைப் பரிகரித்தலே தகுதி. அவ்வாறயின், நம் கடைப்பிடியைக் காத்தோமாவோம். களவுபுரியலாமோவெனின், ஆம்: அச்செல்வம் நல்வழிச்செல்லுதலான். இதற்கு உதாரணம், ஆலிநாடருமாவர்" என்று முடிவில் துணிவுற்ற தொண்டர், அவ்விடத்தினின்று எழுந்து, இடங்கழியரசனது பண்டாரத்திற் புக்குச் செந்நெற்குவியலிற் சிறிது முகந்தெடுத்தனர். அதுகண்ட காவலாளர், அவரைக் கொண்டுபோய்க் காவலர்முன்னர் விடுப்ப, அரையன் அன்பரை நோக்கி, "நீர் இங்ஙனம் புரிதற்குக் காரணம் என்னை?" என வினவ, தொண்டர் சொல்லுவார்:—

"வேந்தே! பசித்திருப்பாரைப் பார்க்க, இவ்வெளியேன் சகிப்பதில்லை. இல்லையென்பார்க்கு இல்லையென்று உரைக்க என் நா எழுவதில்லை. சேர்ந்தார்க்குச் சோறிடுவதே இவ்வேழையின் நோன்பு. இதனை இதுகாறும் இடைவிடாது காத்தற்கு, உடைமையெல்லாம் இழந்தனன்; இப்பொழுதோ, கையில் ஒருகாசேனும் இலன். கடன் கொடுப்பாரும் இலர். இவ்வாறாக, இன்று என் இல்லத்தில் அடர்ந்திருக்கும் அதிதிகட்கு ஓரளவும் இல்லை. அவர்கள் பசித்து வந்து உணவுபெறாது வெறுமை போதலால் வரும் பாவத்தினும், களவாடலால் வரும் பாதகம் மிகச்சிறிதெனமதித்து இங்ஙனம் புரிதலுற்றேன். நீதிநூன்முறைப்படி தண்டம்புரியக் கருதுவையேல், விலங்கிட்டுக் காவலில் இருத்தாது, தயவுகூர்ந்து தலைதுணித்துவிடுமாறு ஆணையிட வேண்டுகின்றனன்: பசித்தோர்க்குப் பாலனங்கொடுத்துப் பாலனஞ்செய்யும் ஓர் நல்வினை பெறாத இப்பாவிக்கு, மரணதண்டனையே மிகவும் சால்புடைத்து" என அடியவர் பணிவுடன் பணித்தனர்.

அவையனைத்துங் கேட்டு ஆச்சரியமுற்ற அரசன், சட்டென்று அரியணைவிட்டு இழிந்து, அன்பரைத் தம் மார்புறத் தழுவி, ஆதனத்தில் இருத்தி வணங்கி, "அடிகாள்! நீவிர் செல்லை அள்ளவந்த கள்ளரல்லீர்; என்னை ஆளவந்த கடவுளேயாவீர். பெருமலையொத்த பொற்குப்பையும், தானியக்குவியலும் கணக்கறப் படைத்திருந்தும், இடமும் ஏவலும் குறைவின்றி எய்தியிருந்தும், யான் இதுகாறும் பாதொருபயனையும் அடைந்தேனில்லை; புதையல்காத்த பூதமானேன். என்னே என் உயிர்வாழ்க்கை! என் பிறவியைச் சுடுக; சுடுக. இங்ஙனம் பாவியினும் பாவியாகிய என்னையும் ஓர் ஆளாக்க உன்னி எழுந்தருளிய மகாத்துமாவே! இன்றுமுதல், இவ்வேழைக்கு உரிய செல்வமனைத்

தையுந் தேவரீருடையதாகவே பாவித்து, தருமகாரியந் தலைசிறப்ப நடாத்துவீர்களாக. இனி, எனக்கு உரிமையாதொன்றும் இன்று" என்று புகன்று போற்றினன். தொண்டரும், அக்கோமகனன்பிற்கு உவந்து அவனை வாழ்த்தி, அன்றுமுதல் அவனுடைய பண்டாரத்திலுள்ள தானியத்தாலேயே அன்னதானத்தை அணிபெற நடத்திவருவாராயினர். அப்பால், இவ்விருவரும் இகபரமிரண்டிலும் இன்புற்றனரென்பர்.

---

## நீதிகதை—2

வளங்கள் பலங்களால் வளப்புண்ட, இருவகைச் செல்வத்திலும் இளையாத இளையான்குடியென்னும் ஊரிலே மாறன் என்ற ஒரு வேளாளர் இருந்தார். இவர், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்," "ஓதுவாரெல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே," "மேழிச் செல்வம் கோழை படாது" என்றபடி எவ்வகைத்தொழிலினும் மேம்பட்ட தம் குலத்தொழிலாகிய வேளாண்மையால் புவியையும், உபந்யாசமாரியால் அவையையும் அலங்கரிப்பவர்; அலரால் சிவபிரானது அடித்துணைகளையும், அன்னத்தால் ஏழைகளின் வயிற்றினையும் நிரம்பச்செய்பவர். விருந்தோடன்றி அருந்தலும், மெய்ம்மையுந் தண்மையும் இன்றி உரைத்தலும், இரவலர் மொழியும் இனிய புராணங்களும் அன்றிக் கேட்டலும், தமது கரங்களை ஈதற்கும் ஈசுவரகைங்கரியத்துக்கும் அன்றி நீட்டலும், கழனிக்குங் கற்றோரவைக்குங் கடவுளாலயத்துக்கும் அன்றி நடத்தலும், அறத்தையும் அரனையும் அன்றி உள்ளத்து உன்னலுஞ் செய்யாதவர்.

விருந்தோம்புதலே பிறந்த பிறப்புக்குப் பெரும் பேறெனத் துணிவுற்ற அந்த நாயனார், நாடோறுந் தம் இல்லத்து வரும் அதிதிகளை எதிர்சென்றழைத்துவந்து, தண்முகங்காட்டி இன்மொழிதொடுத்து வணங்கி, உரிய காலத்தில் அறுவகைச்சுவையுடைய நால்வகை உணவுகளை யும் அவரவரது விருப்பின்படி அருந்திவந்ததனால், "இறைத்த கிணறே ஊறும்," "ஈவார்பொருளே மீதோங் கும்" என்ற பழமொழிப்படி, அவர்க்குச் செல்வம் ஒன்று பத்தாகப் பெருகிப் பெருவெள்ளமாயிற்று. அதனால், அவரை அனைவரும் மானிடக் குபேரனென வழங்கலா யினர்.

இவ்வாறிருக்க, சிவபிரான், அவ்விளையான்குடியார் பொருட்பெருக்குற்றகாலத்தில் நடாத்திவந்த அன்னதா னத்தை நல்குரவடைந்த காலத்தும் நடாத்தவல்லுநர் என் பதையும், தாம் அறிஞர்க்கு வறுமையை அளித்தல் அவர் தம் நலத்தின்பொருட்டே என்பதையும், முடிவில் இன்ப மே யாகும் என்பதையும், அதனை அறியாதார் தர்மஞ் செய்த தமக்குத் துன்பஞ்செய்தார் கடவுளெனத் தம்மை நோதல் பாவமென்பதையும், எத்தகைய துன்பத்திலும் ஆன்றோர் கடைப்பிடியைக் கைவிடார் என்பதையும் உல கறிந்து உய்யுமாறு திருவுளங்கொண்டு, அந்நாயனார்பால் இல்லாமையை ஒல்லையில் செலுத்தினர். அதனால் அவர் சொல்லமுடியாத அல்லலுற்றனராயினும், விரதபங்கமுறா வண்ணம் தமக்குரிய வீடு மாடு விளை நிலங்களிற் சிலவற்றை விற்றும், தாமே விலைப்பட்டு இறுக்குமாறு அத்துணைக் கடன்கொண்டும், அதிதிபூஜையை முன்னமேபோலப் பின்னரும் குறைவின்றிச் செய்துவந்தார்.

இப்படியிருக்க, ஒருநாள் சோனைமாரி சொரிதர, விருந்தினரொருவரும் வந்திலராதலால், அன்று பகல்முழுவதும் அமுதருந்தாது பட்டினியேயிருந்த நாயனார்,இரவில் தமது இல்லக்கதவம் அடைத்துத் தாளிட்டு உறங்காநிற்கையில், ஸ்ரீகைலைமலைவாசியாகிய கண்ணுதற்பெருமானே ஓர் சைவவேடதாரியாய் ஆங்கு எழுந்தருளி, புதவுபுடைத்து அழைப்ப, மாறனார் களிப்புற்றெழுந்து, கவாடந் திறந்து, அப்படிவரைப் பவனத்துள் அழைத்து உபசரித்து ஓர்ஆதனத்தில் அமரச்செய்து, அவருக்கு அமுதருத்த வேண்டுமென்ற அவாவினால், தமது மனைவியை, 'என்ன உள்ளது?' என்று வினவ, அப்புண்ணியவதியும் அடுதற்கு உரிய பொருளொன்றும் இன்மையைக் கூறித் துக்கித்தனள். அதனைக்கண்ட நாயனார், "தெய்வமே! இனி யான் என்னசெய்வேன்! பசித்து ஒருவர் வந்திருக்க, உயிர்த்து இன்னும் இருக்கின்றேனே! அனிச்சப்பூவினும் அதிதிமுகம் மிக மெல்லியது என்பரே! அவர்முன் இனி யான் எவ்வாறு செல்வேன்" எனப் பலவாறு பிரலாபித்துக்கொண்டிருக்கையில், அவரில்லக்கிழத்தி அவரை வணங்கி, "இன்று நம்கழனியில் வித்திவந்த முளைநெற்களை வாரிக்கொணரின், அவற்றை வறுத்துத் தக்கவாறு பாகஞ்செய்து அன்னமளிக்கலாம்" என, அதுகேட்டுக் களிப்புற்ற நாயனார், உடனே அம்மழைக்காரிருளில், காலால் நெறிதடவிக் குறிவழிப் பழனஞ்சார்ந்து, முளைபுறத்திட்ட வித்தினை அரித்துக்கொணர்ந்தனர்; இந்தனத்தின்பொருட்டு இறக்கூரையிற் சில பிரித்துக்கொடுத்தனர்; கறிக்கு வேண்டிப் புறக்கடையிலுள்ள குழியினின்றும் வெளிப்படாத பயிர்களைப் பிடுங்கிக்கொடுத்தனர். அவற்றையெல்லாம் அவர்பத்தினி அமுதினும் இனிப்ப அட்டுவைத்துத் தம் கொழுநர்க்கு அறிவித்தனள். அவரும், வந்த சைவரை அமுதுண்ண அழை

ப்ப, அக்கடவுள் இடபாரூடராய் அந்நாயனார்க்கும் அவர் மனைவியார்க்குந் தரிசனந்தந்து, நீங்காத பேரின்பத்தை அனுபவித்திருக்குமாறு அருள்புரிந்து மறைந்தனர்.

சிறுத்தொண்டநாயனார்சரித்திரமும் இங்குப் பொருந்துவதாகும்.

---

## "ஒப்புரவொழுகு."

இதன்பொருள், உலகநடையை அறிந்து அதற்கு ஏற்ப உபகாரமாக நடந்துகொள் என்பதாம்.

உள்ளத்தால் எல்லாந் துறந்த துறவியேயாயினும், உலகெல்லாம் ஒருகுடை நிழற்றும் உயர்தகையரசனேயாயினும், கல்வியிற் கரைகண்ட கவிநாவலனேயாயினும், மற்றும் எத்தகைய சதுரனேயாயினும் உலகத்தோடொப்ப ஒழுகாவிடின், அவர்கள் யாவரும் ஆன்றோரால் இகழப்படுதற்காளாகின்றனர். எல்லாம் அறிந்த நல்லோர், உலகம் உள்ளதை இல்லையென்றாலும், இல்லதை உள்ளதென்றாலும், அவ்வண்ணமே தாமும் பாவித்து ஒழுகாநிற்பர். இவ்வொழுக்கத்தினின்று மாறுபட்டவரைப் பித்தரென்றாலும், பேயரென்றாலும் இழுக்காகாது. அன்றியும், "ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான், செத்தாருள் வைக்கப்படும்" என்றபடி, உலகத்தில் ஒப்புரவறிந்து நடப்பவனே உயிருடன் வாழ்பவனாகின்றான். அங்ஙனம் அறிந்து நடவாதவன் செத்தவனேயாகின்றனன்.

### நீதிகதை—1

துரியோதனனால் வஞ்சனையாற் கட்டுவிக்கப்பெற்று எரியூட்டப்பட்ட அரக்குமாளிகையினின்றும் பிலத்தின் வழி புறம்போந்து உயிருய்ந்த ஐவருங் குந்தியும், இடிம்பவனத்திற் செல்லுங்கால், அவர்கள்மேற் சினங்கொண்டு

அவ்வனத்துக்குரிய இடிம்பனென்னும் ஓர் முரட்டவுணன் போர்புரிதற்கு எழுந்துவர, வீமசேனன், அவனை வானரம்பையர் எதிர்கொண்டு மணப்பச் செய்ததுமன்றி, தன்னை விரும்பி எதிர்கொண்ட அவனது தங்கையாகிய இடிம்பி என்பாளைத் தானும் மணந்தனன். அப்பாற் சில தினங்களுள் அவன் அவளிடமாக வன்மையில் தன்னையொத்த கடோற்கஜன் என்ற ஒரு புதல்வனைப் பெற்றனன். பிறகு, இடிம்பியும் மகனும் வீமனை வணங்கி, "நீர் நினைத்தபோது வருவோம்" என்று உரைத்து, விடை பெற்று அப்பாற் போயினர்.

அதன்பிறகு, ஐவருந் தாயும் வியாதமுனிவர் கூறியபடி அரசுகோலத்தை நீத்து, அந்தணர்வடிவுடன் ஏகசக்கபுரத்திலுள்ள அக்கிரகாரத்துட் சென்று சேர, எதிர்கொண்ட ஓர் அந்தணன், அவர்களது முகவிலாசத்தையும் கம்பீரமான தோற்றத்தையுங் கண்ணுற்று, "இவர்கள் சாமானியரல்லர்; தெய்வத்தன்மை வாய்ந்தவரே" எனத் துணிவுற்று, அவர்களை அழைத்துத் தனது இல்லிடஞ் சார்ந்து, அவர்களை நோக்கி, "ஐயன்மீர்! இவ்வீடு தங்களுடையது; யான் தங்கள் ஏவலாளன் என்று நினைத்து இங்கேயே சுகமாக வாழ்வீர்களாக" என முகமன்பல கூறினன். அவன்மனைவியும் அவ்வாறே குந்தியை உபசரித்தனள். அப்பால் அந்தணனும், ஐவரும், பார்ப்பினியும், குந்தியும் மனமொத்த அன்புடன் அளவளாவி இன்புற்றுறைந்தனர். ஐவரும் பிக்ஷையேற்று உண்டு காலங் கழித்தனர்.

இப்படியிருக்கையில், சிலகாலத்திற்குமுன் அவ்வூரிலே பகாசுரனென்ற ஒரு மாபாவி வந்து புகுந்து, அங்கு உள்ள மனிதர்களைக் கண்டகண்ட இடத்திலெல்லாம்

கொன்று தின்னத் தலைப்பட்டனன். அதுகண்டு அச்ச முற்ற அவ்வூரார்யாவரும் ஒன்று கூடி அவனைநோக்கி, "அவுணர்வேந்தே! நீ இவ்வாறு ஜனங்களைக் கொன்றுதின்றால், இன்னுஞ் சிலநாளில் மானிடவர்க்கம் நிர்மூலமாகி யொழியும். அப்பால் உன் பசியை நீ எவ்வாறு ஆற்றிக் கொள்வை? தமக்குத்தாமே கேடுசூழ்ந்துகொள்பவரை யாம் எங்குங் கண்டிலோம். இனி நீ இந்த அடுத்த காட்டிலே இருந்தால், இவ்வூரின் வரிசைமுறையாக ஒவ்வொரு வீட்டினின்றும் சகடநிறைய அடிசிலும், அதனை ஈர்த்துச் செல்லுதற்குக் காளையிரண்டும், அதனை ஊர்ந்து செல்லுதற்கு மனிதன் ஒருவனுமாகத் தினமானம் நின் பசிவேளை தவறாது நாங்கள் அனுப்புகின்றோம். நீ எல்லாம் புசித்து, அங்குத்தானே இருக்கக்கடவை" என, அவுணனும் அதற்கு இணங்கி, அணித்தான அவ்வனத்திலேயே புக்கு வாழ்ந்தனன். அன்றுமுதல் அவ்வூராரும் வீட்டுமுறையாகப் பண்டிநிறைய உண்டியும் காளையும் ஆளும் இடையறாது அனுப்புவதாயினர். இங்ஙனம் நிகழ்கையில், பாண்டவர் வசிக்கின்ற இல்லத்து முறைநாள் அடுத்துவரலும், அவ்வீட்டுவேதியன் மனந்தபித்துக் கண்ணீர் ஆறாய் ஓடக் கதறி அழுது, மனைவியை நோக்கி, "எனதுள்ளத்திற்கு இனியாளே! நாளை நாம் பகனுக்கு உணவனுப்புதல்வேண்டும்; அவனுக்கு இரையாகும் நரனும் யானேயன்றி வேறில்லை. நம் புதல்வியையும் புதல்வனையும் நீ நல்லவண்ணம் போஷித்துக்கொள். எனது பிரிவால் வருந்தற்க" என, மனைவி, "பிராணநாதா! யானே அக்கொடியானுக்கு இரையாதல் தகுதி; தங்களை இழந்து யான் உயிரற்ற உடல் போல் உலகத்தில் இருப்பேனோ? இச்சிறுமியையும் சிறுவனையும் போஷித்து இக்குடும்பபாரத்தைத் தாங்கித் தலைப்படுதல் தங்களால் இயல்வதன்றி, பேதையாகிய என்னால்

எவ்வாறு இயலும்? மலையை மண்ணாங்கட்டி தாங்குமா? நாதா! என்னை மணந்ததன்பயனாக, சிறுவரிருவரைத் தாங்கள் அடைந்துளீர். இனிப் பெறவேண்டுவதொன்று இன்று. ஆதலால், யானே அந்த அவுணனது பசிக்கு ஆஹாரமாகின்றேன். அவ்வாறாயின், தங்கட்குப் பிராண ரக்ஷை புரிந்த பேரறப்பயனோடு, தனது பெருமை வாய்ந்த மணவாளன்பொருட்டு அருமை வாய்ந்த தனது உயிரையும் உடலையும் தியாகஞ்செய்தாளென்ற ஓர் பெரும்புகழையும் யான் அடைவேன். அடியேனுக்கு இப்பேறுகளை அருளுதல்வேண்டும்'' எனப் புகன்று, கண்ணீர்சொரிந்து, அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினின்றனள். இங்ஙனம் பெற்றோரது அழுமுகங்கண்ட குழவிகளும் ரோதனஞ்செய்யத் தொடங்கின.

இவ்வாறு இவர்கள் தாம் மூழ்கிய கவலைக்கடற்கு ஓர்கரைகாணாது கலங்குதலைக் கண்ணுற்ற ஸர்வஜீவதயாபரையாகிய குந்திதேவி அவர்களை நோக்கி, "தம்பதிகளே! நீவிர் இவ்வாறு துன்புறுவதற்கு உற்ற காரணம் என்னை?'' என வினவலும், அவர்கள் உற்றதுரைத்தனர். உடனே குந்தி அவர்களை நோக்கி, "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்: எனக்கு ஐந்துபுத்திரர் இருக்கின்றனர்; அவருள் ஒருவனை நும்பொருட்டுப் பகன்பாற் போஜனச் சகடேர்ந்துபோகப் பணிக்கின்றேன்'' என, அந்தணன் அவளைநோக்கி, ''அகிலலோகங்கட்கும் அன்னையீர்! என்ன புகன்றீர்! நீவிர் எனது இல்லத்திற்கு வந்த அதிதியர். வந்த அதிதியைப் பராமுகஞ்செய்தலும், வெறுப்புறநோக்கலும், அங்ஙனமே ஒன்று புகலுதலும், இல்லறத்தாருக்குத் தக்கனவல்லவெனச் சான்றோர் சாற்றுகின்றனர். அப்படியிருக்க, என்பொருட்டு நும் மக்களில் ஒருவனை நீர்

இறப்ப, நான் எவ்வாறு புகல்வேன்? அவரவர்க்கு உற்ற நன்மை தீமைகளை அவரவரே அனுபவித்தல்வேண்டும். ஆதலால், நீர் சொல்லும் இஃது அடுத்ததன்று" என, குந்தி, "வேதியரே! என்மக்களைச் சாமானியரென்று நினையாதீர்; அவர்கள் தெய்வத்தன்மை வாய்ந்த மகாபலிஷ்டர்கள். பகனை இவர்கள் சங்காரஞ்செய்பவல்லவர்கள். ஆதலால், நீர் ஒன்றுக்கும் அஞ்சாமற் சும்மா இரும்" என்றுரைக்க, விப்பிரனும், அவன்மனைவியும், குழந்தைகளும் அதுகேட்டுக் களிப்புற்றனர்.

மறுநாட்காலையில் ஓர்பண்டியில் பற்பல பண்டங்கள் பண்ணியாரஉண்டிவகைகள் யாவும் நிரப்பப்பட்டன; நுகத்தடியில் காளைகள் பூட்டப்பட்டன. குந்தியின் ஏவலால் வீமன் கதிரவன் குணதிசை தோன்றுமுன் எழுந்து சகடூர்ந்து, வெயிலவன் உச்சிசாருங்கால், அவ்வெய்யவன் காடுசென்றடைந்த மாருதி, ஆங்கோர் தண்ணீர்த்துறையை அணுகி, பண்டிச்சோற்றைத் தன்பண்டிநிறையப்பெய்தனன். சின்னாளாய்ப் போதிய உணவைப் பெறாத அவனது வயிறு அற்றைத்தினமே பூர்ணமாயிற்று. அதுகண்ட பகாசுரன், கண்களில் தீப்பொறி பறக்கச் சினந்து,வீமனை நோக்கி, "எனக்காக வந்த உணவை நீ எவ்வாறு உண்ணலாம்" என்று, மற்றும் உருத்து முஷ்டிபிடித்து அவன்மீது குத்தினன், உடனே வாயுகாதலன் குன்றாக்கோபத்தோடு எழுந்து, தனது வலப்பதத்தால் அம்மறப்பதகன்மார்பில் ஓர்உதை உதைத்தனன். இங்ஙனம் அவ்விருவீரர்க்கும் மற்பெரும்போர் விளைவதாயிற்று. அச்சமர் அன்றுமாலை வரை நிகழ்ந்தது. இறுதியில் வீமன் அப்பகனைக் கொன்று, அப்பிரேதத்தின் காலைப் பற்றிக் ஈரகரவென்று இழுத்து, அந்த ஏகசக்ரபுரத்தின் கோட்டைவாயிலின்கண்இட்டு, அந்

தணன்வீடுபுக்கு, குந்தியை வணங்கித் தனது வரலாறனைத் தையுங் கூறுகையில், அவ்வில்லத்து வேதியன் வீமனைக் கண்டு, "நீர் இங்கு எவ்வாறு வந்தீர்? பகன்முன்பு சென்றிலீர்போலும். இனி அவன் இங்கு வந்து, எனது குடும்பத்தையெல்லாம் பக்ஷித்துவிடுவானே! இனி யான் என் செய்கிற்பேன்? கெட்டேன்! கெட்டேன்!" என நடுநடுங்கி வாயுளறி ரோதனஞ்செய்யத் தொடங்குகையில், வாயுபுத்திரன், அவ்வந்தணனை 'அஞ்சற்க, அழற்க' எனத் தேற்றிக் கொண்டிருக்கையில், கோட்டைவாயிலின்கண் மலைபோற் கிடக்கின்ற பகனது உருவத்தைக் கண்ணுற்ற அந்நகரத்து மாந்தர் யாவரும் உள்ளம் பதைபதைப்ப, உடல் நடுநடுங்க, கோவென்று ஓலமிட்டு, "அவுணனுக்கு, உரிய காலத்து உணவனுப்புவார் அனுப்பவில்லைபோலும்; அவன் இங்கு வந்துவிட்டனனே! இனி நாம் இங்கு இருந்தாற் செத்தோம்" என்று, ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் இல்லங்களில் இட்டன இட்டவாறு கிடப்பக் காட்டுமார்க்கமாய் ஓடத்தலைப்பட்டனர். அப்பொழுது, தருமபுத்திரரும் சகோதரருடனும் தாயுடனும் வெளிப்பட்டோடத் தொடங்குகையில், வீமன், "அண்ணா! அந்தப் பகனைக் கொன்றெறிந்த யான் உம் அண்மையிலேயே இருக்க, நாம் என் இவ்விடம்விட்டுப் போதல்வேண்டும்" என, தருமநந்தனர் அவனை நோக்கி, "அப்பா! வீமா! நீ அந்த அவுணனைக் கொன்றனை என்பதற்கு ஐயமும் இன்று; என்றாலும், நாம் உலகத்தோடொத்து வாழ்தலே தகுதி. அங்ஙனம் வாழ்பவரே மேலோரென மதிக்கப்படுகின்றனர். ஆதலால், நாமும் ஊரோடொக்க ஓடுதலே வேண்டும்" என்று உரைத்தலும், அவனும் 'அவ்வாறே ஆக' என, ஐவருங் குந்தியும் அந்தணர்கூட்டத்துடன் விரைந்து செல்வாராயினர்.

பின்பு சிறிதுபொழுதில் பகன் வீமனாற் கொல்லப் பட்டான் என்பதை அவ்வூர் அந்தணர் அறிந்து, அவனுக்கு விசேஷமரியாதைகள்செய்து வாழ்த்தி, சுகமாக வாழ்வா ராயினர்.

---

"ஓதுவதொழியேல்."

இதன்பொருள், (நூல்களைக்) கற்பதை விடாதே என்பதாம்.

கருணைக்கடலாகிய கடவுள், உலகுய்யுமாறு அருளால் அளித்த பேறாய், விதிவிலக்குக்களையும் உண்மைப் பொருளின் நிலையையும் விளக்கும் ஒப்பற்ற ஒள்ளிய விளக்காய் உள்ளது வேதம். அது, முதலில் முதல்வனிடத்தினின்று ஒலிவடிவாய்த் தோன்றி, வியாதரால் தொகுத்தல் பிரித்தல் முதலிய சீர்மைகளைப் பெற்றுக் கர்ணபரம்பரையில் யாண்டும் பரவி, அப்பால் வரிவடிவின தாய்த் தழைத்தோங்கலுற்றது. இது பொது நூலாயினும், அந்தணர்க்கே சிறப்புநூலாதலால், வேதமோதாத வேதியரை வேதியரல்லரென மேலோர் மொழிவர். மறைக் குலத்திற் சிற்சிலபாகமேனும் அந்தணனென்பான் அறிதல்வேண்டும். அங்ஙனம் அறியானை நீசத்தன்மை வந்தடைகின்றமையால், அத்தகைய பதிதனைக் காண்டலும் தீண்டலுங்கூடப் பாபத்திற்கு இடமாகுமென்பர். இது நிற்க. இக்காலத்துப் பிராமணர்களின் கல்வி நடை உடை பாவனைகளைப்பற்றி யான் என்னென்று கூறுவது! நினைக்குந்தோறும் நெஞ்சம் அஞ்சிப் பதைபதைக்கின்றதே! "மறப்பினு மோத்துக் கொளலாகும்; பார்ப்பான், பிறப் பொழுக்கங் குன்றக் கெடும்" என்று பொதுமறைகூறும்.

## நீதிகதை 1

பிரமஞானியாகிய பிரமராதனென்ற மகாருஷிக்கு யாஜ்ஞவல்கியர் என்ற ஒரு குமாரர் அவதரித்தார். அவர், தமக்குப் பூணூற்சடங்கு நிறைவேறியதும், தம் பிதாவால் வேதவித்தாகிய வைசம்பாயன முனிவரிடத்தில் வேதாத்தியயனஞ் செய்யுமாறு விடுக்கப்பெற்றனர். யாஜ்ஞவல்கியர், சின்னாளாகையில், மதியூகத்தோடு ஏகசந்தக்கிராஹியாய், ஸ்வரம், பதம், கிரமம், ஆரோஹணம், அவரோஹணம், பொருள், சேதம், காலம், நற்பருவம், மாத்திரை முதலிய இலக்கணமுறைப்படி அத்தியயனஞ் செய்துவருதலையும், அவரது ஸ்நாந ஜப தப பூஜாதி ஒழுக்கங்களையும், தாம் அடைந்திருக்கும் ஆச்சிரமத்துக்கு ஏற்றவாறு கொண்ட ஒன்றென ஓதல், நிறுத்தென நிறுத்தல், குறிப்பறிந்து செய்வன செய்தல், முன்னெழுதல், பின்னுறங்கல், ஐம்பொறியடக்கல், பணிவு, அவாவின்மை, உள்ளதுகொண்டு உவத்தல், ஊக்கமுடைமை, ஒழிவின்றி ஓதல், பின்நடத்தல் முதலான நன்னடக்கைகளையும் நன்கு கவனித்த வைசம்பாயனர், அந்த முதன்மாணுக்கராகிய யாஜ்ஞவல்கியர்மீது அளவற்ற அன்பை யுடையவராய், தமக்குத் தெரிந்த கல்வியனைத்தையும், ஒளியாமல், தாய் தனயற்குப் பாலூட்டுவது போலக் காலநோக்கிப் புகட்டுவதாயினர். அதனால், அம்மாணவரும், வருந்திப் பலபகலிற் கற்பனவெல்லாம் எளிதிற் சிலபொழுதிலேயே கற்றுக்கொண்டார்.

இங்ஙனமிருக்க, முனிவர் அவ்வூரரசர்க்குச் சிரேயசின்பொருட்டுத் தினமானங் கொடுத்தனுப்பும் மந்திராக்ஷதையை ஓர்நாள் தமது முக்கியசீடராகிய யாஜ்ஞவல்கியரிடம் கொடுத்து, "இதனை நம் இறைவனிடஞ் சென்று நல்கி வருதி" என்று ஆஜ்ஞாபித்தலும், வித்தியார்த்தி, அத

ஞல் தமது தவப்பயன் சிறிது குன்றுமென்றும், போத லொழியின் குருமொழிகோறலின் பாதகம் தம்மேல் சாரு மென்றும்எண்ணிச் சிறிதுபொழுது உள்ளத்தோடுஉசாவி, "இனி அப்பூபதியிடம் போதலே தகுதி" எனத்துணிவுற்று, அங்குநின்று வெளிப்பட்டுச்சென்று, அரசனிடம் அக்ஷதை யைக் கொடுத்து மீண்டனர். அதுபெற்றுச்சிரத்திலணிந்து கொண்ட காவலர்க்கு அக்கணமுதல் விசேஷமங்களங் களும், தனதானிய அபிவிருத்தியும், வென்றியும் அடுக் கடுக்காய் வளர்தலுற்றன. அன்றொருநாளில், அவ்வரசன் அடைந்த அபிவிருத்திக்கு ஓரளவில்லை. இங்ஙனம் விருத்தி யாதற்குக் காரணம் மந்திராக்ஷதை கொணர்ந்தளித்த மாணவரின் ஹஸ்தவிசேஷமேயெனத் துணிவுற்ற அவ் வேந்தன், வைசம்பாயனரை வணங்கி உற்றதுரைத்து, "இன்று எனக்கு மந்திரதண்டுலம் கொண்டளித்தவரையே நாடோறும் கொண்டருளுமாறு செய்தருள்க" என்று பிரார்த்திக்க, முனிவரும், "அவ்வாறே செய்வோம்" என்று வாக்களித்தனர்.

மறுநாட்காலையில், இருடி, தம் முதன்மாணாக்கராகிய யாஜ்ஞவல்கியரை அருகழைத்து, "இன்றுமுதல் நாடோ றும் தவிர்தலின்றி நம் அரையனுக்கு நீயே மந்திராக்ஷதை கொண்டு சென்றளித்தல்வேண்டும்" என்று உரைக்க, யாஜ்ஞவல்கியர் அத்தேசிகரை வணங்கி, "சுவாமி! இவ் வெளியேன் அம்முறை நிகழ்த்தின், அரிதின் ஆற்றிய தவ முழுதும் சிலநாளில் ஒழிந்திடுமே! என்செய்வேன்? வேறே தேனும் ஓர் பணியில் அடியேனை நியமித்தருளப் பிரார்த் திக்கின்றேன். கருணைக்கடலே! இவ்வேழையின்பொரு ட்டு இத்துணை கிருபை செய்வீராக" என உரைத்துத் தாழ்ந்து நின்றனர். அதுகண்ட வைசம்பாயனர், தாம் புகன்றபடியே புரியுமாறு மீண்டும் வற்புறுத்த, மாணவர்

மறுத்தார். உடனே கோபங்கொண்ட தாபதர், மாணாக்கரை நோக்கி, "அடே! பையால்! நன்றிமறந்த கன்றே! குருத்துரோகி! எம் மொழிக்கு நீ மாறுகூறினமையால், எம்பால் நீ கற்றுணர்ந்த வேதம்முதலிய கல்வியனைத்தும் நின்னை விட்டு நீங்கக்கடவது" என்று சாபங்கொடுத்தனர். அதுகேட்ட சீடரும், அகமும் முகமும் சோர்வுறக் கண்ணீர்பெருக, அங்குநின்று புறம் போந்தனர்.

இவ்வாறு வெளிப்பட்ட யாஜ்ஞவல்கியரை வேதப்புலமை விட்டுநீங்கியதனால், நீசப்புலமை வந்தடுப்பதாயிற்று; அவர்முகமும் பிரம்தேஜஸை இழந்தது; அவரது செம்பொன்மேனி கரும்பொன்மேனியாயிற்று. முனிவர்கள் அவரைத் தீண்டலுங் காண்டலும் அசுத்தமென்று தம்மிடத்தினின்று அகற்றினர். என்செய்வார் யாஜ்ஞவல்கியர்! சொல்லிற்கு அடங்காத துன்பத்தில் ஆழ்ந்தனர். அப்பால், அவர், "விதி வலிது; அதனை எவர் வெல்வர்? அதன்படி வருவன வரும். அதனை அனுபவித்தலேவேண்டும்" என்று தம்மைத் தாமே தேற்றிக்கொண்டனர். பிறகு அம்முனிகுமாரர், ஆன்றோரிடத்தில் கழிவிரக்கம் அடுப்பதில்லையாதலால், துக்கத்தையெல்லாம் ஒழித்து மனத்திட்பமெய்தி, சான்றோருகிய தபனபகவானைச் சரணம்புகுந்து, சகலவேதங்களையும் ஸாங்கோபாங்கமாகக் கற்றுணர்ந்து, அதனால், நீசத்தன்மையை நீக்கிப் பிரமருஷியாய் விளங்கலுற்றனர்.

வேதமோதலின் சிறப்பை இதனால் அறிக.

## "ஔவியம் பேசேல்."

இதன்பொருள், பொறாமையானசொற்களைப்பேசாதேஎன்பதாம்

ஔவியமென்பது பொறாமை அது, அன்னியரிடத்து மன்னிய கல்வி, துன்னிய செல்வம் முதலியவற்றைக்கண்டு, மனம்பொறாது வருந்துதலாம். அஃது ஒருவனுக்கு இயற்கையாலன்றிச்செயற்கையாலும் மனத்தின்கண் உதிப்பது; அங்ஙனம் உதித்தவுடனே, மனத்தைச் சூழ்ந்து பொதிந்து அதனைக் கருகச்செய்து, கொல்லனது உலைக்களத்துத்துருத்திபோலப் பெருமூச்செறியச்செய்வது; ஊண் உறக்கம் முயற்சி முதலியவைகளை வேரறத் தொலைப்பது. மேன்மைகளைப் போக்கிக் கீழ்மைகளை ஆக்கிப் பெருங்கேடுவிளைப்பதில் இவ்வௌவியம்போன்றதை யாம் எங்கும் கண்டிலோம். இத்தீக்குணமுள்ளவரிடத்தில், கல்வி, செல்வம், வெற்றி, இன்பம், நீடுவாழ்வு முதலியன அடுப்பதேயில்லை; ஆதலால், இவற்றை வேண்டுபவர், பொறாமையை அறக்களைதல்வேண்டும்.

### நீதிகதை—1

தம்பின் மிக்காரும் ஒப்பாரும் அற்ற குந்திமைந்தர்கள், துரியோதனனால் விரகினால் இயற்றித் தீயூட்டப்பட்ட அரக்குமாளிகையினின்றும் புறம்போந்து, உருமாறிப் பாஞ்சாலத்திற் பாவையர்திலகமாகிய பாஞ்சாலியை மணந்து, அப்பால் இந்திரப்பிரத்தநகரத்தை அடைந்து, ஆங்குச் சந்திரகாந்தக்கற்களினால் இந்திரவிமானம்போல் மயனால் அமைக்கப்பட்ட மந்திரத்தில் இன்புற்று வாழ்ந்துவருகையில், ஓர்நாள், அமிருதகுணசீலனாகிய தருமன், கண்ணபிரான் தன்மீது வைத்துள்ள தண்ணளியே திண்ணிய துணையாகக் கொண்டு, இராஜசூயமென்னும் வேள்வியொன்றை இயற்றக் கருதி, தம்பியர் நால்வரையும் நாற்

திசையிலுமுள்ள மன்னர்குலமனைத்தையும் புறங்காணு மாறு பொருவித்து, விருதுக்கொடி பரப்பி, அந்தந்தத் தேயங்களிலுள்ள ஊர், காடு, கடல்களில் விளைவனவான பொருள்களனைத்தையும்வவ்விவகுத்துமலையெனக்குவித்து, தாபதர்கூட்டமும் தராதிபரீட்டமும் தம்புடை சூழ்தர, விதிமுறை வழாது வேள்விபுரியுங்கால், அதனைக்காணவந்த பொறாமைப்பிண்டமாகிய அந்தகன்மைந்தன், அங்கு அசுரத்தச்சனாகிய மயன் என்பவன் தனது கைவன்மையை உலகம் அறியும்படி அமைத்துள்ள நீர்நிலைமயக்கிலும் புறமகமருட்சியிலும் பிரமித்துத் தட்டித்தடுமாறி வீழ்ந்தும், புரண்டும், எழுந்தும், இடறியும், முட்டியும், இங்ஙனம் திரௌபதியோடு பலருங் கண்டு கல்லென நகைப்ப அல்லற்பட்டு அவமானமுற்றதுமன்றி, இந்திரன்போல் தருமநந்தனர் வீற்றிருத்தலையும், அவரை அடுத்து அவரது கண்மணியான நீலமணிவண்ணன் இருத்தலையும், சதுரராகிய தம்பியர் நால்வரும் அவ்விருவரையுஞ் சூழ்ந்து நிற்றலையும், மற்றுமுள்ள மணிமுடிமன்னவர் யாவரும் அவரடி வணங்கித் திறையளந்து கைகட்டி வாய்புதைத்து ஒருபுறத்தில் ஒதுங்குதலையும், மற்றுமுள்ள விபவங்களனைத்தையுங் கண்ணுற்று, அழுக்காற்றால் விழுங்கப்பட்டு, மனம் புழுங்கி வியர்ப்ப, பெருமூச்செறிந்து, அங்கு நிற்கப் பொறாதவனாய், மீண்டு தனது அத்திநகர்புகுந்து, அரண்மனையில் ஓர் சிறைப்புறத்து வாளா இருந்தனன்.

இங்ஙனம் மன்னன் இருத்தலைத் தெரிந்த சகுனி அவனை நோக்கி, "அரசர்க்கரசே! தங்களுக்கு, இவ்வாறு அகங் கருக, முகஞ் சிவக்க, கண்ணிணை இடுங்க, துன்பம் பெருக என்னுற்றது? அதனைச் சொல்லுதல்வேண்டும்" என வினவ, துரியோதனன் சொல்வான்:—

"மாதுலரே! யாதுசொல்வது? யான் இன்று அதி யோகசாலியான தருமபுத்திரனது யாகசாலையைக் காணச் சென்றேன்; அங்கே அசுரசிற்பியால் தருமனுக்கென்றே நிருமிக்கப்பட்ட சபாமண்டபமொன்றைக் கண்டேன். அதன் விசித்திரத்தைக் கற்றறிந்த கவிகளாலும் வருணித்துரைக்கமுடியாதென்றால், எவ்வாறு யான் செப்புவது? இத்தகைய கட்டிடம் எமக்கன்றி அவனுக்கு இருத்தல் நீதியாவதோ? அருங்கலன் அரசர்க்கன்றி வேறு யார்க்குத் தகும்? சொல்வதென்னை? அதன் அழகனைத்தையுங் காணக் காண, ஒளியமாகிய களிறு என் அந்தரங்கமாகிய கவளத்தை விழுங்குவதாயிற்று. அங்குள்ள சிங்காதனத்தைக் காண, எனது கண்கள் மங்காது மங்கி மண்ணுயின. அவ் விருக்கையின்மேல் தருமனைக் கண்டேன்; உடனே யான் நெஞ்சகத்திற் பொருமலைக் கொண்டேன். தராதிபர் அவனை வணங்குதலைத் தெரிந்தேன்; பொறாமையினால் எனது மெய் வணங்க எரிந்தேன். அவனைத் துதிபாடகர் விளக்குங் கூற்றே எனது ஆருயிரைப் பிளக்குங் கூற்றாயிற்று. அவனது தருமச்செங்கோலே எனது மருமம் பிளக்குங் கொடுங்கோலாகியது. அறமகன் செல்வப் பெருக்கைக் காண எனது நெஞ்சம் சிறிதும் பொறுப்ப தில்லை. அவன் தம்பியரைப் பார்க்க என் உள்ளம் வெம்பித் தபிக்கின்றது. அந்தோ! இனி யான் என்னசெய்வேன்! பொறாமையால் அகம் புழுங்கப் புறம் வெளுத்தேனே! அசூயையால் ஆஹாரமும் அருவருத்ததே! அழுக்காற்றால் செயல் அற்றதே! உறக்கமும் அற்றதே! ஒன்றுந் தோன்றவில்லையே! இனி, இந்த உலகத்தில் யான் உயிருடன் வாழவேமாட்டேன். அழுக்காற்றால் அவிவதினும், அக்கினிக்கு இரையாதலே தகுதி" என்று கூறிப் பிரலாபித்து, வாய்

பிளந்து 'ஹா' என்று வெம்மையாகப் பெருமூச்செறிந்தலாயினன். உடனே சகுனி அருமந்த மருகனை மார்புறத் தழுவிக்கூறுவான்:—

"அரசரேறே! இங்ஙனம் தாங்கள் அழுக்காற்றில் அழுந்துவதென்னே? அழுக்காறே துன்பத்திற்கு மூலம் என்று அறியீர்போலும். இனி இத்துர்க்குணத்தை விடுத்தொழிக. அவ்வைவரையும் சூதாட்டத்தில் வென்று அடிமையாக்கித்தருவேன். ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" என்று பலவாறு தேற்றலாயினன். அதனால், அவ்வேந்தன், அழுக்காறாகிய அளக்கமுடியாத ஆழியின் கரையைச் சிறிது கண்ணுறுவதானான்.

வித்தியார்த்திகளே! பொறாமையால் வணங்காமுடி மன்னவனும், பெரியோருக்கிணங்காக் குணக்கேடனாகி, முடிவிற் கிளையுடன் மாண்டொழிந்தனன்; என்றால், அழுக்காறு யாரையே அல்லலில் ஆழ்த்தாதுவிடுவது? ஆதலால், இத்தீக்குணத்தை அறவே ஒழித்தல்வேண்டும். பிறருடைய கல்வி செல்வங்களைக் கண்ணுற்றால்பொறாமைகொள்ளாது, அவ்விருவகையிலும் அவரினும் மேம்படுமாறு முயல்வதே நன்னெறியென்று அறிக.

"அழுக்கா றுடையார்க்கு அதுசாலும்; ஒன்னார்
வழுக்கியுங் கேடீன்பது."

"அழுக்காறெனவொருபாவி, திருச்செற்றுத்
தீயுழி யுய்த்துவிடும்."—திருக்குறள்.

"அஃகஞ் சுருக்கேல்."

இதன்பொருள், தானியத்தை (விற்பனையில்) குறைக்காதே என்பதாம்.

தெய்வத்தின் திருவருளால் ஜீவாதாரமாகிய விளைபொருள்களை மிகவும் பெற்றுள்ள உழவர், அவைகளைக் கொண்டு உயிரோம்புதலன்றி, விலைகூறி விற்றல் அறமன்று. அங்ஙனம் விற்பரேனும், சிறுவிலைகூறலே சிறிது சால்புடைத்து. வணிகர்க்கோ எனின், எட்டிற்குக் கொண்டதை அரைக்கால் கூட்டி, எட்டேஅரைக்காலுக்கு மாற்றலும் கொடுவிலையென ஆன்றோர் அறைவர். இங்ஙனமாக, எட்டிற்குக் கொண்டதைப் பத்துப் பன்னிரண்டு பதினாறின் அளவின்மேலும் விலையறைந்து விற்பார்திறத்துக் கூறலும் உள்ளதோ? தானியங்களைக் குறைவிலைகூறும் நாவும், குறையளவு அளக்குங் கையும் குறைபடும். "அதிக ஆசை அதிகநஷ்டம்" என்பதை இவர்கள் குறித்திலர் போலும். அறிஞர், பெருவிலைகூறி முதலிழக்காது, காணி காணியாக இலாபங்கூட்டிப் பண்டமாற்றிக் கோடிகோடியான லாபத்தை அடைகின்றனர். இவர்செல்வம் இடையறாது பெருகும். இதனால் இவர்கள் இகபரமிரண்டிலும் இன்பத்தையே அடைகின்றனர். அஃகஞ்சுருக்காதவரே நாற்பொருட்பயனையும் ஒருங்கே பெறுபவர் என்க.

## நீதிகதை 1

கமலாசனத்தின்மேல் அகலாது கொலுவீற்றிருந்தருளும் நான்முகக்கடவுளின் அம்சமாய் அவதரித்தவரும், நெடுமால் தம் பேரடிகளால் அளந்தருளிய இப்பூமண்டலத்தைத் தம் குறட்சிறடியால்அளந்தருளியவரும் செந்நாப் போதார் முதலிய சிறப்புப்பெயர் பெற்றவரும், சங்கப்புலவரும் நெஞ்சங் கலங்கிப் பங்கமுறுமாறு சிற்சில வினாக்கள்

தொடுத்திட்டவரும், தெய்வத்தன்மை வாய்ந்த சங்கப்பல கையைப் பொதுநீக்கித் தமது பொதுமறை ஒன்றிற்கே சிறப்பாதனமாகும்படி செய்தவரும், குறிப்புமொழியால் இமையவரது ஐயத்தையும் இனிது நீக்கவல்ல தெய்வப் புலமை வாய்ந்தவரும், இல்லறத்திருந்தே தொல்லறத்தைக் காத்தவருமாகிய திருவள்ளுவநாயனார், தமது மனைவி யோடு மயிலையென்னுந் திருப்பதியில் வாழ்ந்துவருகையில், காலக்கொடுமைபற்றிப் பார்முழுவதும் பசிப்பிணியாற் பரிதவிக்கப் பஞ்சமொன்று பரவலுற்றது.

இங்ஙனம் பஞ்சம் வரவே, சில நாளில் கணக்கிட முடியாச் செல்வமுடையவரும், பாழ்பட்ட பஞ்சைகளாயி னர்; செம்பொன்விலை தாழச் செந்நெல்விலை உயர்ந்தது; நவமணியும் நவதானியமும் நிறையால் ஒத்தன; மக்க ளது மேனியும் வாரிதியின் நீரும் வற்றி வறண்டன; தாய் மக்களையும், மக்கள் பெற்றோரையும், கணவன் காதலியை யும், காதலி கொண்டானையும் கைவிடலாயினர்; "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, - தேனின், கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல்" ஆகிய இப்பத்தும் பறந்துபோயின; கொடையாளர் உள்ளடங்க, லோபிகள் வெளிப்பட்டனர்; அரசரது செங்கோலும் பிறழ்ந்து கொடுங்கோலாய், பிறகு, ஆறலைத்துண்பாருடைய அங்கைத் தண்டமாகி, அப்பால் சவஞ்சுடும் கோலாய்த் தழலில் வேவதாயிற்று; அதனல், வலியோர் மெலியோரை வருத்தலாயினர். பசியின் கொடு மையால் பலர் உண்ணாதவற்றை உண்டனர்; சொல்லாத

வற்றைச் சொல்லினர்; செய்யாதவற்றைச் செய்தனர்; மானத்தாற் சிலர் மாய்ந்தனர்; சிலர் ஓய்ந்தனர்; சிலர் நோயால் வீங்கினர்; சிலர் ஓடெடுக்கச் சிலர் காடடுத்தனர். இங்ஙனமாக நாடு காடாகத்தொடங்கிற்று.

இவ்வாறு கருப்புக்காலம் நாடெல்லாங் கருக்குதலைக் கண்ணுற்ற அருள்வள்ளலாகிய திருவள்ளுவர், வைசிய குலதிலகரும், குபேரசம்பத்தினரும், தமது ஆப்தசிநேகிதருமாகிய ஏலேலசிங்கரை அழைத்து, "இந்தக் கருப்புக் காலம் நீங்கும்வரை உம்மிடத்துள்ள தானியங்களையெல்லாம், கொண்டதிற் குறுணி கூட்டி விற்று, ஏழைகளைப் பிழைப்பிப்பீராக" எனலும், வணிகர், "காலம்நோக்கி லாபங்கோடலை ஒழித்து, கொண்டதிற் குறுணி கூட்டியும் விற்றால், செட்டியார்பாடு தெருவிலும், திண்ணையிலும், தெப்பத்திலுமாக முடிவதன்றி, வேறுகதியுளதாகுமோ? "ஆனமுதலில் அதிகம் செலவானால், மானமழிந்து, மதி கெட்டு,— போனதிசை, எல்லார்க்குங் கள்ளனாய், ஏழ் பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்பதற்கு உதாரணமாவோம்" என்று பெரிதும்மதிமயக்கமுற, செந்நாப்போதார் செப்புவார்:—

"வணிகரே! மதிமயக்கமென்னை? கொண்ட விலையிற் கூட்டி விற்றல் நஷ்டமென்று நினைக்கிறீர்போலும். அஃது உமக்கு ஒருபொழுதும் நேராது. வாணிபமுறையாவது, கால தேச வர்த்தமானங்களை அநுஸரித்து நிகழ்த்துவதன்றி வேறன்று. இப்பொழுதோ பொன்விலை இறக்கம்; நெல்விலை ஏற்றம். கருப்பகன்ற காலத்தில் பொன்விலை ஏற்றமுறும். அப்பொழுது நஷ்டஈடு போக இரட்டைப் பங்கு ஊதியம் உமக்கு ஓங்கும். அன்றியும், இப்பஞ்சக் காலத்தில் இப்படிப்பட்ட உதவி நீர் புரியின், ஜனங்கள்

உம்மைஎப்பொழுதும் மறவார்; கொள்வனவெல்லாம் நும்மிடத்தே கொள்வார். அப்பொழுது வருவாய் ஆற்றுப் பெருக்கினும் அதிகமாகுமென்பதில் ஐயமுண்டோ? ஆகையால், நாம் சொல்லியவண்ணமே செய்க'' என்று உரைத்தருளலும், ஏலேலசிங்கர் அவ்வாறே கொள்விலையில் குறுணி கூட்டி விற்கலாயினர். ஆகவே, ஆயிரக்கணக்கான ஜனங்கள், இரவும்பகலும் ஒய்வொழிவின்றிச் செழிப்புற்றகாலத்திற் பெறுமாறு பெற்று, அவ்வணிகரை வாயார வாழ்த்திச் சென்றனர். இங்ஙனம் பல நாள் ஆகியும், செட்டியார் சேமித்திருந்த செந்நெற்குவை குன்றாது [அக்ஷயமாகவே] இருந்தது. அப்பால் மழை பொழிய, உலகம் தழைத்தது. க்ஷாமம் நீங்க க்ஷேமம் ஓங்கிற்று. நாடு நாடாக, கன்னலும் செந்நெலும் மலிந்து மன்னலாயின. பொன்விலை ஏற்றமுற, நெல்விலை இறக்கமுற்றது. அதனால், ஏலேலசிங்கர் முன்பு பண்டமாற்றிய பொற்காசுகளைத்தாம் விலை இரட்டைக்கு ஈடாகியது. அதுகொண்டு அவ்வணிகர், நெல்லிட்ட களஞ்சியத்திற் பொன்னிட்டுச் சேமித்தார்.

வணிகர் இவ்வாறு தாம் பெற்ற மிதமிஞ்சிய செல்வப் பெருக்குப்பேற்றைத் தம் ஆப்தரும் ஆசிரியருமாகிய நாயனாரிடம் சென்று புகன்று, களிபென்னும் கடலில் ஆழ்ந்துநின்றனர். அதுகண்ட தெய்வப்புலவர், அவ்வைசியரது செல்வச்செருக்கை அடக்கி அவரை நல்வழிப்படுத்தக் கருதி, அவரை நோக்கி, "வைசியகுலாதிபரே! நீர் இன்றுமுதல் பத்தளவிற் கொண்டதை நீர் முன் கூறியபடி எட்டளவில மாற்றுக'' என, அவரும் அப்படியே செய்

தார். இப்படி இலாபமுற விற்றும் பொன்விலையின் ஏற்றத்தால் பெருநஷ்டமடைந்தனர்; அவருடைய பணப்பெட்டிகளிற் சில பாழ்பட்டன. அவர் அதுபொழுது வள்ளுவரிடத்தில் அதனைக்குறித்து விண்ணப்பஞ்செய்ய, அவரும் அவரை நோக்கி, 'இறைத்த கிணறே ஊறும்,' 'வேரில் விட்ட கழுநீர் தலையில் எடுக்கும் இளநீர்', 'வாட்கொல்லனிலும் கதிர்க்கொல்லனே சமர்த்துள்ளவன்', 'காணியாசை கோடி கேடு', "அடங்கொண்ட எல்லாம் அழப்போம்" ஆகிய இவைகளை நன்கு ஆராய்ந்து நடந்துகொள்க" என்று அருளிச்செய்தார்.

முற்றும்.

## சில புஸ்தகங்களைக் குறித்த அபிப்பிராயங்கள்

---

### பிரகலாதாழ்வான் சரிதை

"வேலூர்க் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாசாசாரியர், தமிழில் வசனநடையாக இயற்றிய பிரகலாதாழ்வான் சரிதையென்னும் புஸ்தகம், தெளிந்த இனிய நடையில் எழுதப்பெற்றிருத்தலின், மிக்க இன்பத்தை விளைவிக்கின்றது. இதனுள், ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பெற்றிருக்கும் சிறந்த மேற்கோள்களும் படிப்போருடைய மனதைக் கவர்ந்து இன்புறுத்துமென்று எண்ணுகிறேன். இதனை இயற்றியவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்லபயிற்சியுள்ளவரென்பது இதைப்படிக்கும்போது புலனாகின்றது. வசனநூல்களைப் படிக்க விரும்புவார் இதனை வாங்கிப்படிப்பார்களாயின், இந்நூலாசிரியரால், இதுபோன்ற இன்னும் சிலநூல்களைத் தமிழ்நாடுபெற்று மகிழ்வடையுமென்று நினைக்கிறேன்." — மஹாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.

---

### இடைக்காடர் திருவள்ளுவர் சரித்திரங்கள்

"பண்டைக்காலத்துத் தண்டமிழ்ச்சங்கமருவிய புலவர் பெருமக்களாலும், ஆலவாய் மேய அவிர்சடைக் கடவுளாலும் நன்குமதிக்கப்பெற்ற இப்பெரியாருடைய சரித்திரங்கள், முருகதாஸ் இயற்றிய புலவர்புராணத்தைப் பெரும்பாலும் தழுவி, இனிய தமிழ்நடையில் வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்நடை பயிலும் மாணவர்கட்கு மிகவும் பயன்படத்தக்கது." — செந்தமிழ்.

---

### விவேக சிந்தாமணி

"வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் [illegible] பு. க. ஸ்ரீநிவாசாசாரியரால் தமிழ்கற்கும் மாணவர்களுக்கும் ஏனையோர்க்கும் உபயோகமாகும்படி தெளிவான உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. [illegible] செய்யுட்களைத் தாமே இயற்றி நூலின் முடிவில் சேர்த்திருக்கிறார். [illegible] அச்சிடப்பட்டிருக்கிறது. [illegible] காலேஜுகளிலும் [illegible] மாணவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படக்கூடியது." — [illegible]

---

## சாஸ்திரம்.

| | | |
|---|---|---|
| [illegible] சாஸ்திரம், [illegible] | ரூ. | அ. |
| சாஸ்திரம் ... ... ... | 2 | 0 |
| பகவத்கீதை உரையுடன் ... ... | 1 | 0 |
| தேவிகாலோத்தரம் ... ... ... | 0 | 2 |

## நீதிநூல், கதைநூல்.

| | | |
|---|---|---|
| | ரூ. | அணா |
| அம்பிகாபதிக்கோவை ... ... | 3 | 0 |
| சாணக்கியர்: குறிப்புரையுடன் ... ... | 5 | 0 |
| குமரேசசதகம்: (வாசகமாகத் தேர்ந்தெடுத்த செய்யுள்களின் திரட்டு; அரும்பதவுரையுடன்; இரண்டாம்பதிப்பு) ... ... | 2 | 6 |
| திருவேங்கடசதகம் டி ... | 2 | 0 |
| அறப்பளீசுரசதகம் டி ... | 2 | 0 |
| விவேகசிந்தாமணி: (மூன்றாம்பதிப்பு) ([illegible] அங்கீகரித்தது) ... | 1 | 6 |
| கம்பராமாயண நீதித்திரட்டு ... | 2 | 0 |
| தனிப்பா [illegible] ... ... | 2 | 0 |
| திருக்கச்சித் [illegible] ... | 2 | 0 |
| [illegible] ... ... | 3 | 0 |

Perpetual Calendar, (எக்காலமும் உபயோகிக்கும் காலண்டர்) விலை அணா 5

இவை வேண்டுவோர், [illegible]

பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]

[illegible]